# தருமபுரி மாவட்டக் கருத்தரங்க மலர்



பதிப்பாசியர்

வரலாற்று வித்தகர்

பேரா.ம. இராசசேர தங்கமணி

# தருமபுரி மாவட்டக் கருத்தரங்க மலர்

## (தகடூர் நாட்டுக் கருத்தரங்க மலர்)

பதிப்பாசிரியர்

*வரலாற்று வித்தகர்*

**பேரா.ம. இராச சேகர தங்கமணி**

தலைவர்

கரூர் வரலாற்றுப் பேரவை

கரூர் - 639 001.

அன்பளிப்பு

முதன்மைச் செயலாளர் / ஆணையர்
தொல்லியல் (ம) அருங்காட்சியகத் துறை,
தமிழ்நாடு அரசு.

குல வாணி பதிப்பகம்

9/ 301-ஏ, பாண்டியர் நகர்,

கரூர்-1.

First Edition : DEC'2004.

© Publisher

**DHARMAPURI DISTRICT SEMINAR MALAR**

**(THAGADUR NATTU KARUTHARANGA MALAR)**

EDITOR: Prof.M.Rajasekara Thangamani,

விலை. ரூ.60.00

பக்கம் –
எழுத்துக்கள் – 12 புள்ளிகள்
தாள் – வெள்ளைத்தாள்
அளவு – கிரெளன்

நூல் கிடைக்குமிடம் :

**கொங்கு பதிப்பகம்**
9/301, பாண்டியர் நகர்,
சின்னாண்டான் கோயில், கரூர்–1.
போன் : 04324 – 240958.

வடிவமைப்பு

ஸ்ரீ நிவேதி ஸ்கிரீன் பிரிண்டர்ஸ்
23,ஸ்ரீ கணேஷ் காம்ப்ளக்ஸ்
முதல் தெரு, சுந்தர் நகர்,
திருச்சிராப்பள்ளி–620 021.
போன் – 0431–2710986.

அச்சிட்டோர்

மதராஸ் ஆர்ட் பிரிண்டர்ஸ்,
7, சைடோஜி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை.

# காணிக்கை

தகடூர் நாட்டின் வரலாற்றுச்

செய்திகளை உலகறியச் செய்த

புலவர், தலைமையாசிரியர், தொல்லியல் அறிஞர்.

**அமரர். புது.பொ.வெங்கட்டராமன்**

அவர்களின்

திருவடிகளுக்கு

இந்நூல் காணிக்கை.

# பொருளடக்கம்


1. தகடூர் நாட்டில் தொல்பழங்கால வழிபாடு....... 9
*தி.சுப்ரமணியன்*

2. தகடூர் நாட்டில் லிங்காயத்தும் வீரசைவமும்... 20
*தி.சுப்பிரமணியன்*

3. தகடூர் நாட்டில் கோயில்களின் தோற்றமும் வளர்ச்சியும் ........................................ 33
*ச.செல்வராஜ்*

4. தகடூர் நாட்டில் ஆஞ்சநேயர் வழிபாடு......... 44
*ச.செல்வராஜ்*

5. தகடூர் மாவட்டத்தின் பண்டைய வரலாறு .... 55
*பேரா. ம. இராச சேகர தங்கமணி*

6. தகடூர் நாட்டில் நடுகல் வழிபாடு ................ 64
*ப. காசிலிங்கம்*

7. தகடூர் நாட்டில் பௌத்தமும் சமணமும் ......... 71
*நிசாத்தீன் அகமது*

8. தகடூர் நாட்டில் த்வைத வழிபாடு ................ 77
*வா. இராகவேந்திரன்*

9. தகடூர் நாட்டில் தாச மார்க்கம் .......................... 85
*புது. பொ. வெங்கட்டராமன்*

10. பொன்னேர் கட்டுவது - ஒரு வளமைச்
சடங்கு .................................................. 95
*சோலை. அர்ச்சுனன்*

11. தகடூர் குறும்பர்களின் வழிபாடு .................. 101
*ப. காசிலிங்கம்*

12. அரூர் வட்டத்தில் தாய் தெய்வங்கள் ............ 104
*இரா. சிசுபாலன்*

13. தகடூர் நாட்டில் முனியப்பன் வழிபாடு.......... 114
*மு. மாணிக்கம்*

14. தகடூர் நாட்டு மடாலயங்கள் ......................... 121
*கே.எம். தட்சணாமூர்த்தி*

15. தகடூர் நாட்டில் சக்தி வழிபாடும் காவேரிப்
பட்டிணத்து அங்காளம்மன் பண்டிகையும் .... 129
*மு.கா. நெடுமாறன்*

16. தகடூர் நாட்டுச் சிறு தெய்வ வழிபாட்டில்
அரியக்காள் பெரியக்காள் திருவிழா ............ 139
*சுகவன முருகன்*

# பதிப்புரை

ஏறத்தாழ 12 ஆண்டுகளுக்கு முன்பு தருமபுரி தொல்லியல் துறை, கிருஷ்ணகிரி அருங்காட்சியத்துறை ஆகிய இரு அரசுத்துறைகளும், தகடூர் வரலாற்றுப் பேரவை (பாப்பாரப்பட்டி), தென்னிந்திய வரலாறு மற்றும் பண்பாட்டு ஆய்வு மையத்தின் கிருஷ்ணகிரி கிளை, பெண்ணையாறு தொல் பொருள்சங்கம் காவேரிப்பட்டிணம் கிளை - ஆகிய அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இணைந்து ‘தகடூர் நாட்டுச் சமய நிலை’ எனும் கருத்தரங்கை நடத்தின. அக்கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் பல்லாண்டுகளாக அச்சிடப் பெறாமல் முடங்கிக் கிடந்தன. தற்போது கரூர் அரசு அருங்காட்சியகத்தில் காப்பாட்சியராகப் பணி புரியும் திரு.ப. காசிலிங்கம், இக்கட்டுரைகளை அச்சிட்டால் ஆய்வாளர்களுக்குப் பயன்படும் என்றும் இது வரலாற்றிற்குச் செய்யும் தொண்டு என்றும் கூறி இவற்றை வெளியிட்டு உதவ வேண்டுமென்று என்னிடம் கேட்டுக் கொண்டார். அண்ணாரின் கோரிக்கை நியாயமானது தான் என்பதை உணர்ந்தோம். அடுத்து தொல்லியல் வளம் பெற்ற இம்மாவட்ட ஆய்வுகள் வெளிவந்தால், தமிழக வரலாறு ஒளிபெறும் என்று உணர்ந்தோம். இதன் காரணமாக இக்கட்டுரைகளை வெளியிடும் பணியில் ஈடுபட்டோம். பொருளாதாரச் சிக்கலின் காரணமாக இக்கட்டுரைத் தொகுப்பு காலங் கடந்து வெளியிடப் படுகிறது.

தரமான கட்டுரைகளை அரிதின் முயன்று தயாரித்தளித்த அனைத்து கட்டுரையாளர்களுக்கும் எங்கள் பாராட்டுக்கள்! வாழ்த்துக்கள். இக்கட்டுரையாளர்கள் தொல்லியலில் தேர்ச்சி பெற்றவர்கள், பல

கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரைகளை வெளியிட அனுமதியளித்த கட்டுரையாளர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கருத்தரங்கு நடைபெற்ற காலத்தில் தருமபுரிமாவட்டம் கிருஷ்ணகிரியையும் உள்ளடக்கிய பெரிய மாவட்டமாகத் திகழ்ந்தது. இப்போது கிருஷ்ணகிரி தனி மாவட்டமாகப் பிரிந்து விட்டது. தருமபுரி மாவட்டத்திற்கு உரிய செய்திகளைத் தனியாகப் பிரித்து வெளியிட கால அவகாசம் இல்லை. எனவே இந்நூல் பழைய தருமபுரி மாவட்டக்கருத்தரங்கக் (தகடூர் நாட்டுக் கருத்தரங்க) கட்டுரைத் தொகுப்பாகவே வெளி வருகிறது.

விரைவில் 'தருமபுரி மாவட்டக் கருத்தரங்கம்' 'கிருஷ்ணகிரி மாவட்டக் கருத்தரங்கம்' ஆகியவற்றை தனித்தனியாக நடத்தி அக்கட்டுரைகளையும் வெளியிட்டு ஆய்வாளர்களுக்கு வழங்குவோம் என்று உறுதியளிக்கிறோம்.

எனது இனிய நண்பரும், வாழ்நாள் முழுவதும், இரவென்றும், பகலென்றும் பாராது, பணச் செலவையும் பொருட்படுத்தாது, மறைந்து கிடந்த தகடூர் நாட்டின் தொல்லியல், வரலாற்றுச் செய்திகளை ஆய்ந்து அவற்றை, ஆராய்ச்சி உலகிற்கு அளித்த, தொல்லியல் அறிஞர், அமரர்.புது.பொ.வெங்கட்டராமன் அவர்கட்குக் இந்நூலைக் காணிக்கையாக்குவதில் மகிழ்கிறேன்.

*— பதிப்பகத்தார்*

# தகடூர் நாட்டில் தொல்பழங்கால வழிபாடு

தி.சுப்ரமணியன்,
*காப்பாட்சியர்*
*தொல் பொருள் ஆய்வுத் துறை*
தருமபுரி.

ஆதிச் சமுதாயம் தோன்றிய காலத்தில் இயற்கையின் சீற்றங்களைக் கண்டு அஞ்சினர். இதை வணங்கினால் சீற்றம் குறையும் என்று நம்பி வழிபட்டனர். சடங்குகளும் செய்யப்பட்டன. இத்தகைய சடங்குகளும் வழிபாட்டு முறைகளும் வளர்ந்து தெய்வீகத் தன்மை பெற்றன. இவையே பஞ்சபூத வழிபாடு மலர வித்தாக அமைந்தன. இத்தகைய வழிபாடு உலகிலுள்ள பல நாடுகளில் காணப்படுகின்றன. தகடூர் நாட்டில் தொல் பழங்கால வழிபாடு எவ்வாறு இருந்தது என்பதையும் அதன் மிச்சங்கள் எங்கெங்கு கிடைக்கின்றன, என்பதையும் இக்கட்டுரையில் காண்போம்.

தகடூர் நாட்டில் தொல் பழங்காலம் தொட்டு மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கிடைக்கின்றன. பழைய கற்காலம், புதிய கற்காலம், பெருங்கற்காலம் ஆகிய காலங்களைச் சார்ந்த மக்கள் இங்கு வாழ்ந்துள்ளனர். சுமார் 50,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து வாழ்ந்த

பழைய கற்கால மக்கள் மலைகளிலும் காடுகளிலும், மிருகங்களுடன் மிருகங்களாக வாழ்ந்தனர். இதனால் இவர்களுடைய வழிபாடு எவ்வாறு இருந்தது என்பதை தெரிந்து கொள்ள, இப்பகுதியில் போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை.

*புதிய கற்காலம்*

புதிய கற்கால மக்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தனர். புதிய கற்காலம் மறுமலர்ச்சிக் காலமாக இருந்தது. இவர்களும் இயற்கையை வணங்கினர். எனவே, தீ, காற்று, மழை, சூரியன் போன்றவைகளை வணங்கினர். நாடோடி வாழ்க்கை முறையைக் கொண்ட இவர்கள் வேட்டையாடும் தொழிலுடன் கால் நடைகளை வளர்க்கவும் முற்பட்டனர். கால் நடைகளே இவர்களுடைய சொத்தாக மாறியதால் அதற்கு நோய் வராமல் இருக்க தீ வழிபாட்டைச் செய்தனர். இத்தகைய தீ வழிபாடு தருமபுரி பகுதியில் மட்டுமன்றி இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களிலும் காணப்படுகின்றன. கால்நடை வளர்ப்பு சமுதாயத்தைச் சார்ந்த இவர்கள் புல்வெளிகள் உள்ள பகுதிகளில் வாழ்ந்தனர். ஒரு இடத்தில் புல்வெளி தீர்ந்துவிட்டால், வேறு புல்வெளிகளுக்குக் குடிபெயர்ந்தனர். அவ்வாறு குடிபெயர்ந்து போகும்போது அங்குள்ள மாட்டுச் சாணத்தில் தீ வைத்தனர். இந்த தீயின் மேல் கால்

நடைகளை ஓடவிட்டனர். இவ்வாறு தீயின் மேல் ஓடவிடுவதால் கால்நடைகளுக்கு நோய்கள் வராது என்றும், கால்நடைகளிடையே இனவிருத்தி அதிகரிக்கும் என்றும் நம்பினர். இவ்வாறு ஏற்பட்டவையே ‘சாம்பல் மேடு’ என்று பெயர்பெற்றன. கர்நாடக மாநிலத்தில் உள்ள சாம்பல்மேடுகளை அகழ்வாய்வு செய்த தொல்லியல் ஆய்வாளர்கள் இந்த சடங்குகளை வெளிக்கொண்டு வந்துள்ளனர்.

*பொங்கல்*

தகடூர் நாட்டிலும் தீ வழிபாடு காணப்படுகின்றது. தமிழர் திருநாள் என்று அழைக்கப்படுகின்ற மாட்டுப் பொங்கல் இதை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. இப்பகுதியில் நடைபெறுகின்ற பொங்கல் மற்ற பகுதிகளில் உள்ள சடங்கு முறைகளிலிருந்து மாறுபட்டுள்ளது. கால்நடைகளின் வளமை தொடர்பாக நடைபெற்ற சடங்காக இருந்த காரணத்தினால், இத்திருநாள் மாட்டுப் பொங்கல் என்று பெயர் பெற்றது. மாட்டுப்பொங்கல் அன்று கால்நடைகளை நீராட்டி மஞ்சள், குங்குமம் போன்றவை வைத்து அலங்கரித்துப் பட்டிகளில் அடைப்பர். பின்னர் பட்டியின் முன் தீயிடுவர். ‘கால் நடைகள் பொலிக’ என்று கூறி கால்நடைகளை அந்த தீயின் மேல் ஓடவிடுவார்கள். இவ்வாறு தீ மிதித்து ஓடினால், கால் நடைகளுக்கு நோய்

வராது என்றும் இனவிருத்தி அதிக அளவில் ஏற்படும் என்றும் நம்புகின்றனர். இத்தகைய விழா தருமபுரி, வடஆற்காடு ஆகிய பகுதிகளில் மட்டும் காணப் படுகின்றன. மற்றப் பகுதிகளில் இதைப் போன்று இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, கால்நடை வளர்ப்புச் சமுதாயத்தில் தொடங்கிய தீ வழிபாடு, பல மாறுதலுக்குப் பின்னர் பொங்கல் என்ற பெயரில் இன்றும் காணப்படுகின்றது. இதன் அடுத்த நிலையாக சன்னியாசிகல் என்ற முறையும், இதன் அடிப்படையாக இப்பகுதியில் உள்ளது. இதுவும் கால்நடைகளை நோய் வராமல் தடுக்க வந்த சடங்கு முறைகளில் ஒன்று.

### *பெருங்கற்காலம்*

பெருங்கற்கால மக்கள் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் தகடூர் நாட்டில் வாழ்ந்துள்ளனர். இனக்குழு முறையை உடையவர்களாக இருந்தாலும், புதிய கற்கால மக்களைவிட வளர்ச்சியடைந்த சமுதாயத்திற்குச் சொந்தக்காரர்கள். இக்காலத்தை நாகரீக காலமாக ஆய்வாளர்கள் ஒப்புக் கொள்கின்றனர். இக் காலத்தில் கால்நடைகளை வளர்த்தல், மேட்டு நில பயிர்த் தொழில் செய்தல் போன்றவைகளும் இருந்தன. இறந்தவர்களை புதைக்கும் வழக்கம், இந்த இனக்குழுச் சமுதாயத்தில் காணப்படுகின்றது. தம்முடைய கூட்டத்தைச் சார்ந்த

ஒருவர் இறந்தால் அவர் மீண்டும் நம்முடன் வந்து பிறப்பார் என்று நம்பினர். இறந்தவர்களின் ஆவி அக்கூட்டத்தையும், புதைக்கும் ஈமச்சின்னத்தையும் சுற்றிக்கொண்டு இருக்கும் என்று நம்பினர். எனவே, ஆவி ஈமச்சின்னத்தில் வந்து குடியிருக்கவும், வெளியில் செல்லவும் ஏதுவாக துவாரம் ஒன்றை இட்டுள்ளனர். இதைத் தொல்லியல் ஆய்வாளர்கள் 'இடுதுளை' என்று கூறுகின்றனர். எனவே, அவர்கள் பயன்படுத்திய பொருட்களை ஈமச்சின்னங்களில் வைத்து புதைப்பர். இரும்பு பொருட்கள், பானைகள், மணிகள் போன்ற பொருட்கள் இந்த சடங்கின் பொருட்டு ஈமச்சின்னங்களில் வைக்கப்பட்டன. பல ஈமச்சின்னங்களில் இவை கிடைத்துள்ளன.

இறந்தவர்களின் ஆவி மரம், செடி, கொடி, மிருகங்கள் போன்றவற்றில் இருக்கும் என்று நம்பினர். இவ்வாறு மூதாதையர்கள் இருப்பதாகக் கருதுகின்ற மரம், விலங்கு போன்றவை எதுவாக இருப்பினும் அதை தெய்வீகமாக எண்ணினர். இதையே குலக்குறியாகக் கொண்டனர். 'குலக்குறி' என்பது ஒவ்வொரு குலத்திற்கும் அல்லது கூட்டத்திற்கும் ஒவ்வொன்று உள்ளது. இதை சங்க இலக்கியம் கொண்டு பார்ப்போம். அதியமான் ஏழரசர்களை வென்றான்; அவர்களின் குலக்குறிகளைச் சேர்த்து இலாஞ்சனையாக அமைத்துக்

கொண்டான் என்று புறநானூறு கூறுகின்றது. ஏழு குலக்குறிகளாவன: 'பன்றி, கலப்பை, மான், சிங்கம், வீணை, வில், மீன் போன்றன' என்று விளக்கியுள்ளனர். தற்போதும் கல்லாவிக்கு அருகிலுள்ள ஒரு சாதியினர் வேப்பமரத்தை தங்களுடைய குலக்குறியாகக் கொண்டுள்ளனர். இவர்கள் இந்த மரத்தை வெட்டுவதில்லை. இதிலிருந்து கிடைக்கின்ற எந்த பொருளையும் பயன்படுத்துவதில்லை. கொங்கு நாட்டில் சுமார். 150-க்கும் மேற்பட்ட குலக்குறிகள் இருப்பது தெரியவந்துள்ளன. இங்கு குலக்குறி வழிபாடு இருந்தது என்பதையும் அறிய முடிகின்றது.

மனிதர்களின் ஆவி அழிவதில்லை. பூதஉடல் மட்டும் அழியக்கூடியது. அதாவது 'மானிடர் ஆன்மா மறுபடியும் பிறந்திருக்கும்' என்ற பிற்காலத் தத்துவம் பெருங்கற்கால மக்களின் வாழ்க்கையில் நம்பிக்கையாக இருந்தது. இத்தகைய ஆன்மாவை, சடங்குகளாலும் நம்பிக்கைகளாலும் கட்டுப்படுத்த முடியும் என்று எண்ணினர். இக்கருத்தே கீதையில் உபதேசமாக மகாபாரதத்தில் காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### *தாய்த் தெய்வ வழிபாடு*

இப்பகுதியில் கிடைக்கின்ற பெருங்கற்காலச் சின்னங்களில் பெண் உருவ சுடுமன் பொம்மைகள்

கிடைத்துள்ளன. இவை தாய்த் தெய்வ வழிபாட்டில் சுவடுகள் என்று தொல்லியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

வேட்டையாடி உணவை சேகரித்த சமுதாயத்தில் வேட்டையாட கூட்டத்தின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டியிருந்தது. கூட்டம் அதிகம் இருந்தால், பல மிருகங்களை எளிதில் வேட்டையாட முடியும். எனவே, கூட்டத்தில் இனவிருத்தியைப் பெண்கள் செய்தனர். பெண்கள் குழந்தையை பெற்றெடுத்து வளர்த்தனர். இந்த சமுதாயத்தின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் பெண்களை நம்பியே இருந்தது. எனவே பெண் கூட்டத்தின் தலைவியாகவும் மாறினாள். இதன் அடிப்படையில் தாய் வழி சமுதாயம் மலர்ந்தது. பிறப்பின் இரகசியத்தை அறியாத இவர்கள், இறந்தவர்கள் மீண்டும் பிறந்த இடத்தைச் சென்று அடைகின்றனர் என்ற நம்பிக்கையின் பெயரில் ஈமச் சின்னங்களில் பெண் தெய்வங்களின் சுடுமண் பொம்மைகளை வைத்தனர் என்று மானிடவியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த வளமையின் அடிப்படையில் பெண்கள் தெய்வீகத் தன்மையை பெற்றனர். தாய்த் தெய்வமாகவும் வழிபட்டனர். தாய் வழி சமுதாயம் மாறி தந்தை வழி சமுதாயம் மலர்ந்த போது பெண்களின் முக்கியத்துவம் குறைந்தது. ஆண்களின் துணை இன்றி பெண்கள்

இருக்க முடியாது என்ற நிலையை உணர்ந்த காலத்தில் ஆண்களுக்குப் பெண்கள் துணையாக மாறினர். பெண் தெய்வங்களும் ஆண் தெய்வங்களுக்கு உட்படுத்தப்பட்டன. மணியம்பாடி, கடத்தூர் பகுதிகளில் உள்ள ஈமச்சின்னங்களில் பெண் உருவங்கள் கிடைத்துள்ளன.

### தொல் பழங்கால ஓவியங்கள்

இப்பகுதியில் இரண்டு வகையான ஓவியங்கள் கிடைக்கின்றன. ஒன்று மலையிலுள்ள குகைப் போன்ற அமைப்புடைய பாறைகளில் வரையப்பட்டவை. மற்றொன்று பெருங்கற்கால கற்பதுக்கைகளில் வரையப்பட்டவை. இவை இரண்டும் சிவப்பு, வெள்ளை வண்ணங்களில் காணப்படுகின்றன. இந்த ஓவியங்கள் சடங்காகவும் நம்பிக்கையின் வடிவமாகவும் தீட்டப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

மைலாடும்பாறை என்ற இடத்திலுள்ள ஓவியத்தில் ஆறு மனித உருவங்கள் இரண்டு மிருகங்களைச் சுற்றிக் காணப்படுகின்றன. இந்த உருவங்களின் கைகள் உயர்த்திய நிலையில் உள்ளன. இவர்கள் மிருகங்களை விரட்டுகின்ற நிலையில் காணப்படுகின்றன. இதை அடுத்துள்ள ஓவியத்தில் மிருகம் ஒன்றைக் குத்துவது போன்ற ஓவியம் உள்ளது. பலர் இதை அருகில் நின்று பார்ப்பது போன்ற அமைப்பில் வரையப்பட்டுள்ளன.

எனவே இந்த இரண்டு வகையான ஓவியங்கள் வேட்டைக்கு முன் உள்ள நிலையையும், வேட்டையாடும் நிலைமையும் விளக்குகின்ற வகையில் அமைந்துள்ளன என்று கூறலாம்.

இனக்குழு மக்கள் வேட்டைக்குச் செல்லும் முன்பு ‘விலங்கு நடனம்’ ஆடிவிட்டுச் சென்றனர். இவ்வாறு ஆடிவிட்டு சென்றால் வேட்டையில் நல்ல பலன் கிடைக்கும் என்று நம்பினர். இதையே ஓவியமாகப் பாறையில் தீட்டியுள்ளனர். இதையே ‘ஒத்தமந்திரம்’ என்று அழைக்கின்றனர். வேட்டையை ஓவியமாகத் தீட்டினால், மிருகங்கள் எளிதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இந்த ஓவியங்கள் வரையப் பட்டுள்ளன.

ஓரமணகுண்டாவிலுள்ள ஓவியம் ஈமச்சடங்கைக் காட்டுவதாக அமைந்துள்ளது. ஏழு மனிதர்களும் இரண்டு மிருகங்களும் பரவலாகக் காணப்படுகின்றன. இவர்களுக்கு அருகில் சில புள்ளிகள் இட்டு காட்டப்பட்டுள்ளன. முதல் புள்ளிகள் வட்ட வடிவத்தில் உள்ளன. இந்த வட்டத்தின் உட்பகுதியில் செவ்வக வடிவில் புள்ளிகள் உள்ளன. இந்த அமைப்புமுறை கல்வட்ட வகையைச் சார்ந்த ஈமச்சின்னத்தைக் குறிப்பிடுவதாகத் தெரிகின்றது. வட்டம், கல்வட்டத்தையும், செவ்வகம் அதன் உட்பகுதியிலுள்ள பெட்டி போன்ற அமைப்பையும் கூறுவதாகக்

கொள்ளலாம். இவை மண்ணின் உட்பகுதியில் இருப்பதால் புள்ளிகளில் காட்டியுள்ளனர் போலும்! ஈமச்சின்னம் எடுக்கும் முறையை ஓவியமாகத் தீட்டியுள்ளனர் என்று எடுத்துக் கொள்ளலாம்.

மயிலாடும்பாறை, மகாராஜாகடை ஆகிய இரண்டு இடங்களில் பால் உணர்வைத் தூண்டும் ஓவியங்கள் உள்ளன. தொல் பழங்காலத்தில் தீட்டப்பட்ட ஓவியங்கள் நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்தவை. இவையே தெய்வீகத் தன்மை பெற்றன. இத்தகைய இடங்களில் பால் உணர்வை தூண்டும் ஓவியங்கள் வரையப் பட்டுள்ளன. இன்றும் பலகோயில்களிலும், கோபுரங்களிலும் பால் உணர்வை தூண்டும் சிற்பங்கள் உள்ளன. தெய்வீகத் தன்மை வாய்ந்த கோயில்களில் பால் உணர்வைத் தூண்டும் சிற்பங்கள் வைக்க வேண்டும் என்று சிற்ப நூல்கள் கூறுகின்றன. தொல் பழங்காலத்தில் சடங்குகளின் மித்தமும் வழிபாட்டில் நிமித்தமும் பால் உணர்வு ஓவியங்கள் தீட்டப்பட்டன. இவை வளமைச் சடங்கின் வித்துக்கள். அதன் எச்சங்களே கோயில்களில் உள்ள காமச்சிற்பங்கள்.

மேலே குறிப்பிட்ட ஓவியங்களுடன் சண்டை செய்யும் காட்சிகள், மரம், செடி, மிருகங்கள், சூரியன் போன்ற ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. எனவே,

இனக்குழுச் சமுதாயத்தில் சடங்கே வாழ்க்கையாகவும். வாழ்க்கையே சடங்காகவும் அமைந்தன என்று கூறலாம்.


1. பேராசிரியர் கா. சுப்பிரமணியன், 'சங்க கால சமுதாயம்' நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
2. நா. வானமாமலை, 'கலைகளின் தோற்றம்', ஆராய்ச்சி 1971.
3. **Depiprasad Chattapadhayaya, 'Lokayata' people's publishing House - 1981.**
4. **Herbest Kuhn, 'On the track of Prehistoric Man' Arrow books London - 1958.**
5. **Gordon Childe, - 'What happened in History' Penquin Books England - 1954.**

# தகடூர் நாட்டில் லிங்காயத்தும் வீரசைவமும்

**தி.சுப்பிரமணியன்,**
*காப்பாட்சியர்,*
*தொல்பொருள் ஆய்வுத்துறை,*
தருமபுரி.

தக்காணத்தில் கிறித்து சகாப்தத்திற்கு முன்பிருந்து சமணமும், பௌத்தமும் வலுவான இடத்தைப் பிடித்திருந்தன. தென்னிந்தியாவில் சாளுக்கியர்களும் மற்ற அரச வமிசத்தினரும் சமணம், பௌத்தம் ஆகிய இரண்டு மதங்களையும் வளர்த்தனர், இவை அரசர்களின் மதமாக மாறிய காரணத்தினால் மக்களும் இதைப் பின்பற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இத்தகைய வளர்ச்சியினால் இந்துமதம் பலசோதனைகளுககு உட்படுத்தப்பட்டது. இத்தகைய நிலையை மாற்றி, மற்ற மதங்களின் வளர்ச்சியைத் தடுத்து, இந்து மதத்தை வளர்க்க, பல பக்தி இயக்கங்கள் எழுந்தன. இவையே பக்திமார்க்கங்களில் ஒன்றான லிங்காயத்துப்பிரிவு. இந்த லிங்காயத்து பிரிவைச் சார்ந்த மடங்கள்சில தகடூர் நாட்டில் இருந்ததற்கான தடயங்கள் கிடக்கின்றன, இக்கட்டுரையில் இந்த பிரிவு எவ்வாறு தோன்றி இப்பகுதியை அடைந்தது என்பதைக் காண்போம்.

மைசூர் பகுதியிலும் சமணமும், பௌத்தமும் பரவின. இந்து மதத்தில் இருந்தசில கோட்பாடுகள் சமுதாயத்தில் பிளவுகளை ஏற்படுத்தியது. இத்தகைய பிளவுகளைப் பயன்படுத்திக் கொண்டு, இந்த இரண்டு சமயங்களும் அதிவேகமாகப் பரவின. ஆனால் கி.பி.8-ஆம் நூற்றாண்டு வாக்கில் இவை ஒடுக்கப்பட்டு, இந்துமதம் வெளியில் கொண்டு வரப்பட்டது. இருப்பினும், இவை போட்டி போட்டுக்கொண்டு வளர்ந்தன, இத்தகைய சமூக சூழ்நிலையில் 'பசவர்' என்ற சைவர் தோன்றி, சைவ சமயத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். பசவர் கர்நாடகத்தைச் சார்ந்தவர். சைவத்திலிருந்த சில கோட்பாடுகளை விடுத்து, புதிய கோட்பாடுகளுடன் புதிய பிரிவு ஒன்றை ஏற்படுத்தினார். இந்த பிரிவுதான் லிங்காயத்து பிரிவு அல்லது 'வீர சைவம்' எனப்பட்டது.

*பசவர்*

லிங்காயத்துப் பிரிவைப் பற்றி மூன்று புராணங்கள் பேசுகின்றன. சிவபுராணம், பசவபுராணம், சென்ன பசவபுராணம் போன்றவை இந்த பிரிவு எவ்வாறு தோன்றியது என்பதைக் கூறுகின்றன. மேலும் சில கல்வெட்டுக்களும் இந்த பிரிவின் செயல்பாடுகள் பற்றியும், கோட்பாடுகள் பற்றியும் அறிய உதவுகின்றன, பசவ புராணம், பசவர் சிவப் பெருமானின் வாகனமாகிய

நந்தியின் அவதாரம் என்றும், சமண சமயத்தை அழிக்கத் தோன்றியவர் என்றும் கூறுகின்றது. மேலைச் சாளுக்கிய மன்னன் நான்காம் சோமேஸ்வரனின் கல்வெட்டு ஒன்று தார்வார் மாவட்டத்தில் அப்லூர் என்ற இடத்தில் உள்ளது. இக்கல்வெட்டு கி.பி.12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இக்கல்வெட்டு'சமண பௌத்த சமயங்களின் வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவே பசவர் அவதாரம்எடுத்தார்' என்று கூறுகின்றது.

பசவருக்கு இந்த சமயக்கருத்துக்களைப் பரப்ப உதவியவர்கள் ராமையா என்பவரும் சென்ன பசவர் என்பவரும் ஆவர். சைவத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பசவர் ஐரோப்பாவில் கி.ப.16-ஆம் நூற்றாண்டில் மத மறுமலர்ச்சியை ஏற்படுத்திய லூதருடன் ஒப்பிடப்படுகின்றார்.

*சமய தத்துவங்கள்*

சிவனுடைய வாயிலிருந்து, ஐந்து ஆச்சாரியர்கள் பூ உலகில் பிறந்தனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கோத்தரம் இருந்தது. இவர்கள் இந்தியாவில் ஐந்து ஸ்தலங்களில் இருந்து லிங்காயத்து பிரிவின்படி உபதேசங்கள்செய்தனர். அந்த ஐந்துஊர்கள் ஸ்ரீசைலம், கொல்லிப்பாகை, உஜ்ஜைனி, காசி, பலஅள்ளி என்று 'பரமரகசியா' என்ற சமஸ்கிருத நூல் ஒன்று கூறுகின்றது. சிவபெருமானுக்குரிய ஐந்துமுகங்கள், ஐந்து இடங்களில்

இருந்தன என்றும், இத்தகைய பஞ்சலிங்கத்தை வழிபடுவது இப்பிரிவின் செயல் மூன்றும் மற்றொரு மரபுவழிச் செய்தி கூறுகின்றது. இப்பிரிவின் கொள்கைகளாவன:-

1. பிறப்பால் அனைவரும் சமம். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பாகுபாடு இல்லை.

2. சிவனே முழுமுதற் கடவுள்.

3. சிவனை வழிபட, கால்நடைகளைப் பலியிட வேண்டிய தேவையில்லை.

4. வேதத்தை எதிர்க்கவில்லை.

5. எல்லா சாதியினரும் லிங்காயத்துப் பிரிவில் சேரலாம்; இதற்கு மூன்று நாள் சடங்கின் பின் மாறலாம்.

6. லிங்கம் எப்பொழுதும் தன் உடலுடன் இருக்க வேண்டும். இதைத் தனியாகப் பிரிக்கக்கூடாது. லிங்காயத்து பிரிவில் சேர செய்யப்படுகின்ற சடங்குகளைப் பார்ப்போம்.

முதல் நான்கு பிரிவில் சேர விரும்புவர்களின் முகம், தலை முதலியவற்றை மொட்டை அடித்து மாட்டு கோமியத்தில் நீராட வேண்டும். அன்று எந்தவிதமானஉணவும் உண்ணக் கூடாது. இரண்டாவது நாள், இப்பிரிவில் மதகுருவாகிய ஜங்கமர்களின்

கால்களைக் கழுவிய தண்ணீரில் குளிக்க வேண்டும். அன்று பால் சர்க்கரை போன்றவைகளை உண்ணலாம். மூன்றாம் நாள் மூலிகை, பால், நெய், தயிர், தேன் போன்றவைகளைசேர்த்து தயாரித்தகலவையை தேய்த்து குளிக்க வேண்டும். பின்னர், ஜங்கமர் கால் கழுவிய தண்ணீரைத் தீர்த்தமாக உண்ண வேண்டும். இதை அடுத்து ஜங்கமர் தன்னுடைய கையால் லிங்கத்தைக் கட்டி விடுவார். இதன் பின்னர் மற்ற லிங்காயத்துக்களுடன் சமமாக அமர்ந்து உண்ணலாம். பெண்களுக்கும் இந்த சடங்குகள் இன்றியமையாதது. ஆனால் மொட்டையடிப்பதில்லை. லிங்காயத்துகள் என்றால், லிங்கத்தைத் தன் உடலின் ஒரு அங்கமாக கொண்டிருப்பவர்கள் என்று பொருள்படுகின்றது.

பசவர் உயிர் நீத்தபின் இப்பிரிவு மிக வேகமாக வளர்ந்தது. இவர்கள் தங்களை 'வீர சைவர்கள்' என்னு மாற்றிக் கொண்டனர். பிற்காலத்தில் வீர சைவத்தில் பல உட்பிரிவுகள் தோன்றின. இதிலும் வீர சைவர் பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர் போன்ற துணைப் பிரிவுகள் வந்தன. இத்தகைய நிலை வந்தபோது லிங்காயத்து பழமைவாதிகள் வேதனை அடைந்தனர். 1904-ல் தார்வாரில் வீர சைவர்களின் முதல் மாகசபை கூடியது. இதில் எல்லா விதமான

திருத்தங்களும் செய்யப்பட்டு இந்து மதத்தில் பழையக் கோட்பாடுகள் மீண்டும் வழக்கத்திற்கு வந்தன.

எளிமையாக்கப்பட்ட இந்தப் பிரிவில் எல்லா சாதியினரும் மதபேதமின்றி சேர்ந்தனர். வியாபாரிகள் அதிக அளவில் இருந்தனர். வியாபாரிகள் தமிழகத்துடன் அதிக வியாபாரத் தொடர்பு இருந்த காரணத்தால் தமிழகத்திலும் பரவலானது. முகமதியர்கள் தக்காணத்தைப் பிடித்ததால் இத்தகைய பிரிவைச் சார்ந்தவர் தமிழகத்திற்குக் குடிபெயர்ந்தனர். மேலும் விஜய நகர மன்னர் மற்றும் நாயக்கர்களின் காலத்தில் தார்வார் பகுதியிலிருந்து பல கைவினைஞர்கள் தமிழகத்திற்குக் கொண்டு வந்து குடியமர்த்தப்பட்டனர். இக்காரணங்களாலும் கர்நாடகத்தின் எல்லைப் பகுதியில் தகடூர் நாடு அமைந்திருக்கின்ற காரணத்தினாலும் இப்பகுதியில் லிங்காயத்துப் பிரிவு மடங்கள் ஏற்பட்டன.

### *கல்லாவி விரக்த மடம்*

லிங்காயத்து மதகுருக்கள் ‘ஜங்கமர்’ என்ற பெயர் பெற்றனர். இவர்கள் இப்பிரிவின் குருக்களாக இருந்தனர். இவர்களின் கட்டுப்பாட்டில் ‘முர்கிமடம்’ என்ற சிறிய மடம் இருந்தது. இதையடுத்த மடம் விரக்த மடம் எனப்பட்டது. ஒவ்வொரு ஊரிலும் (லிங்காயத்து ஊர்கள்) விரக்தமடம் இருந்தது. இந்த மடத்தில் பிரிவு ஒன்று கல்லாவியில் ஏற்படுத்தப்பட்டது. இந்தமடம்

ஊருக்கு வெளியில் ஏற்படுத்தப்பட்டது. இதில் இருந்தவர்கள் 'நிரபாரிஸ்' அல்லது 'ஜங்கமர்' என்று அழைக்கப்பட்டனர். ஜங்கமார்கள் சுவாமிகள் என்றும் அழைக்கப்ட்டனர். இவர்கள் மற்ற குருக்களைப் போன்று சமய காரியங்களில் பங்கு கொள்வதில்லை. இவர்கள் தங்களுடைய வாழ்நாளில் பாதியை சீடர்களுக்குத் தத்துவபோதனை செய்வதிலும், மறுபாதியை தியானத்தில் இருப்பதிலும் செலவிடுகின்றனர். இவர்களால் மடத்திலுள்ளவர்களும், மற்றவர்களும் அறிவையும் தத்துவங்களையும் பெற்றவர். இவர்கள் சன்னியாசி வாழ்க்கை நடத்தினர். ஊருக்கு வெளியில் உள்ள மடங்களைத் தவிர மற்ற இடங்களுக்கு இவர்கள் செல்வதில்லை.

இந்த மடத்தின் பிரிவு ஒன்று கல்லாவி ஊருக்கு வெளியில் உள்ள கோட்டத்தில் பர்வதமுடையார் என்பவர் ஏற்படுத்தினார் என்று கல்வெட்டு கூறுகின்றது. இக்கல்வெட்டின் மேல்பகுதியில் லிங்கம் மங்களச் சின்னமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கன்னடமொழியில் காணப்படுகின்றது. இம்மடம் கரிபசவப்பர் என்ற ஜங்கமரின் பெயரில் உண்டாக்கப்பட்டது. எனவே, கரிபசவப்பர் என்பவர் ஜங்கமர் பிரிவை சார்ந்தவர் என்பதும், அவரால் இங்கு

சமயம் தொடர்பான போதனைகள் செய்யப்பட்டிருக்கின்றது என்பதும், இந்த மடத்தில் லிங்காயத்து சீடர்கள் இருந்தனர் என்பதும் தெரியவருகின்றன. கல்லாவி சோழர் காலம் தொட்டு சிறப்புற்ற ஊராக இருந்த காரணத்தினால் இங்கு லிங்காயத்துப் பிரிவைச் சார்ந்த ஜங்கமர்கள் தங்கள் கோட்பாடுகளை இப்பகுதியில் பரப்பி உள்ளனர் என்பது தெளிவாகின்றது.

*பெரிய மடம்*

இவர்களின் ஐந்து புண்ணிய தளங்களில் பெல்லாரிக்கு அருகிலுள்ள உஜ்ஜைனி குறிப்பிடத்தக்கது. ஐந்து தளங்களில் உள்ள குருக்கள் 'சிம்மாசனாதிபதிகள்' என்று பெயர்பெற்றனர். இதைவிட சற்று சிறிய மடங்கள் 'பட்டாடஸ்வாசிகள்' என்றும், அதனை அடுத்த கிளை மடங்களில் உள்ள குருக்கள் 'குருஸ்தலா' என்றும் பிரிக்கப்பட்டிருந்தனர். ஓசூருக்கு அருகில் உள்ள கும்மளாபுரம் என்ற ஊரில் லிங்காயத்து மடம் ஒன்றுள்ளது. இந்தமடம் பெரியமடம் என்று பெயர் கூறப்படுகின்றது. இங்கு இன்றும் குரு ஒருவர் உள்ளார்.

கும்மளாபுரத்தில் 101 கோயில்கள், 101 குளங்கள் 101 குகைகள் இருந்ததாகக் கூறுகின்றனர். இந்த 101 என்ற எண்ணிக்கை மங்கள எண்ணாக இருந்தாலும், தருமபுரி மாவட்டத்தில் அதிகமாக கோயில்களை உடைய

ஊர் என்ற பெருமையைப் பெறுகின்றது. இக்கோயில்களில் குறிப்பிடத்தக்கது வீரபத்திரர் கோயில். இக்கோயிலை லிங்காயத்து பிரிவினர் வழிபடுகின்றனர். இவர்கள் லிங்கத்துடன் வீரபத்திர சாமியை வழிபடுவது வழக்கம். இந்தஊரில் 770 லிங்காயத்து குருக்கள் இருந்ததாகத் தெரிய வருகின்றது. குருகுல வாழ்க்கையை போன்ற நடைமுறைகளைக் கொண்ட இவர்கள், ஊருக்கு வெளியில் இருந்த மடங்களில் தங்கி இருந்தனர். இதிலிருந்த குருக்கள் தருமபுரி மாவட்டத்தின் பல பகுதிகளில் சமயக் கொள்கைகளைப் பரப்பினர்.

கர்நாடகப் பகுதியில் இருந்த வியாபாரிகள் இந்த பிரிவில் சேர்ந்தார்கள். சைவ கோட்பாடுகளை எதிர்த்த எல்லோரும் லிங்காயத்துப் பிரிவில் இணைந்தார்கள். அதிக அளவில் இருந்த வியாபாரிகள் தமிழகத்தின் பல பகுதிகளில் குடிபெயர்ந்து, லிங்காயத்துப் பிரிவை பலப்படுத்தினர். தருமபுரி மாவட்டத்தில் பழைய ஊர்கள் உள்ள எல்லா பகுதிகளிலும் லிங்காயத்துப் பிரிவினர் இன்றும் உள்ளனர். இவர்கள் ஓசூர், கிருட்டிணகிரி வட்டங்களில் அதிக அளவில் காணப்படுகின்றனர்.

### *நந்தி வழிபாடு*

சமண சமயத்தை ஒடுக்கத் தோன்றிய வீரசைவம் சமண சமயத்தில் இருந்த பல நல்ல கோட்பாடுகளையும்,

சைவத்தில் இருந்த கோட்பாடுகளையும் இணைத்து, புதிய பிரிவை பசவர் உருவாக்கினார். சமணம், சாதி பாகுபாடு, பலியிடுதல் போன்றவைகளை எதிர்த்தது. கால்நடை சமுதாயம் இருந்த பகுதியில் சமணத்தைப் பரப்ப முற்பட்டனர். இதனால், குன்றுகளிலும், மலையடிவாரத்திலும் சமணர்கள் தங்கினர். இதைப் போன்றே வீரசைவப்பிரிவும் கால்நடை வளர்ப்புச் சமுதாயம் அதிகமாக இருந்த பகுதியில் தோன்றி, அதை ஒத்த சமுதாயத்தில் பரப்ப முற்பட்டனர். கர்நாடகப் பகுதியிலுள்ள இயற்கை அமைப்பும் கால்நடைச் சமுதாயத்திற்கு ஏற்ற இடமாக இருந்தது. எனவே, வீரசைவம் இப்பகுதியில் பரவியது. ஆனால், காவிரி ஆற்றுப்பாசனப் பகுதிகளில், சைவமும் வைணவமும் நல்ல நிலையில் இருந்ததால், இத்தகைய மறுமலர்ச்சியை ஏற்படுத்த இயலவில்லை. எனவே, இயற்கைஅமைப்பு முக்கிய காரணமாக அமைந்தது.

லிங்காயத்துப் பிரிவைத் தோற்றுவித்த பசவர் என்பவர் நந்தியின் அவதாரம் என்று கூறுப்படுகின்றது. மைசூர்ப் பகுதியில் நந்தி வழிபாடு சிறப்பாக உள்ளது. இவற்றுள் மாதையன் மலை, நந்தி மலை ஆகியன குறிப்பிடத்தக்கன. மாதையன் மலையில் நந்தி வழிபாடு முதன்மைப் பெறுகின்றது. இங்கு நந்தியாகிய பசுவே ஈஸ்வரனாக உள்ளதால் 'பசுவேஸ்வரன்' என்று பெயர்

பெறுகின்றது. தருமபுரி பகுதியிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இன்றும் சென்று வருகின்றனர். லிங்காயத்து ஊர்வலங்களில் நந்திக் கொடியை எடுத்துச் செல்வார்கள். எனவே, நந்திக் கொடியையும் பசவர் நந்தியின் வழித்தோன்றல் என்கின்ற காரணத்தையும் வைத்துக்கொண்டும் இது இவர்களுடைய குலக்குறியாக இருக்க வாய்ப்புகள் உள்ளன. எனவேதான், பசுவேஸ்ரன், பெரிய நந்தி என்று பெயர் வைத்துக் கொள்கின்றனர். கால்நடைச் சமுதாயத்தில் குலக்குறி வழிபாடு காணப்படுகின்றன. இத்தகைய சமுதாயத்தின் வழிவந்த சில கருத்துக்களும், வீரசைவப் பிரிவில் இணைந்துள்ளன என்பது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. எனவே கால்நடை வளர்ப்புச் சமூகம் இருந்த பகுதியில் வீரசைவம் நிலைப்பெற்றது.

### *வீரசைவத்தின் வீழ்ச்சி*

சமண சமயத்தின் வளர்ச்சியைத் தடுக்கத் தோன்றிய லிங்காயத்துப் பிரிவு, சுமார் கி.பி.12, 13-ஆம் நூற்றாண்டுகளில் அதிக செல்வாக்கு பெற்று விளங்கியது. சமணம் வீழ்ச்சியடைந்த பின்னர் வைணவ மதத்தினர் இந்தப் பிரிவை எதிர்த்தனர். சிவனே முழுமுதற் கடவுள் என்பதை ஏற்காத வைணவர்கள், விஷ்ணுவே முழுமுதற் கடவுள் என்று கூறினர். இதனால் வீரசைவ கோட்பாடுகள் பிராமணர்களை

இழிவுபடுத்துவதாகக் கருதினர். எனவே வைணவ பிராமணர்கள் வீர சைவத்திற்கு எதிராகச் செயல்படத் துவங்கினர். இதுவே வீரசைவத்தின் மறைவிற்கு முதல் காரணமாக அமைந்தது.

விஜய நகர மன்னர்கள் வைணவத்தைச் சார்ந்தவர்களாக இருந்த காரணத்தால் வைணவம் வளர்ச்சியடைந்தது. சைவம் தடுக்கப்படவில்லை என்றாலும் வளர்க்கப்படவில்லை. வைணவ கோயில்கள் அதிக அளவில் கட்டப்பட்டன. சைவ கோயில்களில் கட்டப்பட்ட மண்டபங்களில் வைணவ அவதாரங்கள் சிற்பங்களாக வடிக்கப்பட்டன. தருமபுரி மாவட்டத்திலுள்ள கம்பைநல்லூர்பெண்ணையீஸரம், கோயில்களில் உள்ள மண்டபங்களில் வைணவ படைப்புச் சிற்பங்கள் விஜயநகர மன்னர்களின் காலத்தில்உருவாக்கப்பட்டன. எனவே, சைவ கோயில்களிலும் வைணவம் புகுத்தப்பட்டது.

பின்னர் வீரசைவர்கள் வைத்திருந்த நந்திகொடி, வியாசர்ஹஸ்தம், மணி போன்றன, இவர்கள் பயன்படுத்தக்கூடாது என்று மைசூர் மகாராஜாவிடம் முறையிட்டனர். பின்னர் 1811-ல் பெல்லாரி நீதி மன்றத்தில் வழக்கு ஒன்றைத் தொடுத்தனர். வீரசைவர்கள் வைதீக மதத்தைச் சாராதவர்கள். எனவே இவர்கள் பிராமணர்களை இழிவுபடுத்துகின்றனர் என்று

இந்த வழக்கு தொடுக்கப்பட்டது. இதனால் வைணவர்களும், வீரசைவத்தினரும் ஊர்வலங்கள் நடத்தக்கூடாது என தீர்ப்பு வழங்கப்பட்டது.

1888-ல் வைணவ மதகுரு சிரிங்கேரிசாமி பெல்லாரிக்கு வந்தபோது ஊர்வலம் தொடர்பான விவாதங்கள் மீண்டும் உருவாயின. மாவட்ட ஆட்சியர் இரண்டு பிரிவினரையும் கூட்டி பேசிஇருவரும் ஊர்வலம் நடத்தலாம் என்றுமுடிவு செய்தனர். இதைப்போன்று மீண்டும்1899 மற்றும் 1901 ஆகிய ஆண்டுகளிலும் நீதி மன்றத்தில வழக்குகள் இருந்தன என்று கூறப்படுகின்றது. எனவே, வீரசைவத்தை வைதீக மதமாக ஏற்க மறுத்த பிராமணர்கள் சமணம் அழியத் தொடங்கியுவுடன் தங்கள் எதிர்ப்புகளை வெளிப்படுத்தி, வீர சைவத்தை மீண்டும் பழைய சைவ சமயத்தைப் போன்று மாற்றி வலுவிழக்கச் செய்தனர் என்பது அவர்களின் செயல்பாடுகளில் இருந்து தெளிவாகின்றது.

இந்தியாவின் மற்றப் பகுதிகளில் அரசாட்சி தோன்றிவளர்ந்த காலத்தில் கால்நடை வளர்ப்புச் சமுதாயத்தின் சாயல்களுடன் இருந்த இந்த பகுதியில் பசவர் தோன்றி மத மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர். இவர் மறைவிற்குப் பின் வேகமாக வளர்ந்தது; வலுவிழந்த நிலையைப் பெற்றது. இருப்பினும், இதன் கோட்பாடுகள் நிலை பெற்றனவாக உள்ளன.

# தகடூர் நாட்டில் கோயில்களின் தோற்றமும் வளர்ச்சியும்

ச.செல்வராஜ்,எம்.ஏ.,

*தொல்லியல் அலுவலர், தருமபுரி.*

தமிழகத்தில் தொல் பழங்காலத்தில் இருந்து வழிபாட்டு முறைகள் காண முடிகின்றது. பெரும்பாலும் கிராம தேவதைகளே பண்டைய தமிழ் மக்களின் கடவுளாக இருந்து வந்துள்ளன. பின்னர் சமணம், பௌத்தம் என்றும், இந்து சமயங்களாக சைவ, வைணவமும் தோன்றி வளர்ந்தும் கோயில்கள் பெருகின. தகடூர் நாட்டில் கோயில்களின் தோற்றமும், அதன் வளர்ச்சியையும் காணும் முன், தமிழகத்தில் கோயில்களின் தோற்றங்களையும், அதன் நிலைகளையும், சங்க காலத்தில் கோயில்களின் அமைப்பையும் அதன் தன்மையையும் இங்கு காண்போம்.

### *சங்க இலக்கியங்கள் கூறும் கோயில்கள்*

சங்க கால இலக்கண, இலக்கிய நூல்களில் கடவுள்களைப் பற்றியும், கோயில்களைப் பற்றியும் குறிப்பு காண முடிகின்றது. மலைப்பகுதிக்கு முருகனும், காடுகள் நிறைந்த பகுதிக்கு திருமாலும், வயல் நிறைந்த பகுதிக்கு இந்திரனும், கடற் பகுதிக்கு வருணனும்

பண்டைத் தமிழரால் தெய்வமாக கொள்ளப்பட்டவை யாகும்.

'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்'

என்ற தொல்காப்பியப் பகுதியால் உணரப்படுகின்றது. இக்கருத்தை ஏற்ற இளங்கோவடிகளின் சிலம்பில், புகார் காண்டத்தில் இந்திர விழாவெடுத்த காதையில், ''பிறவாயாக்கைப் பெரியோன்' என சிவன் கோயிலும், 'ஆறுமுகச் செவ்வேள் அணி தமிழ் கோயில்' என்பது முருகனுக்கும், 'வால்வளை மேனி வாலியோன்' என பலராமன் கோயிலும், 'நீலநிறமேனி நேமியோன்' என்பது திருமால் கோயிலையும் மற்றும்இந்திரன் கோயில் ஆகியவற்றில் திருவிழா நடந்த செய்திகளும் கூறப்பட்டுள்ளது. ஞாயிறு போற்றுதும்... எனத் துவங்கி, இறைவன் குடிகொள்ளும் ஆலயம் வரை விரிவாக எடுத்துரைத்தது மட்டுமின்றி, அவரவர்க்குரிய திருவிழாக்கள் நடத்தும் முறைமையையும் சுட்டிக்காட்டிச் சென்றுள்ளார் இளங்கோவடிகள் தமது சிலம்பில்.

மேலும் சங்க இலக்கியங்களில் பரிபாடலில் திருமால், சங்கு, சக்கரம், வில், வாள், சுதை என்ற ஐந்து

ஆயுதங்களை உடையவன், திருமகளை மார்பில் கொண்டவன், வராக வடிவெடுத்துப் பூமி தேவியை மீட்டவன், பொது மக்களுக்குச் சிற்பங்களாகவும், செப்புத் திருமேனிகள் வடிவிலும், அந்தணர்களுக்கு வேள்வித் தீயிலும், யோகிகளுக்கு உள்ளத்திலும், ஞானிகளுக்கு எவ்விடத்திலும் தோன்றுபவன், திருமாலிருஞ் சோலை மலையில் எழுந்தருளியிருந்து உயிரினங்களுக்குத் திருவருள் புரிபவன் எனப் பல செய்திகளை விரிவாக எடுத்துரைக்கின்றன.

### *கோயில் வகைகள்*

சங்க இலக்கியங்களில் பகரும் கோயில்கள் திருமுறைப்படிக் கோயில்கள் ஆகும். அவை : மாடக்கோயில். கரக் கோயில், கொகுடிக் கோயில், இளங்கோயில், ஞாழக் கோயில், பூங்கோயில், ஆலக்கோயில், பெருங்கோயில் இவ்வாறு கோயில்களை பகுத்தனர். இவை அனைத்தும் மண்ணாலும், பதப்படுத்தாத செங்கற்களாலும் கட்டப்பட்டதால் இக்கோயில்களை வெறும் பாடல்கள் மூலமே காண முடிகின்றது. இவை தற்பொழுது தமிழகத்தில் எங்கும் காணக்கிடைக்கவில்லை. மேலும், தமிழகத்தில் கொங்கு நாட்டில்தான் மிகக் குறைந்த அளவில் பாடல் பெற்ற ஸ்தலங்கள் உள்ள பகுதியாகும். அவற்றில் குறிப்பாக தகடூர் பகுதியில் பாடல் பெற்ற ஸ்தலங்கள் அதாவது

வைப்புத் தலங்கள் ஒரு சிலவே. அவ்வாறு தகடூரில் வளர்ந்த சைவ வைணவகோயில்களின் வளர்ச்சியையும், அதற்கு முன்னர் வந்த சமண, பௌத்தர்களைப் பற்றியும், பல்லவ நுளம்ப மன்னர்களின் காலத்தில் ஏற்பட்ட அமைப்புகளும், சோழ, விஜய நகர பேரரசுகள் எழுப்பிய கோயில்களையும் அவற்றின் வளர்ச்சியையும் இனி காண்போம்.

*பல்லவர் காலத்தில் தகடூர்*

தகடூர் பகுதியில் தனது ஆட்சியை கைக்கொண்ட பல்லவர்கள் இங்கு நடுகற்கள் மூலமே அறிமுகமாகின்றனர். இங்கு காணப்படும் நடுகற்கள் போரில் இறந்துபட்ட வீரனுக்கு எடுக்கும் நினைவுக் கல். இவை ஓர் நினைவுச் சின்னமாகவே கருதப்படுகின்றது. பல்லவர்கள் காலத்தில் கோயில்கள் இருந்தமைக்கான சான்றுகள் ஏதும் இல்லை. எனவே, தகடூர் நாட்டில் பல்லவர்கள் கால கட்டிடக் கோயில்களையும் தமிழகத்திற்கு அறிமுகம் செய்த இவர்கள், தகடூரில் அவ்வாறு அமைக்காமல் இருந்தமைக்கு, தகடூர் நாட்டில் பல்வேறு குழுக் கூட்டங்கள் ஆங்காங்கே ஆதிக்கம் செலுத்தியமையே. இதனால் ஆட்சியும், நிலப்பரப்பும் மாற்றி,மாற்றி கையகப்படுத்தப் பட்டுள்ளது. எனவே, நிலையான, நெடுங்கால ஆட்சி இப்பகுதியில்

அப்பொழுது ஏற்படுத்த முடியாமையே காரணமாக இருக்கலாம்.

*கங்கர், பாணர்*

தகடூர் நாட்டை கங்கர், பாணர் அரசர்களும் தன்வசம் கொண்டு ஆட்சி புரிந்துள்ளனர். அக்கால கட்டத்திலும் நமக்கு கோயில்கள் ஏதும் காணப்படவில்லை. இவர்களது அரசியல் சான்றுகளும் நமக்கு நடுகற்களாகவே காணக் கிடைக்கின்றது. ஸ்ரீபுருசன், சிவமாறன், போன்ற மன்னர்களும்ஒரு குழுவின் தலைவர்களாகவே இருந்திருத்தல் கூடும். எனவே, கங்கர்களின் கலைப் பணிகளும், பாண அரசர்களின் கட்டிடங்களும் இங்கு இல்லை.

*நூளம்பர்கள்*

கி.பி.8-ஆம் நூற்றாண்டு முதல் 11-ஆம் *நூற்றாண்டு வரை வாழ்ந்த நூளம்பர்கள் தகடூர் பகுதியை* கி.பி.9-ஆம் நூற்றாண்டு நூளம்ப மகேந்திரன் என்பவர் தனது ஆளுகைக்குகீழ் கொண்டு வந்து, தகடூரை நூளம்ப பாடியாக மாற்றுகின்றார். அப்பொழுது, இங்கு சைவ, வைணவக் கோயில்களை ஏற்படுத்துகின்றான். மகேந்திரன் காலத்தில்தான் மகேந்திரமங்கலம் தற்போதைய அதியமான் கோட்டை ஏற்படுத்தப்பட்டது. இங்குசைவ, வைணவ ஆலயங்களை அமைத்து

வழிபாட்டை செம்மையுற நடத்தி வருகின்றான். இவனது காலத்தில் தர்மபுரியில் அமைந்துள்ள கோட்டை கோயில் என்று அழைக்கப்படும் மல்லிகார்ச்சுனர் கோயில் எழுப்பப் படுகின்றது. காமாட்சி அம்மன் கோயிலும் சமகாலத்தைச் சேர்ந்தவையே. இங்கு கோயிலின் அதிட்டானத்தில் இராமாயணப் படைப்புச் சிற்பங்களை அமைத்து வைணவ சமயத்தை போற்றி புகழ்ந்ததோடு மட்டுமின்றி, சைவக் கோயில்களில் வைணவச் சமயக் கருத்துக்களையும் காட்டி, சைவ, வைணவ ஒற்றுமையையும், ஏற்படுத்தி, சமயநெறி கொண்ட அன்பர்களை, இணைத்து வழிபாட்டை வளர்ச்சியுற செய்தமை விளங்குகின்றது.

மேலும் இவர்கள் காலத்தில் கட்டப்பட்ட மல்லிகார்ச்சுனர் கோயிலில் காணப்பட்ட தூண் கல்வெட்டு சிறப்பு மிக்கது. இது இங்கு ஓர் சமணக் கோயில் இருந்தது என்பதற்கு ஆதாரமாக நிற்கின்றது. இக்கல்வெட்டில் லோகய்யா என்னும் ஒருவன் மகேந்திரன் மகன் அய்யப்பனிடம் புதுகூரு எனும் ஊரை மானியமாகப் பெற்று முன்பு இங்கு நீதியண்ணன், கண்டியண்ணன் என்பவரால் எடுக்கப்பட்ட கோயிலுக்குத் தானமாக அளித்தான் என்ற செய்தியைக் கூறுகிறது. மேலும், கோயில் எடுப்பித்த நீதியண்ணன் என்பவர் அக்கோயிலுக்கு நந்தவனம் ஒன்றை அளித்த

செய்தியையும் காண முடிகின்றது. எனவே, சமணக் கோயில் கி.பி.9-ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இருந்துள்ளதை உணர முடிகின்றது. எனவே தகடூரில் சமணமும் நன்கு செழித்து வளர்ந்து இருந்துள்ளது என்பதைஅறியலாம். இங்கு, சமணர் படுகைகளும் காண முடிகிறது. இப்பகுதிகளில் சமணப் பள்ளிகள் சில இருந்தமையும் அதற்கு அவர்கள் பெற்ற தானத்தையும் கல்வெட்டு நமக்கு உணர்த்துகிறது.

### *சோழர்கள் வளர்த்த கோயில்கள்*

தகடூரில் பல பகுதிகளிலும் சோழர்காலப் பல சிவன் கோயில்கள் எடுக்கப்பட்டும், பலவித தானங்கள்வழங்கப்பட்டும், சைவ சமயப் பேராதரவைப் பெற்றுள்ளது. பெண்ணேஸ்வர மடம், பெண்ணை நாயனார் கோயில், சிந்தல்பாடி சிவனீஸ்வர முடையார் கோயில், தீர்த்தமலை, அதியமான் கோட்டை சிவன் கோயில், தர்மபுரி அரியரநாதர் கோயில், கம்பைநல்லூர் கோட்டைக் கோயில் ஆகியவை சோழர் காலத்தில் ஆதரிக்கப்பட்ட கோயில்கள் ஆகும்.

சோழர்கள் சமணப் பள்ளிகளையும் சைவ, வைணவக் கேயில்களையும் நன்கு பேணிக் காத்து வளர்த்துள்ளனர். சைவக் கோயில்களுக்கு ஊர்களை தானமாக அளித்தலும் ஏரிகளை வெட்டுதலும், நந்தவனம்

அமைத்து இறை வழிபாட்டை செம்மையுறச் செய்தும், கோயில்களை கட்டியும் சமயங்களை வளர்த்துள்ளனர்.

முதலாம் இராசராசன் காலத்தில் இத்தகடூர் நாடு சோழர்கள் வசமாகி, நூளம்பாடி நகரிழி சோழ மண்டலமாக மாறுகின்றது. முதலாம் இராசேந்திரன் காலத்தில்சேத்திரபாலர்களுக்கு இங்கு கோயில் எடுத்தமை தீர்த்தமலை கல்வெட்டு நமக்கு உணர்த்துகின்றது.

சோழர்கள் சண்டேஸ்வரர்க்கும், சேத்திர பாலருக்கும்வழிபாடு செய்தலும், தலகோயில் எடுத்தலும் இங்கு குறிப்பிடத்தக்கது என்றாலும், இவை சோழர்கள் பின்பற்றிய வழிபாட்டு முறையாக இருக்க வேண்டும். அதனை தகடூர் பகுதியிலும் அமைத்து அவ்வழிபாட்டு முறையை புகுத்தி உள்ளமையயே தீர்த்தமலைக் கல்வெட்டு நமக்கு தெளிவுபடுத்துகின்றது.

சோழர்கள் கால செப்புத் திருமேனியிலும் தகடூர் நாட்டில் சில உள. அவை நெடுசாலை, தீர்த்தமலை, பெண்ணேஸ்வர மடம் போன்ற கோயில்களில் காணலாம்.

முதலாம் குலோத்துங்கன் முதல் மூன்றாம் குலோத்துங்கன் தொடர்ச்சியாக இங்கு சிவாலாயங்கள் எடுப்பித்தலும், வழியாடுகளும், தேர்த்திருவிழாக்கள்

நடைபெறவும் முறைப்படுத்தி ஆணை வழங்கியுள்ளனர். மேலும் ராசராச அதியமான், அவன் மகன் விடுகாதழகிய பெருமான் காலத்திலும் சைவ வைணவத்தை பரப்ப கம்பைநல்லூர் போன்ற ஊர்களிலும் கோயில்கள் அமைத்தும், தானமளித்தும் வந்துள்ளனர்.

தகடூர் நாட்டில் சோழர்கள் இந்து சமயங்களை வளர்த்ததோடு மட்டுமின்றி பிற சமயங்களையும் ஆதரித்தமையும் நமக்கு தெளிவாகிறது.

*விஜயநகர பேரரசு*

சோழர்கள் காலத்திற்குப் பின்னர் போசளர்கள் வீரராமனாதன் காலத்திலும் சில சிவாலயங்களுக்குத் தானம் அளித்து, அவ்வாலய வழிபாட்டைநடத்துகின்றனர். இருப்பினும் விஜயநகர பேரரசு தகடூர் பகுதியைக் கைக்கொண்ட பிறகே அதியமான் கோட்டை, தீர்த்தமலை, பெண்ணேஸ்வர மடம், தென்கரைச் கோட்டை, தீர்த்தம் போன்ற பல பகுதிகளிலும் சைவ வைணவக் கோயில்களையும் கோயில் கோபுரங்களையும் உயர்த்தி கட்டி ராசகோபுரமாக்கி, உயர்ந்தோங்கி நிற்கச் செய்தனர். சைவ வைணவ வழிபாட்டின் இன்றியமையாத சிறப்பை மக்களுக்கு உணர்த்தினர்.

விஜயநகர காலத்தில்தான் கோயில்களில்

மண்டபங்களும், குளங்களும் பெருகின. தென்கரைக்கோட்டை, அரியநாதர் கோயில் போன்ற கோயில்களிலும், முதலாம் தேவராயர் காலத்தில் தீர்த்தமலை, கம்பைநல்லூர் கோயில்களில் சைவ வைணவத்தை போற்றி காக்க அமைத்த தானங்களையும் கல்வெட்டு உணர்த்துகின்றது.

இவர்கள் பெரும்பான்மையினர் வைணவத்தையே தழுவி இருந்தமையால் அதியமான் கோட்டை, தென்கனிக்கோட்டை முதலிய பல ஊர்களில் சென்ராயபெருமாள் என்னும் பெயரில் பல கோயில்கள் எடுத்துள்ளனர். மல்லப்பாடியில் இராமசாமி, கிருஷ்ணசாமி கோயில் இவை இரண்டும் வைணவக் கோயில்களே. இங்கு இராமரையும், கண்ணனையும், அவர்களது பணியையும் சித்தரிக்கும் தூண் சிற்பங்கள் சிறப்பு வாய்ந்தது.

தென்கரை கோட்டை கோயில் மண்டபத்தில் அனுமன் சிற்பங்களை தூண்களில் காணலாம். வைணவ வளர்ச்சிக்கு அனுமன் சிற்பமும் விஜயநகர காலத்தில் குறிப்பாக தகடூரில் முதன்மை பெற்று திகழ்ந்துள்ளது. எனவே அடியார்களுக்கும் முதன்மை இடத்தை அளித்து அதன் பக்தி நெறியை ஊருக்கு எடுத்துரைத்த விஜயநகர பேரரசு பெரும் முக்கியத்துவத்தை வழங்கியுள்ளது. இவ்வாறு தகடூர்நாட்டில் சைவ, வைணவ வளர்ச்சியை

காட்டவும், மக்கள் அதன் வளர்ச்சியை அறியவும் இன்றும் நமக்கு அதன் வளர்ச்சியை அறியவும் இன்றும் நமக்கு தடயங்களாக அமைபவைஇவர்கள் அந்நாளில் எடுத்த கோயில்களே. அவை மரத்தடியில் தோன்றிமன்னன் குடியிருப்பில் நுழைந்து இறுதியில் தனிப்பெறும்ஈடு இணையற்ற இறைவன் அமைவிடமாக மாறி இன்றும் நிலை பேறு மிக்கதாக உள்ளவை இத்திருக்கோயில்களே அவற்றை பேணிக் காப்போமாக!

*உதவிய நூல்கள்*


1. தகடூர் வரலாறு - திரு.சொ.சாந்தலிங்கம்,எம்.ஏ.,

2. சோழர் கலைப்பணி - திரு.எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியன்.

3. தகடூர் நாட்டில் ஆஞ்சிநேயர் வழிபாடு - கட்டுரை - எஸ்.செல்வராஜ், தொல்லியல் அலுவலர், தருமபுரி.

# தகடூர் நாட்டில் ஆஞ்சநேயர் வழிபாடு

ச.செல்வராஜ்,எம்.ஏ.,
*தொல்லியல் அலுவலர்,*
*தொல்பொருள் ஆய்வுத் துறை,*
தருமபுரி.

இதிகாச காலங்களில் இருந்து பேரும் புகழும் பெற்றவர் அனுமான். அவ்வனுமானை ஆஞ்சநேயர் என்றும் குறிப்பர். தமிழகத்தில் பட்டி-தொட்டி எங்கும் நாம் காணக்கூடிய சிற்பம் இந்த ஆஞ்சநேயர் சிற்பமே. குன்றுகளிலும், பாறைகளிலும் செதுக்கியுள்ளதை நாம் கிராமங்களுக்கு ஆய்வு செய்ய செல்லும்பொழுது நன்கு காணமுடிகின்றது. இராமாயணத்தில் நடந்தபோரில் இறந்த வீரர்கள் அனைவரையும் உயிர்பிக்க வேண்டி சஞ்சீவி வேர் கொண்டுவர் சென்ற அனுமன் சஞ்சீவி வேர் எது என அறியாமையால் அந்தமலையையே பெயர்த்து எடுத்து வந்துராமனிடம் வழங்கியது. அத்தகு வீரமிக்கவர் வீர அஞ்சிநேயர். 'பூர்வத்தில் திருமால் தனது காலினால் அளந்த மேலுலகங்களையெல்லாம் இவன் தனது வாலினால் அளந்தான்' என்று சொல்லி தேவர்களும் திகைப்படையுமாறு அனுமானின் வாலுக்குடைய பெருமையை தேவர்களே குறித்துள்ளனர். அரக்கர்களும் அஞ்சும் அளவிற்கு வீரம் படைத்தவர்.

*அனுமான் பெயர் காரணம்*

கேசரி என்னும் வாநர வீரனது மனைவியாகிய அஞ்சனாதேவியிடத்தில அரக்கர்களை அழிப்பதற்கு உதவும் பொருட்டு வாயு தேவனது அருளால் உருத்திராமிசமாய்ப் பிறந்தவன் அனுமான். இவன் பிறந்தவுடனேயே தனதுதாயை நோக்கி எனக்கு இரை யாது? என்று கேட்க அவளும் சோலையிலே முதிர்ந்த செந்நிறமடைந்த பழங்களெல்லாம் உனக்கு இரையாவன ஆகும் என்று உரைத்தாள். அனுமானாகிய தனதுமகளின் உணவின் பொருட்டு கனி கொண்டு வருவதற்காக காட்டிற்கு சென்றான். அப்பொழுது பசி பொறுக்க மாட்டாது இவ்வனுமான் காலையிலுதித்த சூரிய பிம்பத்தை கனியெனக் கருதி, அதனைக் கவருமாறு அச் சூரியனது தேரின்மேல் தாவிப் பாய, பின்னர் இவனால் நாம் பேருதவி பெற வேண்டியிருப்பதை மனதிற்கருதி இவனை சுடாது சூரியன் விட்டொழிந்தது என்பதாகும். இவ்வாறு குழந்தைப் பருவத்திலே சூரியனின் தேரின் மீது பாய்ந்த வலிமையைப் பெற்றவன் என்ற பேரும் அடைந்தான். அத்தகு வீரம் கொண்டவன் அனுமான் என்பர். பிரிதொரு இடத்தில் அனுமன் பெயர்க் காரணம் குறிப்பிடும் பொழுது, இராமாயணத்தில் சுந்தரகாண்டத்தில் கீழ்கண்டவாறு குறிக்கப்படுகின்றது.

அனுமான் - ஹனுமார் என்ற வடசொல்லின்

விகாரம்; பிறந்தவுடனே இளஞ்சூரியனைக் கனிந்த பழமென்று கருதிப் பிடிக்கப் பாய்ந்த பொழுது அதனை அறிந்து கோபங் கொண்ட இந்திரனது வஜ்ஜிராயுதத்தால் அடிக்கப்பட்டு சிதைந்த கன்னம் கொண்டார். இவ்வாறு கன்னம் சிதைந்ததால் இப்பெயர் பெற்றார். இப்பெயர் இந்திரன் இவருக்கு இட்டது. ஹனு என்றால் கன்னம் மாந் என்பது வடமொழிப் பெயர் விகுதி எனவே கன்னத்தில் சிறப்பு உடையவர் என்பது இதன் பொருள் ஆகும்.

*பெரிய திருவடி, சிறிய திருவடி*

திருமாலின் உடன் இருந்து அப்பெருமானுக்கு வாகனமாய் அடிமை செய்ததனால் கருடனுக்குப் பெரிய திருவடி என்றும், இராமாவதாரத்தில் மட்டும் அவ்வாறு உடன் இருந்துஉதவுவதால் அனுமானுக்குச் சிறிய திருவடியென்றும் வைணவச் சமுதாயத்தவர்கள் வழங்குவர். இவ்வாறு சிறிய திருவடியாக போற்றப்படக்கூடிய பெருமை பெற்றவர் அனுமான்.

சைவ, வைணவ சமயங்களில் அடியார்களுக்கு மிகவும் சிறப்பான இடத்தை அளித்து போற்றியுள்ளமை அனைவரும் அறிந்த ஒன்று. அவ்வாறு, சைவ சமயக் குரவர்கள் போன்று, வைணவ சமயத்தில் அனுமான் ஓர் தனியிடம் பெற்றார். ஆனால், இதன் வளர்ச்சி அதிக அளவு காண முடிவதில்லை. சோழர்கள் காலத்தில்

ஆங்காங்கே தோன்றிய வைணவக் கோயில்களில் ஆஞ்சநேயர் வழிபாடு காணப்பட்டாலும், தமிழகத்தில விஜயநகரப் பேரரசு காலத்தில்தான் பெரும்புகழ் கொண்டு ஆங்காங்கே, தனிக் கோயில்களும், சிறப்புமிக்க சிற்பங்களும் ஆஞ்சநேயர் வழிபாடும் வளர்ந்தன.

*சோழர்கள் காலத்தில்*

தமிழகத்தில் சோழர்கள் காலத்தில் இராமபிரான், இலட்சுமணன், சீதை இவர்களுடன் அனுமான் செப்புத் திருமேனிகளையும் அமைத்து வழிபட்டு வந்துள்ளனர். குறிப்பாக முதலாம் பராந்தகன் காலத்தில் இருந்து, இராமாயணக் காட்சிகளை சிறிய புடைப்புச் சிற்பங்களாக, அதிட்டானத்தில் வரிசையாக அமைக்கும் வழக்கத்தை கொண்டு வந்தனர். அதனுடைய வளர்ச்சியே ஆங்காங்கே நாம் காணக்கூடிய இராமாயணப் புடைப்புச் சிற்பங்களாகும். அவ்வாறு வந்தனவற்றில் தர்மபுரி கோட்டை கோயிலில் கி.பி.10-11-ஆம் நூற்றாண்டு என கருதப்படும் இக்கோயிலிலும் அந்தபுடைப்புச் சிற்பங்களாக இராமாயணக் காட்சிகளை நாம் காண முடிகிறது. இருப்பினும் இக்காலத்தில் சோழர்கள் அனுமனுக்கு என தனி இடத்தை அவர்கள் அதிக அளவில் கொடுக்கவில்லை. இராமபிரானின் சிற்பங்களோ செப்புத் திருமேனிகளோ,

அமைத்தவிடத்திலெல்லாம் ஆஞ்சிநேயரை படைக்கத் தவறவில்லை என்பதையும் நாம் குறிப்பிடவேண்டும்.

சிவாலயத்திலும் இராமரயணச் சிற்பங்கள் அமைத்தமையும், அனுமன் சிற்பங்களை அமைத்தலும் ஓர் சிறப்பான ஒன்று ஆகும். மேலும் அனுமான் பூதகனநாதனான சிவபிரானது அம்சம் என்பர். எனவே, சிவாலயத்திலும் அனுமன் சிற்பம் காண முடிகின்றது. இவ்வாறு இதன் வளர்ச்சி தமிழகத்தில் பல பகுதிகளிலும் விரிந்து சென்றன. அவ்வாறு நோக்குமிடத்து தகடூர் என்றழைக்கப்படும் தருமபுரி மாவட்டத்தில் ஆஞ்சநேயர் வழிபாடு எவ்வாறு சிறப்புற்றிருந்தது, எந்த கால கட்டத்தில் வளர்ச்சியுற்று பெரும்புகழ் அடைந்தது என்பதையும் இனி காண்போம்.

### *தகடூர் மாவட்டத்தில் ஆஞ்சநேயர்*

மலையும் மலை சார்ந்த இடங்களையும் கொண்ட தகடூரில் அஞ்சிநேயர் வழிபாடு தனித்துவம் பெற்று விளங்குகின்றது. சங்ககாலம் தொட்டு தொடர்ச்சியான வரலாற்றை பெற்ற இந்த தகடூர் மாவட்டத்தில், ஆஞ்சநேயர் வழிபாடு என்பது கி.பி.13-14-ஆம் நூற்றாண்டு துவக்கத்தில் இருந்துதான் காண முடிகிறது.

கி.பி.13-14-ஆம் நூற்றாண்டு முதல் காணப்பட்ட அஞ்சநேயர் வழிபாடு சிறிது சிறிதாக விரிவடைந்து

15-16-ஆம் நூற்றாண்டுகளில் பெரிதும் வளர்ச்சியுற்றது என்பதை இம்மாவட்டத்தில் ஆங்காங்கே காணப்படும் அஞ்சிநேயர் சிற்பத்தைக் கொண்டு உணரலாம்.

தமிழகத்திலே குறிப்பாக நமது பக்கத்துமாவட்டமானசேலம், மாவட்டத்தில் நாமக்கல்லில் அமைந்துள்ள சுமார் 15 அடி உயரமுள்ள ஆஞ்சநேயர் சிற்பம் வேறு எங்கும் காண முடியாத அளவிற்கு நின்ற நிலையில் வடிக்கப்பட்டு உள்ளது. இது ஓர் தனித்தன்மை வாய்ந்த ஒன்று. வைணவ சமயம் நன்கு வளர்ச்சி பெற்று வந்த நேரத்தில் ஆங்காங்கே இதுபோன்ற சிற்பங்கள் பெருகின. சைவ சமயத்தில் தொண்டாற்றிய அடியார்களுக்கு சிவாலயத்தில் ஓர்சிறப்பு கொடுத்து அவர்களுக்கு சிற்பங்களை அமைத்தது போலவே வைணவக் கோயில்களில் வைணவ அடியார்களுக்கும், சிறிய திருவடி எனப்பெரும் பேறுபெற்ற அனுமானுக்கும் சிற்பங்களை வடித்து, அவருக்கு பெருமை சேர்த்தனர். அவ்வாறு பெருமை சேர்க்க எழுப்பப்பட்ட சிற்பங்கள் பின்னர் ஆஞ்சிநேயருக்கு என தனித்து சிற்பங்களும், கோயில்களும் பெருமளவு வளர்ந்தன.

தர்மபுரி மாவட்டத்தில் வைணவக் கோயில்கள் அனைத்திலும் அஞ்சிநேயர் சிற்பங்களையும், சில கோயில்களில் ஓவியங்களிலும் நாம் காணலாம். குறிப்பாக தென்கரை கோட்டை, அதியமான் கோட்டை,

மல்லப்பாடி, இராயக்கோட்டை, வீரபத்திரதுர்கம், மேலும் தர்மபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள மலைக் கோட்டைகளில் காணப்படும் புடைப்புச் சிற்பங்களிலும் குன்றுகளிலும் தனித்தனியாக அமைத்த பலகை கல்லில் வடிக்கப்பட்ட புடைப்புச் சிற்பங்களாகவும், அளவில் சிறியவனவாகவும், பெரியனவுமாக கம்பைநல்லூர், சோகத்தூர், மகாராஜா கடை என மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இவ் ஆஞ்சநேயர் சிற்பத்தைக் காண முடிகிறது. இவை விஜயநகர, காலம் தொடங்கி நாயக்கர் காலம் வரை பெற்ற வளர்ச்சியாகும்.

### *கோயில்களில் ஆஞ்சநேயர்*

கி.பி.13-14-ஆம் நூற்றாண்டில் ஹரிஹர புக்கர் மூலம் தமிழகத்திற்கு விஜயநகர பேரரசு ஆட்சிக்கு வந்தது. இவர்கள் வைணவத்தை தழுவியவர்கள். எனவே, இவர்கள் காலத்தில் கோயில்கள் பெருகின கோபுரங்கள் உயர்ந்தன. வைணவமும் தழைத்தோங்கியது. அவ்வாறு வைணவக் கோயில்களும் பெருகிற்று. அவற்றில் இராமபிரானின் தொண்டனாகிய அனுமான் சிற்பமும் எங்கும் அமைத்து அதற்கென வழிபாட்டையும் செய்து பெருமை படுத்தியுள்ளனர்.

தென்கரை கோட்டை, கோயிலில் காணப்படும் மகா மண்டபத்தில் உள்ள தூண்களிலும், விதானத்திலும், ஆஞ்சிநேயரை பல்வேறு வடிவில் அமைத்து பெருமை

சேர்த்துள்ளனர். மல்லப்பாடியில் தனியாக ஓர் கோயில் அமைத்து அதற்கு வழிபாடும் செய்து வருகின்றனர். மேலும் அருகே உள்ள மலைக் குன்றிலே குடையப்பட்ட அனுமன் சிற்பம் இங்கு இதன் வளர்ச்சியையே குறித்து நிற்கின்றது.

தர்மபுரியில் ஸ்ரீபிரசன்ன வெங்கடரமண கோயிலில் அனுமனுக்கு தனி இடம் அமைத்து பூசைகள் செய்யப்பட்டு வருகின்றன. இங்கு அனுமனின் புடைப்புச் சிற்பமாக ஓர் உயர்ந்தபலகை கல்லில் வடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் அனுமானின் தலை அலங்காரத்தை காட்டும் பொழுது உச்சி குடுமி காட்டப்பட்டுள்ளது. இது வைணவ அடியார்களுக்குரிய தனிச்சிறப்பு ஆகும. மேலும் வாலில் மணி தொங்கவிடப்பட்ட நிலையிலும் அழகிய உருவில் கம்பீரமான தோற்றத்துடன் காண முடிகின்றது.

தர்மபுரியை அடுத்து சுமார் 4 கி.மீ. தொலைவில் காணப்படும் சோகத்தூர் என்ற கிராமத்திலும் சுமார் 6 அடி உயரமுள்ள பலகை கல்லில் வடிக்கப்பட்ட புடைப்புச் சிற்பமாக ஆஞ்சநேயர் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு என தனியாக கோயில் எழுப்பப்பட்டு வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றது. தர்மபுரியைச் சுற்றிலும் நான்கு திசையிலும் நான்கு ஆஞ்சநேயர் சிற்பம் காணப்படுகின்றது. அவை தற்போது திசைமாறி

நின்றாலும்பண்டைய காலத்தில் நான்கு திசைக்கும் காவலர்களாக அமைத்து காவல் தெய்வமாக கருதி வழிபட்டமையே என்ற கருத்தினை நாம்கொள்ளல் வேண்டும். இங்கு காணப்படும் சிற்பங்கள்அனைத்தும் கி.பி.15-16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவைகளாகவே காணப்படுகின்றன.

*மலைக்கோட்டைகளில் அனுமான்*

தர்மபுரி மாவட்டத்தில் மலைக் கோட்டைகளும், தரைக் கோட்டைகளும் ஏராளம். இவற்றில் தரைக் கோட்டைகள் இன்று அழிந்து மண்மேடாக மாறின. அவற்றில் தென்கரைக் கோட்டை போன்ற சிலவே ஓரளவு சிதைவு பெறாமல் உள. அங்கும் நுழைவுப் பகுதியில் ஆஞ்சநேயர் சிற்பத்தைக் காணமுடிகிறது.

மலைக்கோட்டைகள் பல உள. அங்குள்ள கோட்டைகளின் நுழைவுப் பகுதிகளில் பெரிய குன்றுகளில் பெரும்பாலும் புடைப்புச் சிற்பங்களே காண முடிகின்றது. எடுத்துக்காட்டாக, வீரபத்திர துர்கம், இராயக்கோட்டை, மல்லப்பாடி, மகாராஜா கடை, ஜகதேவி. இங்கு காணப்படும் ஆஞ்சநேயர்சிற்பம் வீர ஆஞ்சநேயராக படைக்கப்பட்டுள்ளது. சுமார் 15 அடி உயரமும், 10 அடி அகலமும் உள்ள பிரம்மாண்டமான ஆஞ்சநேயரை வேறு எங்கும் தமிழகத்திலே காண இயலாது.

அகன்ற கற்பாறையில் குடையப்பட்ட இந்தசிற்பம் போர்க்களத்தில் ஈடுபட்டுள்ள ஓர் தளபதி போன்று சித்தரிக்கப்பட்டுள்ளது. ஓங்கிய கைகளும், வீராவேசமாகத் துடிக்கும் தோற்றமும், ஈடு இணையற்ற பாதங்களுக்கு இடையே மடிந்து அடிப்பட்டுக் கிடக்கும் வீரர்களும், பயந்து ஓடும் வீரர்கள் ஒரு பக்கமும் இராமாயணத்தின் ஒரு போர்க்களக் காட்சியையே நம் கண்முன் நிறுத்தக்கூடிய அளவிற்கு அமைத்த இந்த கலை அமைப்பை வியப்பதா? அன்றி மூவாயிரம் அடிகட்கு மேலே இப்படி ஓர் அறிய சிற்பத்தை வடித்த சிற்பியை வியப்பதா? பார்ப்போர் மனதைக் கவரும் நிலையில் இந்த அனுமன் சிற்பம் வைணவ சமயத்தைபரப்ப வந்த ஓர் பெரும் படைப்பு என்பதையே நமக்கு தெளிவு படுத்துகின்றது. இச்சிற்பமும் 15-16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தனவாகவே தோன்றுகிறது.

இவ்வாறு மலைக் கோட்டைகளிலும் தரைக் கோட்டைகளிலும் ஆஞ்சநேயர் சிற்பத்தை அமைத்ததைக் காணும் பொழுது இவரைக் காக்கும் கடவுளாக, காவல் தெய்வமாக வைணவர்கள் போற்றியிருக்கக்கூடும் எனத் தோன்றுகின்றது.

வைணவ சமயத்தைப் பரப்புவதற்கு, ஆஞ்சநேயர் சிறந்த அடியாராக அமைந்து, அவர் ஆற்றிய தொண்டுகளை ஓவியங்களாகவும், அவரது வீரத்தை

விளக்கும் சிற்பங்களையும் தர்மபுரி மாவட்டத்தில் காணப்படும் கோயில்களில் அமைத்து அனுமன் வழிபாட்டை சிறப்புறச் செய்துள்ளனர். அதியமான் கோட்டை, பெருமாள் கோயில் விதானத்தில் காணப்படும் ஓவியங்களில் அனுமான் கடலை கடப்பதும், வீரர்களை அழிப்பதும் அழகுறத் தீட்டியுள்ளனர். இவை 16-17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஓவியமாகும்.

எனவே, இறுதியாக கி.பி.13-14-ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்த இவ்வனுமன் வழிபாடு தர்மபுரி மாவட்டத்தில் நாயக்கர் காலத்தில் கி.பி.16-17-ஆம் நூற்றாயண்டில் மிக்க செழிப்பாகவும், செல்வாக்குடனும் வளர்ச்சி பெற்றுத் திகழ்ந்துள்ளது என்பதை நாம் நன்கு உணர முடிகின்றது.

# தகடூர் மாவட்டத்தின் பண்டைய வரலாறு

பேரா. ம. இராச சேகர தங்கமணி
கரூர்.

*முன்னுரை*

'தகடூர் நாடு' எனப்படும் இன்றைய தருமபுரி மாவட்டம், தனக்கெனத் தனித்ததோர் வரலாற்றைப் பெற்றுள்ளது. இம்மாவட்டம், தொல் பழங்காலந் தொட்டு, இன்று வரைக்கும் இடையறாத தொடர்ச்சியான வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளது என்பது பாராட்டுக்குரியது. இம்மாவட்டம் கன்னட, தெலுங்குப் பகுதிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ளது. எனவே மூன்று மொழிப் பாண்பாட்டுத் தாக்கங்களுக்கும் இலக்காகி, தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களினின்றும் சற்று வேறுபட்டுக் காணப்படுகிறது.

தொல் பழங்காலம் தொடங்கி, விசயப் பேரரசின் இறுதிக்காலம் வரை தருமபுரிப் பகுதி பல அரச வமிசத்தாரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த செய்தி இலக்கியச் சான்றுகளாலும், கல்வெட்டுச் சான்றுகளாலும், அகழாய்வுச் சான்றுகளாலும் அறியப் படுகின்றன. பல தொல்லியல் அறிஞர்களின் கள ஆய்வுகளின் மூலம், இம் மாவட்டத்தின் தொன்மை வரலாறு புத்தொளி பெறுகிறது. கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகப் புகழ்பெற்று

விளங்கும். அதியமான் ஆண்ட பகுதி இப்பகுதி. எனவே சங்க காலத்தில் தருமபுரிப் பகுதி சிறப்பிடம் பெற்றிருந்தது.

1916-ஆம் ஆண்டு தருமபுரி மாவட்ட வரலாற்றில் மறக்கமுடியாத ஆண்டு. ஆம்! அந்த ஆண்டில் தான் இராபர்ட் புரூஸ் புட் என்னும் தொல்லியல் அறிஞர், இம்மாவட்டத்தில் கள ஆய்வுகள் மேற்கொண்டு, புதிய கற்காலத்திற்கும் முற்பட்ட காலத்திய கைக்கோடரிகள், சுத்தியல்கள், சுரண்டு கருவிகள், ஊசிகள், வெட்டுக் கத்திகள், பிளேடுகள், ஆப்புகள்[1]- முதலான பல கற்கருவிகளைச் சேகரித்து, தருமபுரியின் பண்டைய வரலாற்றில் புத்தொளி பாய்ச்சினார். தருமபுரி மாவட்டம் சற்று வறட்சியான மாவட்டமாக இருப்பினும், இங்கு கண்டெடுக்கப்பட்ட வரலாற்றுத் தடயங்கள் மிக வளமானவை. தமிழகத் தொல்லியல் துறையினர் இப்பகுகளில் நடுகற்களையும், கல்வெட்டுகளையும் ஆய்வு செய்து நூல்களாக வெளியிட்டுள்தாகவும் தமிழ்ப் பல்கலைக் கழகப் பேராசிரியர் இராஜன் போன்ற தொல்லியல் அறிஞர்களின் கள ஆய்வுகளாலும் இம் மாவட்டத்தின் பண்டைய வரலாறு வெளிக் கொணரப்பட்டுள்ளது. இவர் கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள பருகூரிலும், கப்பலவாடியிலும் ஏறத்தாழ 22 கற்கருவிகளைக் கண்டுபிடித்தார். இவ்விரு பகுதியும்,

புதிய கற்காலக் கருவிகள் உற்பத்தி மையமாகவும் செயல்பட்டனர்.

*பழைய கற்காலம் புதிய கற்காலம்*

பழைய கற்கால, புதிய கற்காலங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான கற்கருவிகள் இம்மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளதன் விளைவாக, இப்பகுதியில் கி.மு.3000-2800 காலப் பகுதியில் பண்டைக்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் எனக் கணிக்கப் பட்டுள்ளது. எனவே, தருமபுரி மாவட்டப் பகுதிகளில் 5000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது அறியப்படுகின்றது. இம்மாவட்டத்தில் கற்கருவிகள் செய்வதற்கு ஏதுவான பசால்ட், டோலரைட், டிராப்டைக் முதலான மூலக் கற்கள் மலைப் பகுதிகளில் கிடைத்ததால், இப்பகுதியில் மக்கள் வாழத் தொடங்கினர்.

தருமபுரி மாவட்டத்தின் கிருஷ்ணகிரி, அரூர் வட்டங்களில், புதிய கற்கால மக்களின் வாழ்விடங்கள் கண்டறியப் பட்டுள்ளன. கிருஷ்ணகிரி வட்டத்தில் கொல்லப்பள்ளி, தொகரப்பள்ளி ஆகிய இடங்களிலும், அரூர்வட்டத்தில் தையால்மலை, பன்னிமடுவு, வத்தல்மலை, முள்ளிக்காடு - ஆகிய இடங்களிலும் புதிய கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்கான ,சான்றுகள் கிடைத்துள்ளன. பி.நரசிம்மையாவும் இப்பகுதிகளில் சோதனை ஆய்வுகள் நடத்தி,

கைக்கோடரிகள், வாய்ச்சி (ADZE), ஆப்பு (WEDGE). வெட்டுக்கத்தி, குழவிக்கல், அரவைக்கல் - ஆகியவற்றைச் சேகரித்துள்ளார். வத்தல் மலை, தையால் மலை, தொகரப்பள்ளி - ஆகிய இடங்களிலிருந்து, நரசிம்மையா 70-க்கும் அதிகமான புதிய கற்காலக் கருவிகளைக் கண்டுபிடித்துள்ளார். அடுத்து தருமபுரி மாவட்டத்தில் சிவப்பு, பழுப்பு(TAN) சாம்பல் நிறம் (BROWN), மற்றும் கருப்பு - ஆகிய ஐந்து வகையான புதிய கற்காலப் பண்பாட்டிற்கே உரிய பானை ஓடுகள் கிடைத்துள்ளன. தையால் மலையிலும், முள்ளிக்காட்டிலும் பல வகையான பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இவற்றின் அடிப்படையில் தருமபுரிப் பகுதியின் புதிய கற்காலப் பண்பாட்டு வாழ்க்கையை மூன்று கட்டங்களாகப் பிரித்துள்ளனர்.[2]

அடுத்து தருமபுரி மாவட்டப் பகுதிகளில் (தையால்மலை, வற்றல்மலை) நுண் கற்கருவிகளும் கிடைத்துள்ளன. இவை பளிங்கு (குவார்ட்ஸ்) சால்சிடெனி ஆகிய கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்டவை. இதனால் பிந்திய கற்காலக் கருவிகளும்(LATE STONE AGE TOOLS) தருமபுரி மாவட்டத்தில் மக்களால் பயன்படுத்தப்பட்டுள்ளமை புலனாகும். அடுத்த 1978-ல் கிருஷ்ணகிரி வட்டம் பர்கூருக்கு அருகில், மல்லப்பாடி என்னுமிடத்தில்

சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறை மாணவர்களால் வரலாற்றுக்கு முந்தைய காலக் குகை ஓவியங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இரண்டு மனிதர்கள் இரண்டு குதிரைகளில் எதிரெதிரே அமர்ந்து கொண்டு கையில் கோல்களை வைத்துக்கொண்டு சண்டையிடுவது போன்ற ஓவியம் இதில் தீட்டப்பட்டுள்ளது. அடுத்து போரிடும் வீரன் காளை போன்ற உருவங்களும் இதில் வரையப்பட்டுள்ளன. இக்காலக் கட்டத்தில் மனிதன் நாடோடி வாழ்க்கையை விடுத்து ஓரிடத்தில் நிலையாகத் தங்கி, உணவு உற்பத்தி செய்து, அவற்றை சேமித்து வைக்கும் நிலையை அடைந்தான் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து அகழாய்வின் மூலம் இவர்கள் வட்ட வடிவிலான குழி வீடுகள்(PITHOUSES) அமைத்து அவற்றில் வாழ்ந்து வந்ததாகவும் அறிய முடிகிறது.

## *பெருங்கற்காலம்*(MEGALITHIC PERIOD)

மனிதன் நாகரிக வரலாற்றில் புதிய கற்கால பண்பாட்டை அடுத்த வளர்ச்சிக் கட்டம் பெருங் கற்காலம் ஆகும். இதனை ‘பெருங் கற்படைக் காலம்’ என அழைப்பதே மிகப் பொருத்தமுடையதாக இருக்கும். இக்காலக்கட்டத்தில் பிணக்குழிகளுக்கு மேல் பெரும்பெருங்கற்களைக் கொண்டு பலவிதமான புதைமேடுகளை, அக்கால மனிதன் அமைத்திருந்ததால்,

இதனைப் பெருங்கற்காலம் என்கிறோம். இக்காலத்தில் கற்கருவிகள் பயன்படுத்தப்படாமல் இரும்புக் கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இக்கால மக்கள் இறந்தோரைப் புதைக்கப் பலமுறைகளைப் பின்பற்றினர். கல் பதுக்கை (CIST), கற்கிடை(DOLMEN) கற்குவை (Cairn) பரல் உயர் பதுக்கை(Cavin Circle), குடைக்கல் (Umbrella Stone), தொப்பிக்கல் (Hood Stone), நெடுநிலைக்கல் (நெடுங்கல் - Menhir), ஈமத்தொட்டி(SARCO PHAGUS). ஈமத்தாழி(URN BURRIAL) பலவிதமான புதைமுறைகளை அவர்கள் பின்பற்றினர். கல் பதுக்கைகளில் இடுதுளைகள்(POTT HOLES). இடப்பட்டதற்கான சான்றுகளும் இம்மாவட்டத்தில் கிடைத்துள்ளன.

திரு.பி. நரசிம்மையா, தருமபுரி மாவட்டத்தில் பெருங்கற்காலப் பண்பாடு பற்றி விரிவாக ஆய்வு செய்துள்ளார். தமிழகப் பெருங்கற் சின்னங்களிலேயே காலத்தால் முற்பட்ட கிழக்குப்புறம் இடுதுளையிட்டுள்ள கல் பதுக்கைகள் தருமபுரி, வட ஆற்காடு மாவட்டங்களில் மட்டுமே காணப்படுவதாக சிலர் கருதுகின்றனர். இவை ஏறத்தாழ, கி.மு.500-ஆம் ஆண்டு காலத்தைச் சார்ந்ததாகும்.[3]

பெருங்கற்காலச் சின்னங்களில் ஓவியங்கள் இம்மாவட்டத்தில் மகாராசக்கடை, தாளவாடி, ஆகிய

இடங்களில் பெருங்கற்கால ஓவியங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. மகாராசக்கடையில் காணப்படும் ஓவியத்தில் வண்ணங்கொண்டு தமிழ் எழுத்துக்கள் தீட்டப்பட்டுள்ளதாக ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளனர். இதனை 'தம்ம தொபக்கோடன் யஞகாமப்ப' என்றும் 'கோரூசலம்' என்றும் இரண்டு தொடர்களாகப் படித்துள்ளனர். இவற்றில் தகடூரின் தொன்மை புலனாகிறது. ஆய்வாளர்களின் ஆய்வுகள், தருமபுரி மாவட்டத்தில் கி.மு.500 முதல் கி.மு. 100 முடிய பெருங்கற்காலப் பண்பாடு நிலவியது என்பதனை அறியலாம். பல தொல்லியல் அறிஞர்கள் தருமபுரி மாவட்டத்தில் பெருங்கற் சின்னங்களைப்பற்றி ஆய்வுகள் செய்துள்ளனர். அவ்வாறு ஆய்வு செய்யப்பட்ட ஊர்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. பக்.15.[4]

### *சங்ககாலமும், அதியமான் மன்னர்களும்*

அதியமான் வேந்தர் சேரரின் மரபினர் என்று கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அதியமான் மன்னர்களைப் பற்றிய செய்திகள் பெரும்பாலும் சங்க நூல்களிலிருந்தே அறியப்படுகின்றன. இவற்றுள் அதியாமான் நெடுமிடல், அதியமான் நெடுமான் அஞ்சி, அவன் மகன் அதியமான் பொகுட்டெழினி எனும் மூன்று மன்னர்களைப்பற்றியே குறிப்பிடப் பெறுகின்றன. இம்மரபின் முதல் வேந்தனான அதியமான் நெடுமிடல்

தனது நண்பன் பசும்பூண் பாண்டியனுக்கு ஆதரவாகக் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்னும் சேர வேந்தனுடன் வாகைப் பறந்தலையில் போரிட்டு மடிந்தான்[5] என்று பரணர் பாடியுள்ளார்.

நெடுமான் அஞ்சி, திருக்கோவிலூரை ஆண்டு வந்த மலையமானை வென்று திருக்கோவிலூரைக் கைப்பற்றினான். தோல்வியுற்ற மலையமான் சேர மன்னனான பெருஞ்சேரல் இரும்பொறையை நாடி, அவனை அதியமானுக்கெதிராக போர் புரியத் தூண்டினான். சேரனுக்கும், அதியமானுக்கும் நடந்த போரில் அதியன் தோற்கடிக்கப் பட்டான். சேரன் 'தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை ' என்னும் விருதுப் பெயரையும் சூடிக் கொண்டான்.

தென்னாற்காடு மாவட்டம் ஜம்பையில் அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழிக் கல்வெட்டு 'சதியபுதோ அதியந் நெடுமாந் அஞ்சி ஈத்த பாளி'[6] என இவ்வதியமான் சமண முனிவர்களுக்குக் கற்படுகை வெட்டிக்கொடுத்ததைக் கூறுகிறது. அதியனின் திருக்கோயிலூரை வென்ற போது இக்கல்வெட்டு வெட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதலாம். இவனை அடுத்து இவன் மகன் பொகுட்டெழினி ஆட்சி புரிந்தான். ஒளவையாரும், அரிசில் கிழாரும் இவனைப் பாடியுள்ளனர்.

அடிக்குறிப்புகள்

1. **Narashimhaiah.B. 'Neolithic and Megalithic Cultures in Tamil Nadu' - Page. 20-21, 1980, Delhi.**
2. மேலதே. பக்-75.
3. மேலதே. பக்-205.
4. சொ.சாந்த லிங்கம், ' வரலாற்றில் தகடூர்' பக்-15, 1990, பாப்பாரப்பட்டி.
5. 'நெடுமிடல் சாயக் கொடுமிடல் துமியப்

   பெருமலை யானை யோடு புலங்கெட இறுத்து'

   பதிற்றுப் பத்து, நான்காம் பத்து. பாடல்.2. விரி. 10-11.

   'கூகைக்கோழி வாகைப் பறந்தலை

   பசும்பூண் பாண்டியன் வினைவல் அதிகன்

   களிறொடு பட்ட ஞான்றை

   ஒளிறுவாள் கொண்கர் ஆர்ப்பு' - - குறுந்தொகை. 393.
7. சதிபுதோ என்னும் சொல் அதியமான்களைக் குறிக்கும். 'சதிபுதோ' என்பது அதியமான் என்னும் சொல்லின் பிராகிருத வடிவம். இக்கல்வெட்டு கி.பி.முதல் நூற்றாண்டினது என்று R.நாகசாமி கருதுவார். **(Indian Express Magazine . 'Asoka and the Tamil Coutry - A new Look'. 6-12-81.)**

# தகடூர் நாட்டில் நடுகல் வழிபாடு

ப. காசிலிங்கம், எம்.ஏ.,
*காப்பாட்சியர்,*
*அரசு அருங்காட்சியகம்,*
காந்தி சாலை, கிருட்டிணகிரி.

சங்க காலம் முதலே தமிழ்நாட்டில் நடுகல் வழிபாடு இருந்து வந்திருப்பதாக புறநானூறு, அகநானூறு, கலிங்கத்துப்பரணி, மலைபடுகடாம், தொல்காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய இலக்கிய, இலக்கண நூல்களிலிருந்தும் அறிகின்றோம். இந்நடுகல் வழிபாடு நம் நாட்டில் மட்டுமல்லாது உலகம் முழுவதும் வழக்கிலிருந்து வருகிறது என்பதை வரலாறு நமக்குப் பறை சாற்றுகிறது. அக்காலத்தில் போர் முறையை வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, என ஏழு வகையாகப் பிரித்து வகைப்படுத்தியிருக்கின்றனர். புலியை முறங்கொண்டு விரட்டியடித்த தாய்மார்களும், ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போரிட்ட ஜான்சிராணிஇலக்குமிபாய், போன்றவர்களும் வாழ்ந்த இடம் நம் பூமி. இன்றும் ஒவ்வொரு நாட்டிலும் நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களுக்கு வீர வணக்கம் செய்கின்றனர்.

இங்கே நடுகல் என்றால் என்ன? அதனை

யாருக்காக, எந்த நோக்கத்திற்காக எடுத்தனர்? தகடூர் நாட்டில் நடுகல் வழிபாடு எப்படிச் செய்கின்றனர் என்பதைப் பற்றி வரிசையாகக் காண்போம்.

### நடுகல்

போரில் வீரமரணம் எய்திய ஒரு வீரனின் நினைவாகவோ, அல்லது வேறுவகைகளில் வீரமரணம் எய்தியவர்களின் நினைவாகவோ அல்லது செயற்கரிய செய்கை புரிந்தவர்களுக்காகவோ கல்நட்டு, அதில்அவர்களின் பெயர்களையும் அவர்களின் வீரச் செயல்களையும் குறிப்பிடுவதே 'வீரக்கல்' அல்லது 'நடுகல்' என்பதாகும். இதனையே, தொல்காப்பிய பொருளதிகாரப் புறத்திணையில்,

'காட்சி கால்கோள், நீர்ப்படை நடுகல்
[சீர்த்த மரபில் பெரும்படை] வாழ்த்தவென்று
இருமூன்று மரபில் கல்

எனக் கூறுகின்றது. இதிலே மலைக்குச் சென்று கல்லை எடுத்துவந்து நீரில் இட்டு நீர்ப்படை செய்து, அவ்வீரனின் பெயரையும் புகழையும் எழுதியபின் மக்கள் எல்லோரும் சேர்ந்து வாழ்த்துவார்கள் என ஐந்து வகை சடங்குகளையும் குறிப்பிடுகின்றது.

இந்நடு கற்களை நன்னீராட்டி, பீலி சூட்டி பெயர்

பொறித்தல் போன்றன அதியமான் நெடுமானஞ்சியைப் பாடும் ஔவையார் வாயிலாகவும் அறியலாம்.

இந்நடுகற்கள் போரிலே வீரமரணம் எய்திய வீரருக்கு மட்டுமல்லாமல், மன்னர்கள்பால் மாறாஅன்பு கொண்டு, அவர்கள் போரிலே வெற்றி கண்டால் தன் உயிரையே மாய்த்துக் கொள்வதாகச் சபதமேற்கின்றார்கள். இதைத்தான் கலிங்கத்துப்பரணி

'சிரம் அரிந்து தேவியின் கைகொடுத்த மாலோ....

குறையுடலம் கும்பிட்டு நிற்கு மாலோ

என எடுத்துரைக்கின்றது. அப்படிப்பட்ட வீரக்குடியினர் வாழ்ந்த இடம் இந்த தகடூர் நாடு.

*நடுகற்கள் காணும் இடங்கள்*

இந்நடுகற்கள் வீரமரணம் எய்திய இடத்திலோ, பாறையின் ஓரத்திலோ, பொது இடத்திலோ, கோயிலிலோ இருப்பதைக் காணலாம். சங்க காலத்தில் இந்நடுகற்களின் அருமை பெருமை தெரியாது. உப்பு வண்டிகள் அதன் மேல் ஏறி ஏறிச் சென்ற காரணத்தினாலும், வீரர்கள் தம் அம்புகளை கூர்மையாக்குவதற்காக தேய்த்ததாலும் அதிலிருந்த எழுத்துக்களும் சிதைந்து காணப்பட்டன என அகம் 131 எடுத்துரைக்கிறது.

தமிழகத்தில் இந்நடுகற்களை வடாற்காடு,

தென்னாற்காடு, சேலம், தர்மபுரி, கோவை ஆகிய மாவட்டங்களிலே காணலாம். செந்தமிழ்நாட்டில் சில இடங்களிலே ஒருசில நடுகற்கள் கிடைத்துள்ளன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமெனில் வடஆற்காடு, தருமபுரி ஆகிய இடங்களிலே தமிழ்நாடு தொல்லியல் துறையினரால் ஏராளமாக நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவைகளைப் புத்தக வடிவில் வெளியிட்டுள்ளனர். செங்கம் நடுகற்கள் என்பது புத்தக வடிவில் தொல்லியல் துறையினரால் வெளியிடப்பட்டுள்ளது.

தகடூர் நாட்டில் இந்நடுகற்கள் பெரும்பாலும் பெருங் கற்காலச் சின்னங்கள் எங்கெங்கே உள்ளனவோ அங்கு ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நடுகற்கள் நிச்சயமாகக் கிடைக்கின்றன. இந்நடுகற்களிலே பலவகையான உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சில நடுகற்களிலே செய்திகள் உள்ளன. சிலவற்றில் புடைப்புச் சிற்பங்கள் மட்டுமே உள்ளன.

தகடூர் நாட்டில் கிடைத்துள்ள நடுகற்கள் பல்லவர், சோழர், அதியர், போசளர், கங்கர், துளம்பர், கொங்கனி, விசயநகர், பாணர், மாவலி வாணராயன், அரிமுறை பருமர் போன்ற அரச வம்சத்தினர் காலத்தைச் சார்ந்தவைகளாகும். மற்றும் ஏராளமான நடுகற்கள்

மன்னர் பெயர் தெரியாமல் அல்லது அரச மரபு தெரியாமலும் உள்ளன.

தகடூர் நாட்டில் கிடைத்துள்ள நடுகற்கள் பெரும்பாலும் தமிழ், வட்டெழுத்து, கிரந்தம், கன்னடம் ஆகிய மொழிகளில் செதுக்கப்பட்டுள்ளன. தகடூர் நாடு, கன்னடம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களிடையே அமைந்து இருப்பதால் இங்கே மும்மொழிகளில் நடுகற்கள் காணமுடிகிறது.

தகடூர் நாட்டில் நடுகற்களைக் கொண்டே உருவாக்கப்பட்டீருக்கிறது என்பதை நினைக்கும் பொழுது அதன் பெருமையை எண்ணியெண்ணி நாம் பூரிப்பு அடையலாம்.

காடுகள் மிதியான பழங்காலத்தில் விலங்குகளின் தொல்லைகள், பல மக்களுக்கு ஏற்பட்டன. அப்படிப்பட்ட விலங்குகளை அழித்து ஊர் பொது மக்களைக் காப்பாற்யிவர்களுக்கும் நடுகல் எடுக்கப்பட்டன. இவைகளை 'புலிக்குத்திப் பட்டான் நடுகல்' என மக்கள் அழைக்கின்றனர். அதே போல பன்றிகளிடமிருந்து வீரர்கள் மக்களை காப்பாற்றியிருக்கின்றனர். பசுக்கூட்டங்களைக் கவர்ந்து சென்றவர்களிடமிருந்து அதனை மீட்டு வருபவர்களுக்கும் நடுகல் எடுக்கப்பட்டதாக

அறிகிறோம். இதனை ‘தொறுக் கொள்ளுதல்’ ‘தொறு மீட்டல்’ எனக் கூறுகின்றனர்.

இப்படிப்பட்ட நடுகற்கள் வீரர்களுக்கு மட்டுமல்லாது வடக்கிருந்து உயிர் துறந்த கோப்பெருஞ்சோழனின் நடுகல்லை பொத்தியார் பாடுவதன் வாயிலாக புகழ் மரணம் எய்தியவர்களுக்கும் கல் நடும் வழக்கமிருந்ததை அரிய முடிகிறது.

இந்நடுகல் வழக்கம் சமண மதத்திலும் இருந்திருப்பதாக அறிய முடிகிறது. சமண சமயத்தவர் சல்லேகனை விரதம் இருந்து, உயிர்விட்டால் அவர்களுக்கு முநீர்நிலைக் கல்ம எடுப்பது வழக்கம். இதில் ஆண் துறவி மட்டுமல்லாது பெண் துறவியரும் விரதமிருந்து உயிர் துறந்தனர் என்பதும் தெரிய வருகிறது. அப்படிப்பட்ட பெண் துறவியருக்கு எடுக்கப்பட்ட நடுகல் ஒன்று கிருட்டிணகிரியிலிருந்து சூளகிரிக்குச் செல்லும் வழியில் முஇசக்கி அம்மன்ம என்ற பெயரில் வழிபாடு செய்து வருகின்றனர்.

***சதிக்கல்***

கற்புடைய பெண்களுக்கு நாட்டப்படும் கல்லை மகா சதிக்கல்,மாசதிக்கல், மாஸ்திக்கல், சதிக்கல் எனப் பலவாறாக அழைக்கப்படுகிறது. கண்ணகிக்கு சேரன் செங்குட்டுவன் எடுத்தது இவ்வகையான மாசதிக்கல்லே

ஆகும். அப்படிப்படட சதிக்கல் தகடூர் நாட்டில் ஏராளமாகக் கிடைக்கின்றன.

சில நடுகற்களிலே கீழ்ப்பகுதி, மேல்பகுதி என இரண்டு பகுதிகளாக உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கீழ்ப்பகுதியில் போர்வீரன் போர் செய்வது காட்டப்பட்டுள்ளது. இன்னொரு பகுதி அவ்வீரன் போரில் இறந்த பிறகு வீரசுவர்க்கம் அடைகின்றான் என்று சித்தரிக்கப்பட்டு, தேவ மங்கையர் பூமாரி பொழிவது போன்றும், இருவர் தூக்கிச் செல்வது போன்றும் செதுக்கப்பட்டுள்ளன.

சூளகிரியிலிருந்து தீர்த்தம் செல்லும் வழியில் ஒரு நடுகல் உள்ளது. கணவன், மனைவி, மகன் என குடும்பமே வீரமரணம் அடைந்ததைப் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கியுள்ளனர்.

தகடூர் நாட்டில் மிகவும் பழமையானநடுகல் எனத் தொல்லியல் துறையினரால் கண்டு பிடிக்கப்பட்டது, இருளப்பட்டி நடுகல் ஆகும். இதனுடைய காலம் கி.பி.5-6-ஆம் நூற்றாண்டாகும் எனத் தெரிவித்துள்ளனர். இதுபோன்றே சித்தூர் நடுகல்லும் மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். இந்த நடுகற்களிலேயிருந்து அக்கால அரசியல் வரலாறு, பண்பாட்டு வரலாறு இவைகளை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

# தகடூர் நாட்டில் பௌத்தமும் சமணமும்

நிசாத்தீன் அகமது,
*தலைவர்,*
*தென்னிந்திய வரலாறு மற்றும் பண்பாட்டு ஆய்வு மையம்,*
கிருஷ்ணகிரி.

சங்ககாலந் தொட்டே பௌத்தமும் சமணமும் தமிழகத்தில் நிலைத்திருந்தமைக்குப் பலசான்றுகள் உள்ளன. சங்கம் மருவிய காலத்து சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியன இம்மதங்கள் பற்றிக் கூறுகின்றன. அக்காலத்தில் பல்வேறு வழிபாட்டு மார்க்கங்கள் தமிழகத்தில் இருந்தன. மணிமேகலைக் காப்பியம் பௌத்தம் கீழ்த்திசை நாடுகளில் பரவியிருந்ததைக் கூறுகிறது. சாவகப்பகுதியில் இருந்த புத்த நெறி ஹினயானமாக இருந்தது. பல்வேறு சமயங்களுக்கு மட்டுமின்றி, பௌத்த, சமண சமயங்களுக்கும் தமிழகத்தின் காஞ்சியும், வஞ்சியும் மையங்களாக விளங்கியிருந்திருக்கின்றன.

தங்கள் பண்டைய சமயத்தின்மீது பற்றிருப்பினும்கூட புதிய சமயங்களை ஏற்பதில், தமிழர்கள் எவ்விதத் தயக்கமும் காட்டியதில்லை யாதலால் பௌத்த சமண சமயக் கோட்பாடுகளை இயல்பாக எற்றுப்

பின்பற்றவும் செய்தனர். இலங்கையை ஆண்ட மொர்க்கலா புத்த திஸ்ஸ என்பவன் அசோகன் பாடலிபுத்திரத்தில் கூட்டிய மூன்றாம் பௌத்த சமய மாநாட்டில் கலந்துகொண்டு, சமயப் பிரசாரகர்களை பாண்டிய நாட்டிற்கு அனுப்பியதாக அறிய முடியாது. கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் இலங்கையின் மீதுப் படையெடுத்த தமிழரசன் ஒருவன் புத்த சமயத்துப் புனிதப் பொருள்களான அட்சய பாத்திரம், புத்தரின் தந்தம் (பல்) ஆகியவற்றை எடுத்துச் சென்றதாக மகாவம்சம் கூறுகிறது.

அசோகன் அனுப்பிய சமயப் பிரச்சாரகக் குழுவொன்று மகிந்தா (அசோகன் மகன் என்று இலங்கையிலும், அசோகனின் சகோதரன் என இந்தியாவிலும் கூறிப்பிடப்படுகிறான்) வின் தலைமையில் சமனேரா, சுமனா (அசோகனின் மகன் வயிற்றுப் பேரன்), இந்திரியா, உத்தியா, சம்பால மற்றும் பத்ரசாரா என்ற பெரும்புத்த பிக்குகளுடன் ஈழத்திற்கு வந்தது. இக்குழு கடல் வழியே பயணம் செய்தபொழுது புகாரில் தங்கி, அங்கு ஏழு பௌத்த விஹாரங்களை எழுப்பியது எனக் கூறப்படுகிறது. சம்பாபதி தெய்வமும், இந்திரவிழாவும் கூட பௌத்த தாக்கம் உடையவை எனலாம். கி.பி. 650 -ல் காஞ்சிக்கு வந்த யுவாங்சுவாங் எழுதிய குறிப்புகளிலிருந்து அசோகனின் தூபி ஒன்று இருந்ததை அறிய முடிகிறது.

பௌத்தம் தளர்வடைந்த பொழுது, வடபகுதியிலிருந்து சமணம் தலை தூக்கியது. சங்கம் மருவிய காலத்திலிருந்து அரச மதமாகச் சமணம் இருந்தது. ஏழாம் நூற்றாண்டில் ஞான சம்பந்தர் தனது தேவாரப் பாடல்கள் மூலம் இச்சமயங்களைத் தீவிரமாக எதிர்க்க ஆரம்பித்தார். தனது பாசுரமொன்றில் ஆனைமலைப் பகுதிகளிலும் அடுத்த குன்றுகளில் இருந்த சமண முனிகளான சந்துசேனா, இந்து சேனா ஆகியோரைக் கடுமையாக விமர்சிக்கிறார். வேள்விக்குடிச் செப்பேடுகள் கூறும் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி மற்றும் கடுங்கோனுக்கும் இடைப்பட்ட ஒரு நூறு ஆண்டுகளுக்கும் மேலான காலத்தில் சமணம் தமிழகத்தை ஆண்டது.

எடுத்துக்காட்டாகப் பழந்தமிழகத்தில், காணப்படும் மிகப் பழமையான பிராமிக் கல்வெட்டுக்கள் சமண பௌத்த சமயத்தைச் சார்ந்தவை. ஈழத்தையொட்டிய பகுதிகளில் பௌத்தம் சார்ந்தவையாக பிராமிக் கல்வெட்டுக்கள் உள்ளன.

இன்றும் தஞ்சை, செங்கை, தென்னாற்காடு, தருமபுரி மாவட்டங்களில் சிறிய அளவில் சமணர்கள் வாழ்ந்து வருகின்றனர். அகரம், காவேரிப்பட்டினம் ஆகிய பகுதிகளில் 'நயினார்' எனப்படும் இனத்தவர் சமண சமயத்தைச் சார்ந்தவர்களே. சம்புவராயர் மாவட்டத்து

திருமலையிலுள்ள ஜீனாலயத்திற்கு விடுகாதழகிய பெருமாள் எனும் அதியமான் செய்த பணி பற்றி கல்வெட்டுகள் உள்ளன.

அதியமான் கோட்டையில் சமண பார்ச்சுவநாதர் எனும் தீர்த்தங்கரரின் சிலை கிடைத்துள்ளது. கடகத்தூரில் இரு புத்த கற்படிமங்கள் கிடைத்துள்ளன. நின்ற திருக்கோலத்தில் அமைதியாய் அருள் பாலிக்கும் புத்தர், சோழர் கலைப் பாணியிலிருந்து மாறுபட்டதாய் இருக்கிறது. காண்கையில் வெளியிலிருந்து எடுத்து வரப்பட்டதாக இருக்குமெனத் தோன்றுகிறது. தலையற்ற பிரம்மாண்டமான புத்தர் சிலை பத்மாசன இருக்கையில் அமர்ந்த கோலம் உடையது.

கிருஷ்ணகிரி சையத் பாஷா மலையில் உள்ள, கங்க மன்னன் ஸ்ரீபுருஷன் (கி.பி. 726 - 776) காலத்திய பழங்கன்னடக் கல்வெட்டொன்று, சமண சங்கம் ஒன்றிற்கு நிலம் வழங்கிய விவரங்களைத் தெளிவாகக் கூறுகிறது. அக்காலத்தே இப்பகுதிக்கு தகடூர் கங்க நாடு என்று பெயர். சமணர்கள் இருந்தமைக்குச் சான்றாக இரண்டு சமண ஊர்கள் உள்ளன. கிருஷ்ணகிரிக்கு அருகில் பத்து கி.மீ. தொலைவில் ஒன்றும், காவேரிப்பட்டிணத்திற்கு ஏழு கி.மீ. தொலைவில் ஒன்றும் உள்ளன. காவேரிப்பட்டிணத்திற்கு அருகில் உள்ள ஜெயிநூரில் பெரும் பாறையொன்றில் சமணத்

தீர்த்தங்கரர் ஒருவரின் புடைப்புச் சிற்பமும் முக்குடையும் உள்ளன. அப்பெரும் பாறை 'கிரானைட்' கல்வெட்டுபவர்களால் பிளக்கப்பட்டு சிதைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரியிலிருந்து முப்பது கி.மீ. தொலைவில் உள்ள சமணப்பள்ளம் என்ற ஊர் இன்று சாமன்பள்ளம் என மருவியுள்ளது. பல்லவ மகேந்திரன் காலத்தேயிருந்து அரசாதரவு இழந்த சமணர்கள், தமிழ் நாட்டின் வடபுலமான தகடூர் நாட்டில் குடி புகுந்திருக்க வேண்டும். தகடூர் நாடு அவர்களை ஆதரித்திருக்க வேண்டும். சோழர் காலத்து நிகரிலி சோழமண்டலமாக தகடூர் நாடு ஆனபொழுது, சமணர்கள் கர்நாடகப் பகுதிகளுக்குச் சென்று விட்டிருக்கலாம். சோழர்கள் காலத்தே சமண பௌத்த சமய வீழ்ச்சி முழுமையடைந்தது எனலாம்.

சமணமும் தமிழும் என்ற நூலில் தமிழறிஞர் மயிலை. சீனிவேங்கடசாமி அவர்கள், தருமபுரி கோட்டை மல்லிகார்ச்சுனர் கோயில் சமணக் கோயிலாக இருந்திருக்கலாமென ஐயம் தெரிவித்துள்ளார். சான்றாக நுளம்ப மகேந்திரனின் கல்தூண் நீதியண்ணன், சண்டியண்ணன் என்ற இரு வணிகர் அளித்த கொடை பற்றிக் கூறுகின்றது. இவை எட்டாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தைச் சார்ந்தது. தமிழக அரசு, தொல்லியல் துறை பதிப்பித்த தருமபுரி, கல்வெட்டுகளில் முதல்

தொகுதியிலிருந்து தகடூர் நாட்டில் சமண சமயம் பற்றி சில விவரங்களை அறிகிறோம். ஊத்தங்கரை வட்டத்தில் பாவக்கல் ஊரில் உள்ள கல்வெட்டு 'அனிவாரித இளவரையன்' என்பவன் சமணப்பள்ளிக்கு பள்ளிச் சந்தம் அளித்ததைக் கூறுகிறது. ஆம்பள்ளியில் இராஜராஜ அதியமான் விடுகாதழகிய பெருமாள் பெரும்பள்ளி' என்ற சமணப் பள்ளிக்கு மூன்றாம் ராஜராஜசோழனின் ஏழாம் ஆட்சியாண்டில் கங்க காமிண்டன் என்பவள் கட்டிய குட்டையைப் பற்றிக் கூறுகிறது. பனைகுளத்திலும் ஒரு பள்ளியிருந்ததாகக் கல்வெட்டுகள் மூலம் அறிகிறோம்.

இருசமண சிரவணர்கள் அமர்ந்த கோலத்திருக்கும் சிற்பம் ஒன்று தருமபுரி நகரின் மையப்பகுதியிலிருந்து எடுக்கப்பட்டு அகழ்வைப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்து மலைகளில் காணப்படும் சில குகைகளும் சமணருடையதாக இருக்கலாம் அவை இன்னும் ஆயப்பட வேண்டியவை.

*பார்வை நூல்கள்*


1) தருமபுரி கல்வெட்டுகள் - தொகுதி [1] மற்றும் [2]

2) சமணமும் தமிழும் - மயிலை சீனிவேங்கடசாமி

# தகடூர் நாட்டில் த்வைத வழிபாடு

வா. இராகவேந்திரன், எம்.ஏ.(சமஸ்), எம்.ஏ.(இந்தி)

## *முன்னுரை*

இந்து மதத்தின் முன்னோடி என்று அழைக்கப்படுகின்ற 'ஸ்ரீவியாசர்' என்னும் மஹாரிஷி 'ப்ரம்ஹ ஸுத்ரங்களை' - அருளினார். 'ப்ரம்ஹ சூத்ரம்' என அழைக்கப்படும் இது, பரம்பொருளைப் பற்றிய சர்ச்சைகளையும், உருவம், அருவம் என்ற இரு அம்சங்களைப் பற்றிய வாதங்களையும் உள்ளடக்கியது. நான்கு அத்யாயங்கள் கொண்டது இந்த 'ப்ரம்ஹ சூத்ரம்'.

## *த்வைதத்தின் தோற்றம்*

இந்த ப்ரம்ஹ சூத்ரத்திற்கு அர்த்தம் சொல்லவும், விளக்க உரை, எழுதவும் நம் இந்துமதத்தின் உயர்ந்த சன்யாசிகள் தொடங்கினர்.

இதற்கு முதலில் ஆதி சங்கரரும், பிறகு ராமானுஜரும், பிறகு மத்வர் என்றழைக்கப்படுகிற ஆனந்த தீர்த்தரும் தங்கள் தங்கள் அபிப்ராயங்களுக்கு ஏற்றவாறு, அதே சமயத்தில் வேதநெறியும் பிறழாதவாறும் உரை எழுதினர்; விளக்கம் சொல்ல ஆரம்பித்தனர். அதன்படி ஆதிசங்கரர் 'அத்வைத' மதத்தையும், ராமானுஜர் 'விசிஷ்டாத்வைத'த்தையும், மத்வர் 'த்வைதம்' எனும் சித்தாந்தங்களையும் தோற்றுவித்தனர்.

## 'த்வைதம்' - சொல்லின் விளக்கம்

'த்வைதம்' - என்றால் 'இரண்டின்தன்மை' என்று பொருள். சமஸ்க்ருதத்தில் 'யோக' என்ற சொற்பிரிவின் அடிப்படையில் இந்த வார்த்தை உருவானது. வ்யாசரின் ப்ரம்ஹ சூத்ரங்களின் அடிப்படையில் முதல் கேள்வி எழுவது - பரப்ரஹ்மம் என்கிற மூலப்பொருளும், மனிதனின் உள்ளிருக்கிற 'ஜீவன்' என்றழைக்கப்படுகிற உயிரும் - இரண்டறக் கலக்க முடியுமா? இயலாதா? என்பதுதான்.

இரண்டறக் கலந்துவிடும் என்பதனால் 'அத்வைதம்' என்று அழைத்தார் ஸ்ரீசங்கரர். சம்ஸ்க்ருதத்தில் 'அ' என்ற பகுதிச் சொல் ('உபசர்க') எதிர் மறையான அர்த்தத்தைக் கொடுக்கும். ஆக 'அ-த்வைதம்' என்ற பொருளில் ஆதிசங்கரர் தன் மதத்திற்குப் பெயரிட்டார்.

ஆனால் மத்வர் இந்த வேத வாக்கியங்களையும் சாத்திர வாக்யங்களையும் ப்ரமானமாகக் கொண்டு தன் சித்தாந்தங்களை சங்கரர் நிலைநாட்டினாரோ, அதே வேத வாக்யங்களையும், சாத்திர வாக்யங்களைக் கொண்டே தன் 'த்வைதம்' எனும் சித்தாந்தத்தை நிலைநாட்டினார்.

## த்வைதத்தின் தோற்ற விஷயத்தில் சிறு சர்ச்சை

எந்த ஒரு சித்தாந்தமும் ஒருவரால் 'தோற்றுவிக்கப்

பட்டது' என்றால் அதற்கு முன் அந்த சித்தாந்தம் இல்லை - என்று பொருள் படாது. ஏற்கனவே ஒரு சிலரிடத்தில் நிலவி வந்த கருத்துகளை வாதபூர்வமாக, புத்தி பூர்வமாக ஆணித்தரமாக அந்த குறிப்பிட்ட நபர் எடுத்துரைத்ததனால் அந்த நபர் அதற்கு உயிரூட்டினார் என்றுதான் சொல்லப்படும்.

அவ்வாறே த்வைதத்தை எடுத்துக்கொள்வோம். த்வைதம் என்ற சித்தாந்தத்தை ஸ்ரீமத்வர்தான் தோற்றுவித்தார் என்று கூறினால், அது கண்டிப்பாக சரியல்ல. முன்பிருந்த த்வைத கருத்துகளுக்கு உயிரூட்டினார் என்றுதான் கூறலாம். ஏனெனில், இல்லை என்கிற 'எதிர்மறைச் சொல்' அல்லது கூடாது என்கிற மறுப்புச் சொல்லோ முதலில் தானாகத் தோன்றுபவை அல்ல. 'உண்டு' என்பதற்கு மறுப்புதான் இல்லை என்பது. ஆகையால் 'இல்லை' என்பதில் முன்சொல் உண்டு என்பதுதான்.

'இல்லை' என்பது முதற் சொல்லாக இருப்பின், 'உலகில் யாரும் வெற்றிடத்தைப் பார்த்து இங்கு பந்து இல்லை, நாற்காலி இல்லை - என்று கூறுவதில்லையே. ஏனென்றால் வெற்றிடத்தில் ஒரு குறிப்பிட்ட பொருளில் 'இல்லாமை' - தான் இருக்கிறது என்று பொருள் இல்லை. அனைத்துப் பொருட்களின் இல்லாமையும் அந்த

வெற்றிடத்தில் இருக்கிறது. ஆக மறுப்புச் சொல் தனக்கெதிரான முதற்சொல்லைச் சார்ந்து உள்ளது.

ஆதிசங்கரரின் அத்வைதம் கூட 'மறுப்புச் சொல். 'அத்வைதம்' 'அ' என்கிறது எதிர்மறை பொருள்தரும் மறுப்புச் சொல். 'அத்வைதம்' என்றால் 'த்வைதம் இல்லை' என்று பொருள்.

ஆக ஆதிசங்கரர் த்வைதத்தை மறுத்து அத்வைதம் எனப் பெயரிட்டுள்ளார். 'ஒன்று' என்பதும் 'இரண்டல்ல' என்பதும் ஒரே பொருளாக இருப்பினும் பின்கண்ட சொல்லில் "இரண்டு' என்பதை மறுத்து ஒன்று என்று கூறப்படுகிறது. முதற் சொல்லில் அது இல்லை அத்வைதம் - இரண்டல்ல (ப்ரம்ஹனும், ஜீவனும் இரண்டல்ல) - என்று பொருள்.

இதிலிருந்து ஆதிசங்கரரின் காலத்திலேயே 'த்வைதம்' என்னும் கருத்து நிலவியுள்ளது என தெரிகிறது. அப்படி இல்லை எனில் சங்கரர் தன் சித்தாந்தத்திற்கு 'ஒன்று' எனப் பெயரிடாமல் 'இரண்டல்ல' என ஏன் வைத்தார்? ஆக 'இரண்டு -த்வைதம்' என்கிற கருத்து நிலவி உள்ளது. அதை மறுத்துப் பெயர் வைத்துள்ளார்.

### *த்வைதமும் மொழியும்*

ஒரு கருத்து அல்லது கொள்கை வெளிப்படும்

போது அக்கருத்து, கருத்தை வெளியிட்டவரின் இடம், மொழி, பழக்கவழக்கங்கள் - இவைகளின் தாக்கத்துடன் வெளிவருகிறது.

த்வைத சித்தாந்தத்திற்கு உயிருட்டியவர் ஆனந்த தீர்த்தர். ஆனந்த தீர்த்தர் என அழைக்கப்படும் ஸ்ரீமத்வர், கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். மத்வர் சம்ஸ்க்ருதத்திலேயே தன் கிரந்தங்களை எழுதினாலும், அதனுடைய மொழி பெயர்ப்புகள் முதலில் கன்னடத்திலேயே ஏற்பட்டன. அவ்வாறே கன்னடர்களும், கன்னடமும், த்வைதமும் ஒன்றுக்கொன்று பிணைந்தன. காலப் போக்கில் தற்போது - 'த்வைதம்' என்றால் கன்னடர்களுக்குதான் - என்கிற பிரமையாவது ஏற்பட்டுள்ளது. ஆனால் 'த்வைதம்' - என்ற ஒரு கருத்து அனைவருக்கும் பொதுவான கருத்து.

### *த்வைதமும் - தகடூரும்*

ஒரு மொழி (அல்லது) அந்த மொழியில் தோன்றிய கருத்துக்கள் மற்றொரு மொழிக்குப் பரவும் பொழுது முதலில் அம்மொழி மக்களின் பக்கத்து ஊர்களுக்குத்தான் முதலில் பரவும் - இது இயற்கை.

அவ்வாறே த்வைதமதம் கர்நாடகத்திலிருந்து தமிழகத்தில் பரவுவதற்கு முன்னால், கர்நாடகத்தில்

அருகாமையிலிருக்கும் தகடூர் நாடு தான் முதலில் அந்த கருத்துக்களின் தாக்கத்திற்கு உள்ளானது என்றால் மிகையில்லை.

## *தகடூரில் த்வைத மதம் பரவுவதற்கான காரணங்கள்*

1) கர்நாடகத்தின் வம்சாவளிகள் அருகாமையில் உள்ள தகடூரில் நிறைய இருந்ததால் - கர்நாடக வாழ்க்கை முறையினை இங்கும் பின்பற்றினர்.

2) மதத் தலைவர்களின் வருகையும் பிரச்சாரமும் ப்ருந்தாவன பிரதிஷ்டைகளும்.

3) ஆழ்ந்த பக்தி மற்றும் நம்பிக்கை.

த்வைத மதத்தின் வம்சாவளியாக பல சன்யாஸிகள் தமிழகத்தின் மற்ற எந்த பகுதியையும் விட, தகடூரில் அதிகமாக புழங்கினர். அதன் காரணமாகவும் முளுபாகலில் மடம் ஏற்படுத்தியிருந்த வியாசராஜர் - மத்வரின் பரம்பரையில் வந்தவர், தகடூரில் விஜயம் செய்து - பல இடங்களில் ப்ருந்தாவன ப்ரதிஷ்டை செய்தார். வியாசராஜரின் வருகை கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டு ஆகும்.

மத்வமதத்தின் மற்ற கடவுள்களான ஹனுமான் ராமர். முதலானவர்கள் ப்ரதிஷ்டை மூலமாகவும் தகடூரில்

த்வைதம் பரவியது. தகடூர் நாட்டின் அனுமன் வழிபாடே வியாசராயரின் கொடை எனக் கூறலாம்.

### ஹனுமன் வழிபாடு

'ஹனுமன் வழிபாடு' என்பது தென்னகத்தில் அதிகமாக ஏற்படக் காரணம் மத்வரின் த்வைதம் தான். ஏனெனில், த்வைதத்தின்படி - 'ஸ்ரீஹரி' - தான் முழுமுதற்கடவுள்.

ஹனுமன் - ஹரியின் சேவகர், வாயு, பீமன் முதலானவர்களும் முக்கிய கடவுள்கள். ஆகவே இவர்களின் வழிபாட்டுப் பரவுதல் மூலமாகவும் தகடூரில் நிறைய ஹனுமான் கோயில்கள் பரவின. அதன்மூலம் த்வைதத்தின் பரவல் ஏற்பட்டது.

### இராகவேந்தர் வழிபாடு

மத்வரின் வம்சாவளியில் வந்த சன்யாசிகளுள் ஒருவர் ஸ்ரீ ராகவேந்திரர் இவர் மிகவும் சித்தியுள்ளவராய் அனைவராலும் நம்பப்பட்டு, வழிபடப்படுகிறார். கடந்த 15 ஆண்டுகளாக, முன்னெப்பொழுதும் கண்டிராத அளவுக்குத் தமிழகத்தில் ராகவேந்திரர் வழிபாடு அதிகமாகியுள்ளது. ஸ்ரீராகவேந்திரர்தான் த்வைத மதத்தின் ஸ்தாபகர் - என்று பிரமை ஏற்படும் அளவிற்கு அவரது புகழ் பரவி அதனால் மத்வரின் புகழ் மங்கியுள்ளது.

கடவுளின் வழிபாடுகூட பெரும்புள்ளிகளின்

ஆதரவைச் சார்ந்துள்ளது. ஒரு பெரும்புள்ளி - 'நான் இந்த கடவுளின் மகிமையால்தான் பெரும்புள்ளி ஆனேன்' என்று கூறினால், மக்களும் அந்த பெரும் புள்ளியின் வழிபாட்டு தெய்வத்தை வழிபடுவர். இது இயற்கை. மேலும், நாம் ஒருவரை விரும்பினால், அவர் எதை விரும்புவாரோ, நாமும் அதை விரும்புவோம் அல்லது நம்மையறியாமல் விரும்ப ஆரம்பிப்போம். அவ்விதமே திரைப்பட நடிகர் ரஜினியை விரும்புபவர்கள், ரஜினி விரும்பும் ஸ்ரீராகவேந்திரரை விரும்ப ஆரம்பித்துள்ளனர். இதன் மூலமாகப் பெரும்பாலானவர்கள் ஸ்ரீராகவேந்திரரை வழிபட ஆரம்பித்துள்ளனர். இதன் மூலமாகவும் தமிழ் நாட்டில் ஸ்ரீராகவேந்திரரின் பிருந்தாவன ப்ரதிஷ்டை முக்கியம் பெறுகின்றது. அதன்மூலம் த்வைத மத ஊடுருவல், பரவல் ஏற்படுகிறது. எனினும் வழிபாடு என்ற அளவிலேயே இராகவேந்திர ஸ்வாமிகள் வணங்கப் படுதலாகிவிட்டது துவைதம்.

# தகடூர் நாட்டில் தாச மார்க்கம்

**புது. பொ. வெங்கட்டராமன்,**
*ஓய்வு ஆசிரியர்,*
**புதுரெட்டியூர், தருமபுரி.**

மனித மனம் இடத்திற்கும், காலத்திற்கும், வசதிகளுக்கும் ஏற்றவாறு மாறிக் கொண்டே இருக்கும். எது எவ்வாறு மாறினாலும் அறவழியில் சமுதாயத்தை ஒன்றுபடுத்தி, நேர்வழியில் கொண்டு சென்றவர்கள் சமயப் பெரியார்கள். காலத்திற்கு ஏற்ற மாற்றங்களைக் கொள்ளாத அல்லது நீக்கி நல்லதைக் கொள்ளும் தன்மையில்லாத கருத்துக்கள், சமயங்கள் மறைந்துவிடும். அந்நியப் படையெடுப்பாலும் புதியனவாய் நாட்டில் புகுந்த சமயக் கருத்துக்களாலும் இந்திய நாட்டில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. இந்த குழப்பங்களை விடுத்து, இந்து மதத்தில் மறுமலர்ச்சியை உருவாக்க பல இயக்கங்கள் தோன்றின. அத்தகைய இயக்கங்களில், 'தாச மார்க்கம்' ஒன்றாகும். இந்த இயக்கம், தகடூர் நாட்டில் எத்தகைய சமயச் செயல்களில் ஈடுபட்டது என்பதையும் இதன் நோக்கங்களையும் இந்த கட்டுரையில் காண்போம்.

வைணவ கோட்பாடுகளை உள்ளடக்கிய இயக்கம் தாச மார்க்கம். தாகன், தாதன் என்பதற்கு அடியான் என்பது பொருள். தாசன் - ஆண்பால், தாசி பெண்பால்.

இவையே தாதன், தாதி, என்று மருவி வழக்கில் வந்தன. ஒரு கொள்கை அல்லது சமயம் மக்களிடையே பரவ வேண்டுமானால், நிலைத்து நிற்கவேண்டுமானால், கொள்கையின் அடிப்படையில் நின்று அதன் வளர்ச்சிக்காகப் பாடுபடும் தொண்டர் குழாம் மிகமிகத் தேவை. இத்தகைய தொண்டர் குழு எல்லா சமயங்களிலும் உள்ளன. வைணவ கோட்பாடுகளை மக்களிடையே பரப்ப அமைக்கப்பட்ட தொண்டர் குழுவே இந்த 'தாச மார்க்கம்' இவர்கள் வைணவத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர் என்று கூறினால் அது மிகையாகாது. வைணவ ஆழ்வார்களும் இந்த பணியையே செய்தனர். ஆனால் தாச மார்க்கத்தினர் இதில் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டனர்.

சமணமும் பௌத்தமும் தமிழகத்திலும், தக்காணத்திலும் அதிவேகமாகப் பரவின. இந்த கோட்பாடுகள் அரசர்களின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தது. எனவே, அரசர்களும் இதை பின்பற்றினர். அரச வம்சாவளியினர் சமணத்தையும் பௌத்தத்தையும் வளர்ப்பதில் ஈடுபட்டனர். மேலும் இந்த சமயக் கருத்துக்கள், பாமர மக்களின் எண்ணங்களையும் கவர்ந்தன. சாதி, மத வேறுபாடுகள் தலைதூக்கிய காலத்தில், பிறப்பால் அனைவரும் சமம் என்று கூறிய சமய கருத்துக்களை மக்கள் பின்பற்றத் தொடங்கினர்.

இதனால் வைணவம், சைவம் போன்றவைகளின் கருத்துக்கள் எடுபடவில்லை. சமமாக அமர்ந்து உணவு அருந்த முடியாத சமுதாயத்தை விடுத்து, சமத்துவம் காணும் வழி காண, அவற்றின்றும் விலகி மக்கள் சென்றனர். இத்தகைய சூழ்நிலையில் வைணவக் கோட்பாடுகளை எளிமைப்படுத்தி மக்களிடத்தில் பரப்ப ஆழ்வார்களும், தாசமார்க்கமும் அரும்பாடுபட்டன. இத்தகைய வைணவ சம்பிரதாயத்தை முதலில் துவக்கியவர் 'எம்பெருமானார்' என்று வைணவர்களால் உச்சிமேல் வைத்துப்போற்றப்படும் 'இராமானுஜர்' ஆவார்.

இராமானுசர் திருக்கோட்டியூரில் கோயில் கோபுரத்தில் மேலேறி, தம் குருநாதர் தமக்கு உயிர்கள் உச்சரித்து, கடைத்தேறலுக்குரிய 'ரகஸ்ய மந்திரம்' என்று உபதேசித்த 'ஓம் நமோ நாராயண' என்ற மந்திரத்தை, எல்லோரையும் கூவி அழைத்து உபதேசித்தார். மேலும் சில இடங்களில் தாழ்த்தப் பட்டவர்களைக் கோயிலினுள் சென்று வழிபட ஏற்பாடு செய்தார். உரங்காவில்லி போன்றவர்களுடன் சமமாக பழகியதுடன், தாசமார்க்கத்தின் குருவாக இருந்தார். தமிழ் நாட்டில் வியாசராயர், ஸ்ரீபாதராயர், திருவையாற்றில் தியாகராஜர், வட ஆற்காட்டில் ஹரிதாசர் போன்றோர் இவ்வியக்கம் பரவ தொண்டு செய்தனர். திருமலை தாத்தாச்சாரியர் குடும்பம் தீவிரமாக பாடுபட்டு, இந்த கொள்கைகளைப் பரப்பியது.

தருமபுரி மாவட்டத்திலும் இந்த இயக்கம் 15, 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் நன்கு பரவியது. கிராமங்கள் தோறும் பெருமாள் கோயில்களும், அனுமந்தராயன் கோயில்களும் தோன்றக் காரணம் இவ்வியக்கமே ஆகும். இவ்வியக்கம் வேர்ஊன்ற, விசய நகர மன்னர்களும், அவர்களின் குருக்களாகத் திகழ்ந்த ஆச்சாரியர்களும், பல மானிய நிலங்களை அளித்துள்ளனர். இவ்வியக்கத்தின் தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட மானிய ஊர்களே, தற்காலத்தில் தாசர ஹள்ளி, தாதம்பட்டி, தாதர் ஊர் போன்றன.

*முத்திரா தாரணம் (அ) முத்திரஸ்தானம்*

முத்திரா தாரணம் என்னும் சடங்கு தாச மார்க்கத்தில் முக்கியமானது தாசனாக மாறுபவர், ஆச்சாரியரின் முன் அனுமதி பெற்று 5 நாட்களுக்கு உண்ணா நோன்பு இருக்கவேண்டும். அந்நாட்களில் காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று நேரங்கள் நீராடவேண்டும். மஞ்சள் நீரில் ஊறவைத்து உலர்த்திய ஆடையை அணியவேண்டும். திருமால் கோயிலுக்குச் சென்று, முப்பொழுது வணங்க வேண்டும். மற்ற அடியவர்களுடன் பஜனை செய்து காலம் கழிக்கலாம். பால், பழம் ஆகியன மட்டும் உண்ணலாம்.

ஐந்தாம் நாள் முத்திராதாரண சடங்குகள் விடியற்காலையில் தொடங்கி விடும். விடியலில் குளித்து,

ஆச்சாரியாரின் முன் மஞ்சள் ஆடையுடன் அமர்த்தப் படுவர். ஆச்சார் சங்கு, சக்கர முத்திரைகளை இறைவனின் முன் வைத்து பூசை செய்வார். பின்னர் ஓமத்தீ எழுப்பி, அதில் சங்கு, சக்கர முத்திரைகளை பழுக்கக் காய்ச்சுவார்கள். முகூர்த்த நேரத்தில் கூடியிருப்போர் இறைவனின் திருநாமத்தை சப்தம் போட்டுப்பாட, சூடான உலோக முத்திரைகளை வெற்றிலையின் மேல் வைத்து சூட்டைக் குறைப்பார்கள். பலமுறை வெற்றிலையில் வைத்து சூட்டைக் குறைப்பர். பின் ஆச்சாரியார் மந்திரத்தை கூறிக்கொண்டே, பக்குவமான சூட்டிலுள்ள முத்திரைகளை எடுத்து, தாசனாக மாறுபவரின் வலது தோளில் சக்கர முத்திரையும், இடது தோளில் சங்கு முத்திரையும் நன்கு பதியுமாறு வைப்பர். இந்த முத்திரைத் தழும்பின் மேல், துளசி ஊறிய நெய்யானது, புண் ஆறும் வரை பூசப்படும். பின், இவர் காதில் ஆச்சாரியர் மந்திர உபதேசம் செய்வார். இதில் தாசர் எவ்வாறு சமுதாயத்தில் செயல்பட வேண்டும் என்பதைக் கூறுவார். பின்னர், இறைவனுக்குப் படைக்கப் பட்டவைகளை உண்பார்கள். இவ்வாறு சாதாரண மனிதனாக இருந்தவன் 'தாசராக' மாற்றப்படுகின்றார்.

தகடூர் பகுதியில் உள்ள தாசர்கள் மஞ்சள் உடையை அணிவார்கள். தலையில் தொப்பி

வைத்திருப்பார்கள். கழுத்தில் துளசி மாலை இருக்கும். வலது கையில் சேகண்டி எனப்படும் சேம களம் வைத்திருப்பார்கள். இடதுகையில் சங்கு இருக்கும் தங்கள் உடலில், துவாதச நாமங்களை போட்டிருப்பார்கள். துவாதச என்றால் பன்னிரண்டு என்று பொருள். அதாவது பன்னிரண்டு இடங்களில் நாமங்களைப் போட்டிருப்பார்கள். தங்களுடன் விளக்கு கம்பம் ஒன்றையும் வைத்திருப்பர். இந்த தூணின் பீடத்தில் அனுமானின் உருவம் வெண்கலத்தினால் செய்து வைத்திருப்பார்கள். நீண்ட தொங்கும் பை ஒன்றையும் வைத்திருப்பார்கள். இந்த பையில் மக்கள் கொடுக்கின்ற உணவுப் பொருட்களை சேகரித்து வைப்பார்கள். பின்னர் இதையே தங்களுடைய தாச மார்க்கத்தினருடன் சமைத்து உண்பார்கள்.

இவர்கள் 'பந்த காட்சி' என்ற விழா ஒன்றை செய்கின்றனர். விழாவன்று தீ பந்தத்தை எடுத்து வருவார்கள். இந்த ஊர்வலத்தின் போது, விஷ்ணுவின் பக்திபாடல்களைப் பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் வருவார்கள். இத்தகைய நேரங்களில் இவர்கள் தெய்வீகத் தன்மை பெற்றவர்களாகவே கருதப் படுவார்கள். கிராமங்களில் நடைபெறுகின்ற விழாக் காலங்களில் தாசர்களே முக்கிய பங்கு வகிப்பார்கள். விழாவை செயல்படுத்துதல், பூசை போன்றவை செய்தல்

போன்ற எல்லா காரியங்களையும் இவர்களே செய்வார்கள். எல்லா சமய காரியங்களிலும் இவர்களே முதல் இடம் வகிக்கின்றனர்.

ஆஞ்சநேயரை தாச மார்க்கத்தின் முதல் தாசனாகக் கருதுகின்றனர். எனவே, ஆஞ்சநேயர் வழிபாடு, இவர்களின் முதல் வழிபாடாகும். தாசங்கள் சமயக் காரியங்களில் ஈடுபடுகின்ற காரணத்தால், இவர்களுக்கு நிலம்தானமாக கொடுக்கப்பட்டது. இது 'தாசர் மானியம்' என்று இன்றும் அழைக்கப் படுகின்றது. இத்தகைய நிலங்களில் ஆஞ்சநேயரின் படைப்புச் சிற்பங்கள் கல்வீடு அமைப்பில் செய்து வைத்திருக்கின்றனர். இன்றும் கிருட்டிணகிரி வட்டத்திலுள்ள, பல ஊர்களில் தாசர்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களில், ஆஞ்சநேயர் சிற்பங்களை பார்க்க முடிகின்றது.

தகடூர் பகுதியில் திம்மராயசாமி, சென்னராய சாமி கோயில்கள் அதிகம் உள்ளன. பெருமாள் கோயில்களை விட, இந்த இரண்டு வகையான கோயில்கள், பெரும்பாலான ஊர்களில் உள்ளன. இவையும் தாசமார்க்கத்தின் விளைவுகளே. திம்ம ராயசாமியும் வைணவத்தின் கோட்பாடுகளுடன் காணப்படுகின்றது. ஆந்திர மாநிலத்தில் 'திம்மண்ணா' என்பது ஆஞ்சநேயரை குறிக்கின்ற சொல்லாக இருக்கின்றது. இந்த சொல்லே பின்னர் திம்மராயன் என்று மருவி

தமிழகத்திற்கு வந்துள்ளது என்று கூறலாம். திம்மராயசாமி கோயில்கள் பெரும்பாலும் மலையின் மேல் பகுதியில் உள்ளன. திம்மராயசாமி, சென்னராயசாமி ஆகியவற்றை வழிபடுகின்ற மக்கள், தாசமார்க்கத்தின் கோட்பாடுகளைப் பின்பற்றிய தங்களுடைய விழாக்களை செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கோவை மாவட்டத்திலுள்ள ரங்கநாதசாமி கோயிலில், தாசர்களின் விழா ஒன்று கொண்டாடப்படுகின்றது. இந்த விழாவில் முக்கிய பங்கு தாசர்களுடையது. தாசமார்க்கத்தைச் சார்ந்தவர்கள் வாழைப்பழம், பொறி, வெல்லம் போன்றவைகளைச் சேர்த்து 'கவலம்' தயாரிப்பார்கள். இதை பிரசாதமாக எண்ணி உண்பார்கள். தீபந்தம் போன்றவைகளை எடுத்துக்கொண்டு பஜனை பாடல்களை பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் கோயிலுக்கு வருவார்கள். அவ்வாறு வரும் போது தங்களுடன் கவலத்தை கொண்டுவருவார்கள். குழந்தை பேறு இல்லாத பெண்கள் நீராடச் சென்று, அந்த கவலத்தை வாங்கி உண்பார்கள். அதை உண்பதால் குழந்தைபேறு கிடைக்கும் என்ற நம்பிக்கை இன்றும் உள்ளது. இது வளமை தொடர்பான சடங்குகளில் ஒன்றாக இருப்பது தெரிய வருகின்றது. பிரசாதமாகிய கவலத்தை தாசர்கள் தம் வாயில் வைத்து பின்னர் பெண்களின் மடியில் போடுவார்கள்.

### *தாசர்களும், மார்கழி மாதமும்*

'மாதங்களில் மார்கழியாக இருப்பேன்' என்று கிருஷ்ணன் பகவத் கீதையில் கூறினார். இந்த மாதத்தில் தாசர்கள், சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தினர் என்றால் அது மிகையாகாது. மார்கழி மாதம் விடியற்காலையில் ஒவ்வொரு வீடாக வந்து, விஷ்ணுவின் பாடல்களை பாடிடுவார்கள். இந்த மாதம் சூன்யமாதமாக இருக்கின்ற காரணத்தாலும், குளிர் காலமாக இருக்கின்ற காரணத்தாலும் மக்கள் செய்ய வெண்டிய செயல்களை செய்யாமல் இருப்பார்கள். அத்தகைய நேரத்தில் காலையில் எழுந்து கடவுளை வணங்கிப் பின்னர், செய்ய வேண்டிய காரியங்கள் செய்யுமாறு தாசர்கள் தூண்டுகின்றனர். விடியற்காலையில் சங்கை ஊதியும், பாடல்களைப் பாடியும் மக்களை தூக்கத்தை விடுத்து செயலை செய்யுமாறு தூண்டுகின்றனர். அத்துடன் இறந்தவர் நற்கதியை அடைய வாழ்த்துவார்கள். இதை பதம்பாடுதல் என்று அழைக்கின்றனர். இத்தகைய செயல்களை செய்கின்ற இவர்களுக்கு தானியங்கள் கொடுப்பார்கள். அவர்கள் கொண்டு வருகின்ற விளக்கிற்கு எண்ணெய் ஊற்றுவார்கள். இவ்வாறு மார்கழி மாதத்தின் எல்லா நாட்களிலும் செய்வார்கள்.

தை முதல் நாள் காலையில் மீண்டும் வந்து பக்தி

பாடல்களை பாடி சங்கை ஊதுவார்கள். அன்று அவர்களுக்கு தானியங்களும், காசும் கொடுத்து அனுப்புவார்கள். இந்த மாதத்தில் நடைபெறுகின்ற எல்லா விழாக்களிலும் இவர்கள் இருப்பார்கள். மார்கழி, தை மாதங்கள் அறுவடை மாதங்கள். அதாவது அறுவடைசெய்யும் போது விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும், கடவுள் பெயரால் அறுவடை செய்ய வேண்டும் என்றும், இவர்கள் எடுத்துக் கூறுகின்றனர். இதைப்போன்று மக்களின் சுகதுக்கங்களில் பங்கு கொண்டு நல்வழிப்படுத்தியதுடன், வைணவத்தையும் பரப்பினர். இத்தகைய செயல்களை ஆழ்வார்களும் நாயன்மார்களும்கூட செய்யவில்லை. எனவே தான், இறைவனே தொண்டர்களுக்குள் அடக்கம் என்று சமய நூல்கள் கூறுகின்றன. வைணவ நூல்கள் 'தாசானுதாசன்' என்று கூறுகின்றன.

### *துணை நின்ற நூல்கள்*

1. திருப்பாவை
2. நாலாயிர திவ்யப் பிரபந்தம்
3. பாகவதம்
4. ஹரிதாசர் கீர்த்தனைகள்.

# பொன்னேர் கட்டுவது — ஒரு வளமைச் சடங்கு

**சோலை. அர்ச்சுனன்.**

குறிஞ்சி, முல்லை ஆகிய நில அமைப்புகளில் இயல்பை ஒட்டியே தருமபுரி மாவட்டத்தின் விவசாயமும் வளர்ச்சியடைந்தது. முல்லை நில மக்கள் ஆடு மாடு மேய்ப்பவர்கள். கேழ்வரகு, வரகு, அவரை போன்ற புன்செய் தானிய பயிர்களையே பயிரிட்டனர். கால்நடை மேய்க்கும் வாழ்க்கை சூழ்நிலையில் மாடுகளைக் கொண்டு ஏர்பூட்டி, உழுது பயிரிடுவது முல்லை நில மக்கள் விவசாயத்தின் முக்கியமான அம்சமாகும். இத்தகைய ஆதிவிவசாய முறை வளர்ச்சியடைய, ஏரின் பயன்பாடு முக்கியமாக இருந்தது. நிலத்தை உழுது முதன்முதலாக ஏர் கட்டும்போது தர்மபுரி மாவட்ட மக்கள் அதனை 'பொன்னேர் கட்டுதல்' என்று அழைத்தனர். விளைச்சல் பெருகவும், நிலம் செழிக்கவும் சடங்காக பொன்னேர் கட்டுதல் நடத்தப்பட்டது.

## *தருமபுரி மாவட்டத்தில் ஏர்*

தர்மபுரி மாவட்டம் பென்னகரம் வட்டம் அழளபுரத்தில் ஏர்கலப்பையுடன் கூடிய ஒரு நடுகல் உள்ளது. ஏர்கலப்பையுடன் கூடிய மாடு ஒருபுறமும், குச்சியுடன் கூடிய மனிதன் மறுபுறம் கீழே நாய் நிற்பது போன்ற வடிவத்துடன் அந்த நடுகல் காணப்படுகிறது.

அதே போல மல்லசமுத்திரம் நடுகல்லில் கம்பு, அரிவாள், ஏர்க்கலப்பை போன்றவை காட்டப்பட்டுள்ளன. முல்லை நிலமக்கள் தனது செழிப்புக்கு காரணமான, உற்பத்தி கருவியாக உள்ள ஏர்கலப்பையை, தனது இனக்குழு நலன் காக்க மாண்ட வீரர்களின் நடுகற்களில், பொறித்து வழிபட்டனர். ஏர்கலப்பை கண்டுபிடிப்பு, முல்லை நில வாழ்வின் மகத்தான முக்கியத்துவம் கொண்டதாகும். இது ஆதி வேளாண்மைக்கு முற்றுப்புள்ளி வைத்து வேளாண்மையையும், கால்நடையையும் பிணைத்தது. ஏர்கலப்பையின் பயன்பாடு நிலத்தின் மீதான நிரந்தர வாழ்வை முல்லைநில மக்களுக்கு அளித்தது. ஏர்கலப்பை கண்டுபிடிக்கப்பட்டவுடன் அதனை இயக்கும் பணியை ஆண்களே மேற்கொண்டனர். மாடுபூட்டி இழுக்கும் ஏர்கலப்பை கண்டுபிடிக்கப் பட்டதானது, சொத்தின் மீது ஆணாதிகத்தைக் கொண்டு வரவும், என்றென்றைக்கும் பெண்ணுரிமை ஒழிக்கப்படுவதற்குமான நிலைமையைக் கொண்டுவந்தது. அனேபுரம் நடுகல், வேளாண்மை வளர்ச்சியின் இந்த கட்டத்தை எடுத்துக் கூறுகிறது.

## *வேளாண்மை வளர்ச்சியில் சமூக வாழ்க்கை*

முல்லை நிலம் சார்ந்த விவசாயம் வளர்ச்சியடைந்த நிலையில், முல்லை நில இனக்குழு மக்களின் நிலைத்த வாழ்க்கை உறுதிப்பட்டது. இந்த மக்கள் கிராமங்களில்

வாழ்ந்தனர். பழைய இனக்குழு பொதுச்சபைகள், கிராம பொதுச்சபைகளாக வளர்ச்சி அடைந்தது. கிராம பொதுச்சபையின் தலைவர் ஊர் கவுண்டர் அல்லது மந்திரி கவுண்டர் என்று அழைக்கப்பட்டார். இந்த கிராம சபைகள் திருவிழாக்களை நடத்துவது, கிராம ஒழுங்கை பராமரிப்பது போன்ற பணிகளை செய்ததோடு, விவசாயத்தையும் ஒழுங்கமைத்து, ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் கிராமத்திலிருக்கிற அனைத்து குடும்பத்தாரும், வீட்டுக்கு ஓர் ஏர் என்ற வகையில் வேளாண்மை தொடங்குவதற்கான சடங்காக ஊர் முழுவதும் சேர்ந்து 'பொன்னேர் கட்டுதல்' சடங்கை நிகழ்த்தினர்.

### *பொன்னேர் கட்டுதல்*

சித்திரை மாதத்தில், மழைபெய்தவுடன் பொன்னேர் கட்டும் நிகழ்ச்சி தொடங்கப்பட்டுவிடும். அதற்கு முன்பு அதிகாலையிலேயே உழவுக்கருவிகளை மோலி, நுகத்தடி, கலப்பை இவற்றை கழுவி சுத்தம் செய்து (உழுபடைக் கருவிகள் அனைத்தும் புதியதாக செய்யப் பட்டதாக இருக்க வேண்டும்) மாடுகளைக் குளிப்பாட்டி, ஊர்கவுண்டரின் வயலுக்கு கொண்டு வருவார்கள். அங்கு வரிசையாக மாடுகள் பூட்டிய ஏரை நிறுத்தி பிறகு உழவுக் கருவிகளுக்கும், மாடுகளுக்கும் பொட்டிடுவார்கள். இதில் முதல் ஏர், கிராமச்சபையின்

தலைவராக இருக்கும் ஊர்க் கவுண்டருடையதாக இருக்கும். மாடுகளுக்கும், உழவுக் கருவிகளுக்கும் பொட்டிடும்போது, முதலில் மஞ்சள் நிற பொட்டும், அதன்மேல் சிவப்புநிற குங்குமப்பொட்டும் வைப்பார்கள். அங்கு வந்திருக்கும் ஆடவர், பெண்டிர், குழந்தைகளுக்கு தருவதற்காக வெள்ளம் கலந்த அரிசி, தட்டு நிறைய வைக்கப்பட்டிருக்கும். பின்பு கிராம பூசாரி தேங்காய் உடைத்து பூசை செய்வார். அப்போது 'மோலி' என்று சொல்லப்படும் இடத்தின் மேல், ஒரு பொன் காசு வைத்துவிடுவார்கள். அதற்குப்பின் அங்கு இருப்பவர்களில் யாராவது ஒருவர் பூமியை வணங்கி, ஏர் மாடுகளை வணங்கி ஏர்பாடல் பாடுவார்.

'குட்டை குட்டை கலப்பை வெட்டி
குந்தாணி மோலி போட்டுரு

எனத் தொடங்கும் ஏர் பாட்டு.

புது வருஷம் பிறந்தது
பொன்னான நாளு
பூமாதேவி எங்களுக்கு
குறைவில்லாது விளைவை தரும்'

என்று முடிவடையும் பாட்டில் ஏர் தொழில் நுட்பம், விளைச்சலின் அவசியம் போன்றவை இடம்பெறும். பிறகு கிடா வெட்டும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்த

கிடா வெட்டும் நிகழ்ச்சி கோ்மபுவாரியாக நடைபெறுகிறது. கிராமத்தில் நூறு குடும்பங்கள் இருந்தால் 15 அல்லது 20 குடும்பங்கள் சேர்ந்தது ஒரு கோம்பு எனப்படுகிறது. கோம்பு என்பது பங்காளிகள் கூட்டம். ஒரு கோம்புக்கு - ஒரு கிடாய் என்ற வகையில் அவர்கள் பலியிட்டு பிறகு எடுத்துச் சென்று பங்கிட்டு கொள்வார்கள். பூசை முடிந்து அங்கு கூடியிருப்பவர்களுக்குத் தருவதற்கு வைக்கப்பட்டிருந்த, வெள்ளம் கலந்த அரிசி பெண்கள் மூலம் தரப்படுகிறது. அதேபோல், மாடுகளுக்கும், ஏர் கலப்பைக்கும் பொட்டிடுவதும் பெண்களேதான். பூசை சடங்குகள் எல்லாம் முடிந்தபின் ஏர் ஓட்டும் நிகழ்ச்சி தொடங்கும் போது பெண்கள் மஞ்சள் நீரை ஏர்கட்டும் ஆடவர்மீது தெளிப்பார்கள். எந்த தெய்வத்துக்கும் இதில் வழிபாடு கிடையாது. பூமித்தாய்க்கு மட்டுமே வழிபாடு செய்யப்படுகிறது.

### *பொன்னேர் கட்டுதல் - ஒரு வளமைச் சடங்கு*

வளமைக்கு காரணமான பூமியையே, அக்கால வேளாண்மை சமூகத்தில், பெண்மையின் முக்கியத்துவம் கருதி பூமித்தாயாக வழிபடுவது; பெண்களே உழவுக் கருவிகளுக்கும், மாடுகளுக்கும் வளமையின் நிறங்களான மஞ்சள், சிவப்பு, குங்குமப் பொருட்களை இடுவது; வளமை பெருக வேண்டும் என்பதற்கு

பெண்களே வெள்ளம் கலந்த அரிசியை தருவது; செழிப்பிற்கு ஏருக்கு முன்பாக கிடாய் பலியிடுவது; ஏர்கட்டும் நிகழ்ச்சி தொடங்கும்போது, ஏர் பிடிக்கும் ஆடவர்களையே வளமையான சின்னமாக கருதுவதற்காக, அவர்கள் மேல் பெண்களே மஞ்சள் நீரைத் தெளிப்பது; போன்ற மேற்கூறிய சடங்குகள் யாவும் தர்மபுரி மாவட்டத்தில் வளமை சடங்கிற்கான குறியீடுகள் என்பது கவனத்தில் கொள்ளத் தக்கது.

# தகடூர் குறும்பர்களின் வழிபாடு

**ப. காசிலிங்கம், எம்.ஏ.,**
*காப்பாட்சியர்,*
*அரசு அருங்காட்சியகம்,*
**கிருஷ்ணகிரி.**

தகடூர் நாட்டில் நடுகல் வழிபாடு இன்றும் தொடர்ந்து வழக்கிலிருந்து வருகிறது. தகடூர் நாட்டில் குறும்பர்கள், நடுகல் வழிபாட்டில் அதிக அளவில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் மாவட்டத்தின் பல பகுதிகளில் இருந்தாலும், அதிக அளவில் பிக்கன ஹள்ளி, சோமவார்பேட்டை (கிருஷ்ணகிரி வட்டம்) ஆகிய இடங்களில் மட்டுமே உள்ளனர். ஏனைய இடங்களில் ஒன்றிரண்டு குடும்பங்களே உள்ளன.

***வகைகள்***

இக்குறும்பர்களிலே 12 வகையினர் உள்ளனர். 1. குடுவைக் குறும்பர், 2. புனாய்க் குறும்பர், 3. அண்டக் குறும்பர், 4. கம்பளிக் குறும்பர், 5. வெள்ளைக் குறும்பர், 6. முரசுக் குறும்பர், 7. கறுப்புக் குறும்பர் போன்ற பல வகையாம். அக்காலத்தில், இவர்கள் தங்கள் தங்கள் இனங்களிலேதான் பெண் எடுத்தல், கொடுக்கல், வாங்கலில் ஈடுபட்டு வந்தனர். காலப் போக்கில் அது மறைந்து தற்சமயம் எல்லாப் பிரிவினரிடையேயும்

கலப்பினமாக, எல்லாக் காரியங்களையும் செய்து வருகின்றனர்.

### தொழில்கள்

இக்குறும்பர்கள் பெரும்பாலும் ஆடுமாடுகளை மேய்த்தும், பயிர்த் தொழில் செய்தும், வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் ஆந்திரா, கர்நாடகம், கேரளா ஆகிய மாநிலங்களிலும் வாழ்கின்றனர்.

### தெய்வ வழிபாடு

இக்குறும்பர்களின் தெய்வங்கள், வீரபத்திரன், பீரப்பா, சாமண்ணன், மல்லண்ணன், சித்தப்பன், பக்தியம்மா, நாகம்மா, நூறந்தம்மா (நூறு பெண்களைப் பெற்றவள்) எனப் பலவகையாகும். இவர்கள் தங்கள் தெய்வங்களை வணங்கிடும் முறையை, தம்பிரான் சாமி கும்பிடுவது எனச் சொல் வழக்கில் கூறிவருகிறார்கள். இவர்கள் மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை சுற்றத்தாருடனும், மற்றும் உற்றார் உறவினர்களை அழைத்தும், மிகவும் சிறப்பாக வழிபாடு செய்கின்றனர். ஆடி பதினெட்டின்போது இவர்கள் சிறப்பு வழிபாடு செய்வார்களாம்.

இவர்கள் தங்கள் தெய்வங்களை செப்பு படிமங்களில் செய்து வைத்து வழிபாடு செய்கின்றனர். விசேட நேரங்களில் தங்கள் தலையில் 100 முதல் 200

தேங்காய்களைக் கூட உடைத்துக் காட்டுவார்களாம். தெய்வங்களுக்கு படைக்கும் பொழுது தேங்காய், பழம், பால், நெய் இவைகளைக் கொண்டு நிவேத்தியம் செய்வர். சிக்கண்ணா என்ற தெய்வத்திற்கு மட்டும் ஆடு, பன்றி, கோழி ஆகியவற்றைப் பலியிட்டு முப்பூசை செய்வார்கள். பலியிடும் ஆடு பிரசவமாய்க் குட்டியுடன் இருக்க வேண்டும். இதைத்தான் பலியிடுவார்களாம்.

இவ்விதம் வளர்ந்த நடுகல் வழிபாடு, நடுகல்லில் தெய்வம் உறைகிறது என்ற நம்பிக்கையை படிப்படியாக வளர்த்தது. சமுதாயத்தின் வளர்ந்த நிலையில் உள்ள மக்களிடத்தில் சிவன், திருமால் போன்ற கடவுள் வணக்கங்கள் தோன்றிய பின்னரும், நாட்டுப்புற பொது மக்கள் மத்தியில் நடுகல் வணக்க முறையே பரவியிருந்ததை 'செங்கம் நடுகற்கள்' தெரிவிக்கிறது. தருமபுரி, வடஆற்காடு, மாவட்டங்களில் வேடியப்பன் என்ற பெயரிலும், வேறு சில தெய்வங்கள் பெயரிலும் இன்றும் வணங்கப் படுவதைக் காணமுடிகிறது.

# அரூர் வட்டத்தில் தாய் தெய்வங்கள்

இரா. சிசுபாலன்

அரூர் வட்டத்தில் கிராமத்திற்கு ஒன்று என ஏராளமானத் தாய்தெய்வங்கள் வழிபடப்பட்டு வருகின்றன. கிராம மக்கள் அனைவருக்கும் பொதுவான மாரியம்மன் மட்டுமல்லாது, சில குறிப்பிட்ட சாதியினர், சில குறிப்பிட்ட 'கிளை' யினர் வழிபடும் ,தாய் தெய்வங்களும் பல இங்குண்டு. இவற்றில் சில தாய் தெய்வங்கள், அவைகள் குறித்து வழங்கப்படும் கதைகள் - கொண்டாடும் முறைகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

*காணியம்மன்*

இது கரூர் வட்டம் இருளப்பட்டி பகுதியில் உள்ளது. இவ்வூருக்கு தெற்கே வசித்துவந்த ஒரு குடும்பத்தினர் தங்கள் குடும்பப் பெண் குழந்தை ஒன்று, நோய் வாய்ப்பட்டுக் கிடந்தபோது மருத்துவம் பார்க்க வாணியம்பாடிக்கு எடுத்துச் சென்றனராம். செல்லும் வழியில் அக்குழந்தை இறந்துவிடவே, அதை திருப்பி எடுத்து வந்து பாப்பம்பாடி என்ற இடத்தில் புதைத்துவிட்டு செல்கின்றனர். அவ்விடம் சோலைவனமாக ஆகிறது..

ஒரு இருளனும், இருளச்சியும், காட்டு

வள்ளிக்கிழங்கு தோண்ட அவ்வழியே செல்கின்றனர். அக்குழந்தையை புதைத்த இடத்தில் ஒரு பெரிய காட்டு வள்ளிக் கிழங்கு செடி காணப்படுகிறது. இருளன் அக்கிழங்கை தோண்டிப் பார்த்தபொழுது, அது இதுவரை கண்டிராத அளவுக்கு மிகவும் பெரியதாகவும், நீளமாகவும் இருந்தது. உடனே இருளன் கிழங்கின் மேல் பாகத்தை வெட்டிப் பார்த்தபொழுது, வெட்டிய பகுதியிலிருந்து ரத்தம் பீறிட்டுக் கொண்டு, அந்தக் குழியை நிரப்பியதாம். அதனைக் கண்டு பயந்த இருளன் அருகிலுள்ள ஊர் பொதுமக்களிடம் சென்று இதனைச் சொல்லுகின்றான். அனைவரும் வந்து பார்த்தபொழுது அந்த இரத்தத்தில் ஒரு குழந்தையின் முகம் தெரிந்ததாம். அப்பொழுது அக்குழந்தை நடந்த நிகழ்ச்சிகளைக் கூறி, எனக்கு இவ்விடத்தில் கோயில் அமைத்து பூஜித்தால் நல்லது நடக்கும் என்று சொல்லி மறைந்ததாம்.

கான் அம்மன் என்றது தான் காணியம்மனாக மாறியதாகவும், இது ஒரு இஸ்லாம் பெண்ணைக் குறிப்பதாகவும், வாணியம்பாடியிலிருந்து இங்கு வந்ததாகவும் மற்றொரு கருத்தும் உண்டு. ஆனால், இது இஸ்லாமியர்களால் கொண்டாடப் படுவதில்லை.

காணியம்மன் செய்தால் காலையில் புதுவெள்ளம் வரும்; அந்நீரில்தான், பொங்கல் வைப்பார்கள் என்ற ஐதீகம் உள்ளது. 7 ஆண்டுகளுக்கு ஒரு முறை, 'சிறப்பு'

கொண்டாடப்படுகிறது. இபபகுதி மக்கள். ஆண்டிற்கு ஒரு முறை விழா கொண்டாடினாலும். இதனை குலதெய்வமாக வணங்குகின்ற பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த ‘குடியார்கள்’ அல்லது ‘கிளையர்கள்’ 7 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒன்றாக கூடி பொங்கலிட்டு, தேர்த் திருவிழா கொண்டாடுவதைத்தான் ‘சிறப்பு’ கொண்டாடுதல் என்கிறார்கள். அப்போது ஆடு, கோழி பலியிடப்படும். இதனைக் கொண்டாடும் குடும்பங்களைச் சேர்ந்தோர் தங்களின் குழந்தைகளுக்கு கானன், கானி என பெயர் வைக்கின்றனர்.

*நல்லியம்மன்*

அரூர் வட்டம் எம். வெலாம்பட்டியை சேர்ந்த ஒருவர், தன் இரு பெண்பிள்ளைகளை அழைத்துக் கொண்டு அருகிலுள்ள ஆட்டையான்குட்டை ஏரிக்கரையில் விறகு வெட்டச் சென்றாராம். சின்னநல்லி, பெரிய நல்லி என்றழைக்கப்படுகின்ற அக்குழந்தைகள், ஏரியில் விளையாடிக் கொண்டிருந்தபோது, ஏரி கோடிக்கு பின்புறமிருந்த தந்தை அக்குழந்தைகளை அழைத்தாராம். அப்பாவின்குரல் ஏரி மதகுகளிலிருந்து ஒலிப்பதுபோல கேட்டதால், குழந்தைகள் ஓடி மதகு ஒன்றில் நுழைந்து கொண்டனவாம். உள்ளே நுழைந்த குழந்தைகள்,

மீண்டும் வெளியே வராமல் அங்கேயே சமாதி ஆகிவிட்டனவாம்.

இந்த ஏரிக்கு அருகிலுள்ள ஒரு பெரிய பாறை மீதுதான் வணங்குமிடம் உள்ளது. இங்கே ஒரு சுனை உள்ளது. எத்தகைய வறட்சி காலத்திலும், இச்சுனை வற்றியதாகத் தெரியவில்லை. இந்நீரைப் புனித நீராக மக்கள் எடுத்துச் செல்கின்றனர்.

ஆரம்பகாலங்களில் ஆண்டிற்கு ஒரு முறை கொண்டாடப்பட்டு வந்த விழா, நாளடைவில் 7 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடுவதாக மாறிவிட்டது. மக்களின் பொருளாதார காரணங்கள் இதற்கு அடிப்படையாக இருக்கலாம்.

விழா கொண்டாடும்பொழுது, ஆட்டையான் குட்டை ஏரி மதகு அருகில் பச்சை பந்தல் போட்டு, கரகம் அமைத்து, அங்கிருந்து சுனை பாறை வரைக்கும் ஊர்வலமாக எடுத்து வருகின்றனர். ஆடு பலியிடுதல் நடைபெறுகிறது.

குழந்தை இல்லாதவர்கள் இத்தெய்வத்தை வணங்கினால், குழந்தை பிறக்கும் என்ற ஐதீகம் உள்ளது. இக்குடியில் பிறந்த முதல் குழந்தை ஆண் எனில் நல்லான், பெண் எனில் நல்லி என்றும் பெயர்

கூட்டுகின்றனர். கொங்கு வேளாள சமூகத்தை சேர்ந்தவர்கள் இதனைக் கொண்டாடுகின்றனர்.

*சாக்கனாய்ச்சி அம்மன்*

மொரப்பூருக்கு அருகிலுள்ள எலவடை கிராமத்தில், இத்தாய் தெய்வம் உள்ளது. ஒரு காலத்தில் இப்பகுதி மக்கள் கொடிய வறுமையால் அல்லல்பட்ட போது, அதியமான் கோட்டையில் இருந்த ஒரு கோயிலை கொள்ளையடிக்க சென்றிருக்கின்றனர். அங்கிருந்த கனமான ஒரு மூடிய பேழையை திருடிக்கொண்டு வந்துவிட்டனர். வரும்வழியில் பேழையின் கனம் தாங்காமல், மொரப்பூருக்கு அருகிலுள்ள தாளமடுவு என்ற இடத்தில் இறக்கி, பேழையை திறந்து பார்த்திருக்கின்றனர். உள்ளே அம்மிக்கல்தான் இருந்ததாம். உடனே அதனை வீசி எறிந்துவிட்டு, ஊருக்கு சென்றிருக்கின்றனர். செல்லும் வழியில் ஓலமிடுவது என்ற இடத்தில், அக்கல் இவர்களுக்கு முன்னதாக அங்கு இருந்ததாம். அந்த மகிமையை புரியாத அம்மக்கள், அதனை மீண்டும் எடுத்துச் சென்று எலவடையில் உள்ள முதலியார் ஒருவர் வசம், நடந்ததைச் சொல்லி அந்த மகிமைவாய்ந்த கல்லை ஒப்படைத்துவிட்டு, தங்களுக்கு வேண்டிய உணவு பண்டங்களை வாங்கிச் சென்றிருக்கின்றனர். முதலியார் அக்கல்லைத் தனது வைக்கோல் போரில் மறைத்து

வைத்தாராம். உடனே அப்போர் எரிந்து சாம்பலாகிவிட்டதாம். இதனைக் கண்டு பயந்த முதலியார், அக்கல்லை மீண்டும் எடுத்து அதனைக் கொண்டுவந்து தாழ்த்தப்பட்ட சமூகத்தினரிடமே திருப்பித் தந்துவிட்டிருக்கிறார்.

ஊருக்கு ஒதுக்குபுறத்தில் வைத்து இதனைக் கொண்டாடி வருகின்றனர். இதனை பூஜிக்கும் இரு பூஜாரிகள் தவிர, வேறு யாருமே சாமியை பார்க்கக் கூடாதாம். முதலில் பார்த்த சிலரின் கண்கள் மங்கிப் போய்விட்டதாம்.

ஆரம்பத்தில் ஆண்டிற்கு ஒரு முறை கொண்டாடி வந்த நிலைமாறி, 3 ஆண்டுகள் என்றிருந்தது, தற்போது 7 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில், சுமார் 200 கிரர்மங்களைச் சேர்ந்த மக்கள் பங்கேற்கின்றனர். இவ்விழா ஒரு வாரகாலம் நடைபெறுகிறது. கரகம் எடுக்கும் இறுதிநாளன்று, கட்டாயம் மழை வரும் என்றொரு ஐதீகம் உண்டு. கரகம் எடுக்கும் நாளில் 7 ஆட்டுக்கிடாய் பலியிடுகின்றனர். இத்தெய்வத்திற்கு நெய் பந்தம்தான் பிடிக்க வேண்டும். பாவாடைமேல்தான் கரகம் எடுப்பவர் நடந்து வருவார். சிலம்பு,உடுக்கை, பம்பை ஆட்டங்கள் உண்டு. ஆயிரக்கணக்கில் கத்தி, வேல் இவைகளை, தங்கள் கோரிக்கை

நிறைவேறியதற்குக் காணிக்கையாக வைக்கின்றனர். தீட்டுப்பட்டவர்கள் இங்கு வரக்கூடாது.

இவ்விழா கொண்டாடப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்போ அல்லது விழா முடிந்து மூன்று மாதங்கள் கழித்தோதான் இவ்வூரில் திருமணங்கள் நடைபெறுகின்றன.

இத்தெய்வம் தாழ்த்தப்பட்ட மக்களால்தான் கொண்டாடப்படுகிறது. ஆனால் கொங்கு வேளாள கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து, தாலியும், கூரைபட்டும் சீர்கொண்டு வந்த பிறகுதான் கரகம் எடுக்கப்படுகிறது. இரு சமூகங்களும் ஒருங்கிணைந்து வாழ்வதன் அவசியத்தை வலியுறுத்த, இதுபோன்ற வழக்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம். சாக்கனாய்ச்சி அம்மன் பிறந்த இடம் கவுண்டர்கள் சமூகத்தில் என்றும், அதனால்தான் அவர்கள் சீர் செய்கின்றனர் என்றும் ஒரு கருத்து உண்டு. கணவன் வீட்டிலிருந்து தான் தாலி கொண்டு வரப்படும் வழக்கம் உள்ளதால், இப்பெண் பிறந்த இடம் குறித்த தகவல் ஏற்புடையதாக இல்லை.

இதனை கொண்டாடுபவர்கள் சாக்கன், சாக்கி எனப் பெயர் வைக்கின்றனர்.

### *தீ பாஞ்சி அம்மன்*

மொரப்பூர், வேப்பிலைப்பட்டி போன்ற ஊர்களில்

உள்ள சுடுகாட்டில்தான் இத்தெய்வம் உள்ளது. தீ பாய்ச்சி அம்மன்தான் தீபாஞ்சி அம்மன் என்று ஆனது. கணவன் இறந்தபிறகு, மனைவியும் உடன்கட்டை ஏறும் வழக்கம் இங்கும் இருந்ததை உறுதிப்படுத்தும் வகையிலேயே இத்தெய்வங்கள் உள்ளன. ஆதிதிராவிட சமூகத்தை சேர்ந்தவர்கள் மட்டுமே, இதனைக் கொண்டாடுகின்றனர். கணவனால் கைவிடப்பட்ட பெண், தன் தாய் வீடு வந்து தீயில் விழுந்து எரிந்துவிட்டதைத்தான் கொண்டாடுவதாகவும் ஒரு செய்தி உள்ளது. ஊரடங்கிய பிறகுதான் கரகம் எடுத்து விழா கொண்டாடப்படுகிறது. உப்பில்லாத அரிசி மாவில் நெய் பலகாரம் செய்து படைக்கப்படுகிறது. ஆடு பலியிடல் உண்டு.

### *சூனியக்காரி அம்மன்*

தென்பெண்ணை ஆற்றின் தென்கரையில் கோமாளிப்பட்டி என்கிற கடமை கோவில்பட்டிக்கு அருகில் இக்கோயில் உள்ளது. இதனை வணங்கினால். எருமைமாடு கன்று ஈனும்; நல்ல வலிமையான பால் கறக்கும் என்ற ஐதீகம் உண்டு. பொங்கல் சமயத்தில் இறுதி நாளன்று மாவிளக்கு வைத்து பொங்கலிட்டு, ஆடு கோழி பலியிடுகின்றனர்.

இவை தவிர எழிலியம்மன்(மாம்பட்டி), மாரக்காசெல்லி (தாமலேரிப்பட்டி), சென்னம்மா

(நீப்பத்துறை), பூங்காவனத்தம்மா(சாமாண்ட அள்ளி), (முத்துமாரியம்மா(ஆலமரத்துப்பட்டி), வெள்ளையம்மா(கடத்தூர்), பூனாசி அம்மன், செங்கல் நாய்ச்சி அம்மன், பிடாரி அம்மன், பட்டாளம்மன், சின்னம்மா போன்ற பல தாய் தெய்வங்களும் அரூர் வட்டத்தில் காணப்படுகின்றன.

இவை ஒவ்வொன்றின் தோற்றத்திற்கும், ஒவ்வொரு வரலாற்றுக் கதை சொல்லப்படுகிறது. இவைகளைக் கொண்டாடும் முறைகளில் பல பொதுத் தன்மைகள் காணப்படுகிறது. பெரும்பாலான விழாக்கள், விவசாயிகள் விதைப்புக் காலங்களில் நடைபெறுகின்றன. சில இடங்களில், அறுவடை விழாவாகவும் கொண்டாடப்படுகின்றது. இத்தாய் தெய்வங்களைக் கொண்டாடினால் மழை வரும் என்றும், விளைச்சல் பெருகும் என்ற நம்பிக்கைகளும் மக்களிடம் காணப்படுகின்றன. இனக்குழு வாழ்க்கை முறையில் தொடர்ச்சியாகவே தாய் தெய்வ வழிபாடுகளும், விழா கொண்டாடும் முறைகளும் உள்ளன.

நிலவுடைமைக்காரர்களான உயர் சாதியினருக்கும், அந்நிலத்தில் விவசாயக் கூலித் தொழிலாளர்களாக உற்பத்தியில் ஈடுபடும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமையின் தேவையை வலியுறுத்த, வேறுபட்ட சமூகக் குழுக்களுக்கிடையே,

ஒருங்கிணைந்த விழா கொண்டாட்டங்களும் இங்கு காணப்படுகின்றன.

மேலே குறிப்பிடப்பட்ட தாய் தெய்வங்கள் அனைத்தும், மழை வேண்டியும், நல்ல விளைச்சல் வேண்டியும் கொண்டாடப்படுகின்றன. இனக்குழு வேளாண்மை உருவான காலத்தில், வளமை வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட தாய் தெய்வ வணக்கம் உலகெங்கும் காணப்பட்டது. தர்மபுரி மாவட்டத்தின் அரூர் வட்டத்தில் காணப்படும் தாய் தெய்வங்கள், பெருங் கற்கால தொன்மையுடையது என்பதில் சந்தேகமில்லை.

# தகடூர் நாட்டில் முனியப்பன் வழிபாடு

## மு. மாணிக்கம், எம், ஏ,பி.எட்.,

*செயலர்,*

*தகடூர் மாவட்ட வரலாற்று பேரவை.*

சேலம் - தருமபுரி மாவட்டங்களில், முனியப்பன் வழிபாடு மிகப்பரவலாக காணப்படுகிறது. முனியப்பன் கிராம மக்களின் காவல் தெய்வமாகவும், வளமை தரும் தெய்வமாகவும், பல்லாயிரக் கணக்கான மக்களால் வழிப்படப்பட்டு வருகிறது. தென் மாவட்டங்களில் காணப்படும் ஐயனார் வழிபாடே, சேலம், தருமபுரி மாவட்டங்களில் முனியப்பன் வழிபாடு எனக்கொள்ள இடமிருக்கிறது. ஆனால், ஐயனார் வழிபாட்டில், பலியிடுதல் நிறுத்தப்பட்டு, பிராமணர்கள் கூட சில இடங்களில் பூசாரிகளாக ஆக்கப்பட்டு விட்டனர். முனியப்பன் வழிபாடு இத்தகைய மாற்றங்கள் எதையும் பெறவில்லை.

### *தொன்மை வழிபாடு*

ஐயனார் வழிபாடு, முனியப்பன் வழிபாடு இரண்டுமே வரலாற்றுத் தொன்மைமிகுந்தவை. புறப் பொருள் வெண்பாமாலை பாடிய புலவர் பெயர் ஐயராதனார் என்று இருப்பது கவனிப்பதற்குரியது. மலையும் காடும் நிறைந்த பகுதிகளில் இந்த வழிபாடு

மிகுந்திருந்தது. கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஐயனார்சிலை ஒன்று, செங்கல்பட்டு மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. அந்த ஐயனார், நாயுடன் அமர்ந்திருக்கும் நிலையில் உள்ளது. ஐயனார் வழிபாட்டின் தொடர்ச்சியாகவே, முனியப்பன் வழிபாடு, சேலம் தருமபுரி மாவட்டங்களில் திகழ்கிறது.

*முனியப்பன் வழிபாடு*

தர்மபுரி மாவட்டத்தில் முனியப்பன் கிராம மக்களின் முக்கிய வழி பாடாகும். பிளியனூர் அக்ராஹாரம் முனியப்பன், நாகதாசம்பட்டி முனியப்பன், ஏறுபள்ளி முனியப்பன், கோணங்கி அள்ளி முனியப்பன், தொப்பூர் முனியப்பன், பழைய தர்மபுரி முனியப்பன் போன்றவை மிகவும் புகழ் பெற்றவையாகும்.

*முனியப்பன் - உருவ அமைப்பு*

பொதுவாக முனியப்பன் சிலைகள் ஊருக்கு ஒதுக்குப்புறமாக, ஒரு மரத்தடியில் அமைக்கப் பட்டிருக்கிறது. வலுவான பீடத்தின் மீது அமர்ந்து நிலையில், பெரிய மீசை, உருட்டும் கண்கள், கையில் பெரிய கத்தி ஆகிய அச்சம் தரும் தோற்றத்தோடு, சுதையால் செய்யப்பட்டிருக்கும் முனியப்பன், முன்பெல்லாம் மண்ணால் செய்து சுடப்பட்ட நிலையில் இருந்திருக்கிறது. முனியப்பன் சிலை அருகே, இரண்டு

அல்லது அதற்கு மேற்பட்ட சுடுமண் குதிரை பொம்மைகள் நிறுத்தப்பட்டிருக்கும். முனியப்பன் காலடியில் நாய், புற்று, பாம்பு போன்றவை வடிக்கப்பட்டிருக்கும். முனியப்பன் சிலைக்கு முன்னுள்ள பீடத்தில் இரும்பு ஆயுதங்கள் நடப்பட்டிருக்கின்றன. இவை முனியப்பனை காவல் தெய்வமாகவே காட்டுகின்றன.

## *தெய்வீக கதை*

முனியப்பனுக்கு தனியே தெய்வீகக் கதை எதுவுமில்லை. பெங்களூர் மாவட்டத்தில் வழிபடப்படும் முனியப்பன், காளியின் தம்பியாக சொல்லப்படுகிறார். தக்கயாக பரணி எழுதிய ஒட்டக்கூத்தர், காளியின் மகன் சாத்தனுக்கு, மாமிசமும், கள்ளும் படைக்கப்பட்டதைக் காட்டுகிறார். பொதுவாக, காளியோடு இணைந்து பேசப்படும் காவல் தெய்வமாக முனியப்பன் வழிபடப்படுகிறார். முனியப்பன் தனியாகவே சிலை வடித்துகாட்டப்படுகிறார். பெண் துணையோடு கூடிய முனியப்பன் எதுவுமில்லை.

## *குலதெய்வம்*

முனியப்பனை குலதெய்வமாக வழிபடுவோரும் உண்டு. குடும்பத்தில் நடைபெறும் எந்த நிகழ்ச்சியையும் முனியப்பனை வழிபட்டே தொடங்குவர். முனியன்,

முனியப்பன், முனிசாமி என பெயர் கொண்ட பலரும், தகடூர் மாவட்டத்தில் உண்டு. விதைத்தல், அறுத்தல் போன்றவைகளை தொடங்கும் முன், முனியப்பனுக்கு ஆடு பலியிட்டு தொடங்கினால், நல்ல விளைச்சல் வரும் என்ற நம்பிக்கை பரவலாக காணப்படுகிறது. இந்த வகையில் முனியப்பன் வளமை தெய்வமாகவும் கொண்டாடப் படுகிறார்.

*வழிபாடு*

பிளியனூர் அக்ராஹாரம் முனியப்பன் திருவிழா, கார்த்திகை மாதம், இரண்டாவது செவ்வாய் கிழமை இரவில் கொண்டாடப்படுகிறது. பாடி ஏர்ரள்ளி முனியப்பனுக்கு, ஆடிமாதம் ,செவ்வாய் கிழமை அன்று வழிபாடு நடத்தப்படுகிறது. பழங்கால மக்கள் வழிபாட்டில் ஒன்றான, நடுகல் வழிபாட்டின்போது செய்யப்படும் அத்துணை வழிபாட்டு சடங்குகளும், முனியப்பன் வழிபாட்டில் கடைப் பிடிக்கப்படுகின்றன. ஆடு, கோழி, பலியிடுதல், பொங்கலிடுதல், பேய் பிடித்த பெண்களுக்கு சாட்டைபோடுதல் போன்ற வழிபாட்டு முறைகள் கடைப்பிடிக்கப் படுகின்றன.

முன்பெல்லாம் இரவில் மட்டுமே நடைபெற்று வந்த வழிபாடு, தற்போது பகலில் நடத்தப்படுகிறது. அமாவாசை நாட்களிலும், செவ்வாய் கிழமை இரவு காலத்திலும் நடைபெறும் முனியப்பன் வழிபாட்டில்,

வளமை வழிபாட்டுக் கூறுகள் மிகுதியும் காணப்படுகின்றன. பொங்கலிட்ட சோறு, ரத்தத்துடன் கலந்து பலிச் - சோறாக எட்டுத்திக்குகளிலும் வீசி எறியப்படும். இதனால் தீமை அழிந்து, வளமை பெருகும் என்ற நம்பிக்கையை மக்கள் பெறுகின்றனர்.

பல ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும், முனியப்பன் வழிபாட்டில் கலந்து கொள்கின்றனர். பூசாரி பிராமணரல்லாதவர். வழிபாட்டின்போது பேயோட்டுதல், வாக்குசொல்லுதல், பலியிடுதல், பெண்கள் - பொங்கலிடுதல், குழந்தைகளுக்கு பெயரிடுதல் போன்றவை உண்டு. மாமிசமும், கள்ளும் முனியப்பனின் பூசைக்குரியவையாக வைக்கப்படுகின்றன.

*சமணத் தொடர்பு*

முனியப்பன் ஆயுதம் தரித்து நிற்கும் காவல் தெய்வமாகவே இருந்தாலும், தருமபுரி மாவட்டத்தில் முனியப்பன் வழிபாட்டில் சமணத் தொடர்பு இருப்பதைத் தெளிவாகக் காண முடியும். பாலக்கோடு அருகே உள்ள கரதாரப்பட்டி முனியப்பன், பனைகுளத்து பள்ளியைச் சார்ந்த ஒருவர், உண்ணாநோன்பு இருந்து மாண்டதை அறிவிக்கும் சமண கல்வெட்டு (நடுகல்) மீது காட்டப்பட்டுள்ளது.

பிளியனூர் அக்ராஹாரம் முனியப்பன் வலுவான

சமணத் தொடர்பை கொண்டது. முனியப்பன் கோயிலில் இருந்து, அந்த முனியப்பனுக்குச் சொந்தமான குடும்பத்தார் ஒரு பெட்டியை, குதிரை மீது வைத்து, அதனை அழைத்துக்கொண்டு, அக்ராஹாரம் அருகே உள்ள தாசம்பட்டி என்ற மலைகிராமம் இருக்கும் திசை நோக்கித் திருப்பி நிறுத்தி முனியப்பனை அழைப்பார்கள். தாசம்பட்டி என்ற மலை கிராமத்தில், சமணப்படுகைகள் நிறைந்த குகைகள் உள்ளன. முனியப்பனை அழைத்ததும் முனியப்பன் அந்த குதிரை மீது அமர்ந்து, முனியப்பன் சிலைக்கருகே குதிரையை கொண்டு வந்து நிறுத்துவார்கள். தாசம்பட்டியில் இருந்து வந்த முனியப்பன், அந்த நிலைக்குள் சென்று விடுவதாக மக்கள் நம்பிக்கை. பிறகு, பூசாரி வாக்கு சொல்லுவதாலும், பலியிடலும், பிற சடங்குகளும் தொடரும்.

இவை முனியப்பன் வழிபாட்டில் உள்ள சமணத் தொடர்பைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. முனியப்பன் வழிபாட்டின் சமண தொடர்பை, விரிவாக ஆராய வேண்டும்.

*முடிவுரை*

முடிவாக சில அம்சங்களைத் தொகுத்துரைக்கலாம்.

1. முனியப்பன் வழிபாடு, ஐயனார் வழிபாட்டின் பகுதியாக இருந்தாலும், வேறுபாடுகளைக் கொண்டது.

2. முனியப்பன் வழிபாடு, இயற்கை பாதிப்புகளில் இருந்தும், தீமைகளில் இருந்தும் மக்களைக் காக்கும் காவல் தெய்வமாக வழிபடப்படுகிறது.

3. முனியப்பன், காளி போன்ற தெய்வத்தின் தம்பியாக (அ) மகனாக நம்பப்படுகிறது.

4. பெரும்பாலும் குடும்ப தெய்வமாக உள்ள முனியப்பன், வலிமை அளிக்கும் ஆண் தெய்வமாகவும் உள்ளது. (பொதுவாக பெண் தெய்வங்கள் தான் வலிமை அளிக்கும் தெய்வங்களாக உள்ளன.)

5. தர்மபுரி மாவட்டத்தில் முனியப்பன் வழிபாட்டில், சமணத் தொடர்பு வலுவாக காணப்படுகிறது.

# தகடூர் நாட்டு மடாலயங்கள்

கே.எம். தட்சணாமூர்த்தி,
*பெண்ணையாறு தொல்பொருள் சங்கம்*
**காவேரிப்பட்டினம்.**

வரலாற்று நோக்கில் மடங்களின் தோற்றத்தைப் பார்த்தோமானால், அவை பௌத்த மதத்திலிருந்து ஆரம்பமாகின்றன. என்பது தெளிவாகும். பௌத்த பிக்குகள் பலர் ஒன்று கூடி, புத்தரின் தத்துவங்களையும், கொள்கைகளையும் அலசி ஆராய ஒன்று சேர்ந்த இடங்களே மடங்களாயின.

புத்த பிக்குகள் வசிக்கவும், ததாகரின் (புத்தரின்) தத்துவ விளக்கங்களை ஆராயவும், தனி இடம் தேவைப்பட்டது. ததாகரின் தத்துவங்களில் தேர்ந்த பிக்குவை, தலைவராக பிற பிக்குகள்ஏற்க, தலைமை பிக்குகள், ததாகரின் சீடர்கள், அவர் வழிவந்தோர், நாடெங்கிலும் பிரச்சாரம் செய்யச் செல்லும் பொழுது மடாலயங்களைத் தோற்றுவித்தனர். இவ்வாறே சமணப் பள்ளிகளும் பின் சைவ, வைணவ மடங்களும் உருவாயின.

இந்துமத தத்துவமான அத்வைத சித்தாந்தம் கொண்டு மறுமலர்ச்சி உண்டு பண்ணிய ஆதிசங்கரர், பாரதமெங்கும் பயணம் செய்து மடங்களை

ஏற்படுத்தினார். சங்கரரே 'பிராச்சீன் பௌத்தர்' (மறைவான பௌத்தர்) என்ற குற்றச் சாட்டுக்கு ஆளானவர். அவரே 'ஷன்மத ஸ்தாபனாச்சாரியார்' எனப்பட்டார். இராமானுஜரும், மத்வரும், சங்கரர் போன்றே தாம் கண்ட கொள்கைகளுக்கு ஏற்ப மடங்களை நிறுவினர். சிவனடியார்கள் பெயரில் தேவார திருமுறை காலத்திலிருந்து சைவ மடங்கள் தமிழ் நாட்டில் ஏற்பட்டன.

ஒவ்வொரு மதமும் தன்னுடைய ஸ்திரத்தன்மையை நிலைநாட்டிக் கொள்ள, மடங்களே பேருதவி செய்து வந்துள்ளன. ஆரம்ப நாட்களில் மதப்பிரச்சாரத்திற்காகவும், துறவிகள் வசிக்கவும் ஏற்பட்டவை, நாளடைவில் தங்கள் அலுவல்கள், அதிகாரங்களை அதிகரித்துக் கொண்டன.

சைவ மடங்கள் பல்கலை வல்ல சமயத் தலைவர்கள் ஆட்சியில் இருந்தன. இவை தலயாத்திரை செய்யும் அடியவர் தங்குமிடங்களாகவும், சித்தத்தை சிவன்பால் நிறுத்தி வீடுபேறு விரும்பிய துறவியர் தங்கும் அமைதி நிலவிய இடங்களாகவும் ,அடியார்க்குச் சமய அறவுரை போதிக்கும் சமயப் பள்ளிகளாகவும் இருந்து சைவ சமயத் தொண்டாற்றின. இம்மடங்கள் கோவிலைச் சார்ந்து, இத்தகைய தொண்டுகளில் ஈடுபட்டிருந்தமையாற்றான், சைவ சமயப் பிரச்சாரம்

பௌத்த விகாரத்தையும், சமணப் பள்ளியையும் விஞ்சி மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன என்கிறார் டாக்டர் மா. இராச மாணிக்கனார்.

சமயம் வளர்க்கும் துறையாக மடாலயங்கள் இருந்ததால், சமய வேறுபாடின்றி அரசனும் மானியங்கள் அளித்து ஆதரித்தான். சைவ மடங்கள் தமிழ் கற்பித்தும், ஞான நூல்கள் இயற்றியும் போதித்தும், தமிழ்ச் சைவப் பண்பாட்டை வளர்த்தன.

தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான் மடங்கள் பற்றிக் கூறும்பொழுது 'மடங்களின் சம்பிரதாயங்கள், நடைமுறைகள், சிஷ்யபரம்பரைகள், சில பூசைக் கிரமங்கள் முதலியன, சமயத்தின் அடிப்படையில் தமிழ்ப்பண்பாட்டை விளக்குவனவாகும். மடாலயங்களில் நிகழும் குரு பூசைகள், பட்டணப் பிரவேசம், மகேசுவரபூசை, பிரசாதம் வழங்கல், புலவர்களுடன் பேசி மகிழ்தல், இசை வளர்த்தல், வித்வான்களை ஆதரித்தல் போன்றவை, மக்களிடையே குருபக்தி, தெய்வ நம்பிக்கை, எஜமான் விசுவாசம், கலையுணர்ச்சி முதலான நற்பண்புகளை வளர்த்தன என்கிறார்.

தகடூர் நாட்டில் சைவ மடங்கள் என எழுதப் புகும்பொழுது, பெயரிலேயே மடம் எனும் சொல் தாங்கிய

பெண்ணேஸ்வர மடம் முக்கியமானதாகும். மூன்றாம் குலோத்துங்கன் காலத்தையே, பெண்ணை நாயனார் கோயிலை ஒட்டி, இம்மடம் அமைந்திருக்க வேண்டும். சேரமான் பெருமாள் மடம் என்ற அதன் பெயரை கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது. தேவாரப்பள்ளி ஒன்றை அம்மடம் நடத்தியதாகத் தெரிகிறது. கல்வெட்டு, பெண்ணை நாயனார் கோயில் கருவறைச் சுவற்றின் தெற்குப் பக்கம், தமிழில் எழுதப்பட்டுள்ளது. 'சேரமான் பெருமாள் மடத்துக்கு மடப்புறம் ஆக ..... ஏரிகீழ் நிலம் .....' என வருகிறது. மானியங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். சேரமான் பெருமாய் சுந்தரரின் உற்ற தோழர். நாராயணச் சம்புவரையரது காஞ்சிக் கல்வெட்டொன்று, உடையார் ஏகம்பருக்குடைய திருத்தோப்புகளில் ஒன்று 'சேரமான் பெருமாள் திருத்தோப்பு' என்ற பெயரில் அமைந்துள்ளதைக் காட்டுகிறது. தேவார மூவருக்கும், தொகையடியாருக்கும் நாட்டில் பல்வேறு இடங்களில் மடங்கள் இருந்துள்ளன.

வீரசைவம் தோன்றிய நாட்டின் அருகே, மன்னர்கள் ஆளுகையில் சில நூற்றாண்டுகள், தகடூர் நாடு இருந்ததால் இயல்பாகவே வீரசைவமானது, தகடூர் நாட்டில் பரவியது. தகடூர் நாட்டு கும்மளாபுரம் தலைமை மடமாகும். இதன் குறிப்பிடத்தக்க மடாதிபதி ஸ்ரீமத் பிரமிளாச்சாரிய நிர்மித சூள சிம்மாசனாதீஸ்வரர் ஆவர்.

தற்பொழுது பட்டம் வகிக்கும் மடாதிபதியின் திருநாமம் ஸ்ரீலஸ்ரீ கண்டாகரண சிவாச்சாரிய ஸ்வாமிகள் என்பதாகும். இவர், பதினோராம் பட்டம் ஆவர். இம்மடம் சிவாச்சாரத்தார் லிங்காயத்தாருக்கு மட்டும் தான் எனப் பொதுப்படக் கூறப்பட்டாலும், நூற்றாண்டுகளுக்கு முந்தைய பழமையான ஆவணங்களை பரிசோதித்ததில், தொளுவ வேளாளர், கவுண்டர், முதலான பல ஜாதிக்காரர்களும் மடத்துக்குக் கட்டுப்பட்டவர்களாக இருந்து உள்ளனர் என்பது அறியத்தக்கதாகும். இம்மடம், விஜயநகர ஆட்சியில் கட்டப் பட்டிருக்க வேண்டும். பல நூற்றாண்டுகளாக நன்கு செயல்பாட்டில் இருந்து வருகிறது.

கும்மாளபுரம் தவிர, சிவாச்சாரத்தார்களின் பல மடங்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. தேன்கனிக் கோட்டையையடுத்த பள்ளனபுரம் மடம், ஸ்ரீஸ்ரீ பஞ்சாட்சர சிவாச்சாரிய சுவாமிகளும், நாகசந்திரம் மடத்தை ஸ்ரீ நிப்பர சித்தலிங்க சுவாமிகளும், ஓசப்புரா மடமானது ஸ்ரீ சென்ன பசவ ராஜேந்திர சுவாமிகளும், நூறொண்ண சாமி மடத்திற்கு ஸ்ரீ சதாசிவ சிவாச்சாரிய சுவாமிகளும், உருவளா மடத்திற்கு ஸ்ரீசிவசங்கர சிவாச்சாரிய சுவாமிகளும் மடாதிபதிகளாக உள்ளனர். மேற்குறித்த மடங்கள் கும்மளாபுரத்தின் கிளை மடங்களாம். இவைகளைத் தவிர பாலக்கோடு

வட்டத்தில், கோடேன ஹள்ளியிலும் சிவாச்சாரத்தார் மடம் ஒன்று உள்ளது. திரு.கேட்டள் எனும் ஆங்கிலேயர் நூறாண்டுகளுக்கு முன்னதாகவே, கும்மளாபுரம் கோயில்கள் பற்றிப் பெரு நூலொன்று எழுதி வெளியிட்டதாக அறிய முடிகிறது.

காவேரிப்பட்டணத்தில் பெண்ணை ஆற்றங் கரையில் தமிழ்ப் பிராம்மணர்களுக்கென இருந்த சங்கரமடமொன்று பாழடைந்துள்ளது. அது மட்டுமன்றி, ஆரிய வைசிய செட்டி (கோமுட்டி) களுக்கான சங்கரமடம், தேசி செட்டித் தெருவிலிருந்து குடியிருப்பாக மாற்றப்பட்டது. காவேரிப்பட்டினத்து பழைமையான மடம், ஸ்ரீ விரி காயத்ரி மடமாகும். இதன் மடாதிபதிக்கு கம்மாளர்கள் கட்டுப்பட்டவர்கள். இது, கர்நாடக மாநிலத்தின் விஜயபுரம் என்னும் ஊரினைத் தலைமையிடமாகக் கொண்டது. மிகப் பிரச்சித்தமாகக் கடந்த காலத்தில் செல்வாக்குடன் திகழ்ந்ததை அதன் பழைய ஆவணங்கள் காட்டுகின்றன. தமிழ், தெலுங்கு, கன்னடம், ஆங்கிலம் மட்டுமன்றி பாரசீக மொழியிலும் ஆவணங்கள் உண்டு. தற்போதைய மடாதிபதியின் திருநாமம், ஸ்ரீலஸ்ரீ விஸ்வகர்ம ஞானாச்சார்ய குருஸ்வாமிகள் என்பதாகும். தற்போது கிளை மடத்தையே தலைமை மடமாகக் கொண்டு தங்கி, செயல்பட்டு வருகிறார். தலைக்கட்டு வரி வசூலித்து

உயர் ஸ்தானத்தில் சகல சமய சடங்குகளையும், மேலாண் நிலையில் கட்டுப்படுத்தியிருந்த இம் மடத்தினை கம்மாளர் ஒருசிலர் ஆக்கிரமித்து உரிமை பாராட்டுவது ஒரு வரலாற்று சோகம். காவேரிப்பட்டிணத்து வேட்கோவர்களுக்கு(குலாலர்) தீர்த்தமலையில் மடம் இருந்ததாகக் காவேரிப் பட்டிணத்து செப்பேடுகளான மீனாட்சிப் பட்டயம் மற்றும் தீர்த்தகிரி பட்டயங்களிலிருந்து அறியமுடிகிறது. தீர்த்தமலையில் மட்டுமே ஜாதி வாரியாக மடங்களும் சத்திரங்களும் இருந்திருக்கின்றன. சில இன்றும் நல்ல நிலையில் செயல்படுகின்றன.

கல்வெட்டுகள் மூலம் மட்டுமே, தற்போது இல்லாத தகடூர் நாட்டுப்புற சமய மடங்கள் பற்றி அறிய இயலுகிறது. பல சமண பள்ளிகளும், மடங்களும், தகடூர் நாட்டில் இருந்துள்ளன. பொம்மிடிக்கருகேயுள்ள அதிகாரப்பட்டி-பள்ளிப்பட்டி மற்றும் ஊத்தங்கரை, பாவக்கல் ஆகிய இடங்களில் சமணப் பள்ளிகள் இருந்தனவென்று கல்வெட்டுகள் கூறுகின்றன. இவை கங்க, நுலம்ப, சோழர் காலத்தவை. கடகத்தூர் பௌத்த கற்படிமங்களுள் வியப்பை ஏற்படுத்துபவை. அவை கடகத்தூரில் பௌத்த விகாரமொன்று இருந்திருக்கும் சாத்தியம் இருப்பதாலேயே பௌத்த மடம் இருந்திருக்கும் எனக் கூறலாம்.

தாளநத்தம் கல்வெட்டு ஈசான சிவாச்சாரியர் ஒருவரைக் குறிக்கிறது. முதலாம் இராசராசர் காலத்திலிருந்து வடநாட்டிலிருந்து வந்த சிவாச்சாரியர் இராஜ குருக்களாக இருந்துள்ளனர். தர்மபுரி ஊரில் கிடைத்த, சமஸ்கிருத மற்றும் பழங் கன்னடக் கல்வெட்டுகளில் இருந்து காளமுக சைவமட்டும் இருந்துள்ளது என அறியலாம். கிருஷ்ணகிரியை அடுத்த மொட்டுக்கொளத்தான் கொட்டாயில் விஜயநகர ஆட்சியில் மடம் ஒன்று இருந்திருக்கலாம் என கல்வெட்டால் யூகிக்க முடிகிறது. இதைத் தவிர சுப்ரமணிய சிவா, பாப்பாரப்பட்டியில் ஏற்படுத்திய பாரதாசிரமும், காவேரிப் பட்டிணம் இராமகிருஷ்ண தபோவனமும், பாப்பாரப்பட்டி மற்றும் தர்மபுரி விருப்பாட்சிபுரம் முதலான ஊர்களில் உள்ள வியாசராய மடங்களும் குறிக்கத்தக்கவையாய் விளங்குகின்றன.

### மேற்பார்வை நூல்கள்


1. கல்வெட்டில் தேவார மூவர் - கே.எம். வேங்கடராமய்யா.
2. பெரிய புராண ஆராய்ச்சி - டாக்டர் மா.இராசமாணிக்கனார்.
3. ‘தமிழ்க்கோயில்கள் தமிழர் பண்பாடு‘ - . கட்டுரை - தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான்.
4. தருமபுரி கல்வெட்டும் தொகுதிகள் 1 மற்றும் 2.
5. வரலாற்றில் தகடூர் - சொ. சாந்தலிங்கம்.

# தகடூர் நாட்டில் சக்தி வழிபாடும் காவேரிப்பட்டிணத்து அங்காளம்மன் பண்டிகையும்

முு.கா. நெடுமாறன், எம்.ஏ.,
*பெண்ணையாறு தொல்பொருள் சங்கம்.*
காவேரிப்பட்டிணம்.

தொல் பழங்கால இயற்கை வழிபாடும், தாய்த் தெய்வ வழிபாடும் காலப்பரிமாணத்தில் சக்தி வழிபாடாயிற்று. தமிழர் வாழ்க்கையில் சங்கம் காட்டும் கொற்றவை, சக்தி வழிபாட்டின் பாற்பட்டது. 'காடு கிழால்' என்ற பெயரில் பாடல் போற்றும் காப்பியங்களைத் தொடர்ந்து, பரணி பாடிய சிற்றிலக்கிய காலங்களில், காளியின் போர்க்குணம் விரிவாகப் பேசப்பட்டது. கொற்றவை வெற்றியின் கடவுளாக குறியீடாக்கினர். அசுரர் அனுப்பிய பாம்பு, தேள் முதலானவற்றை மரக்காலாட்டம் ஆடி, கொற்றவை துவம்சம் செய்தாளாம். தொல்காப்பியம் கொற்றவை நிலை என்றே சுட்டும். கொற்றம் என்றால் வெற்றி. அவ்வை என்றால் தாய். துயரணுகாது தாயினைப் போலிருந்து காப்பாள் கொற்றவை.

சிந்து சமவெளி காலத்திலிருந்தே தாய்த் தெய்வ வழிபாடு இருந்தது என அறிகிறோம். இளங்கோ அடிகளோ.,

'பவள வாய்ச்சி, தவளவாள் நகைச்சி
நஞ்சு உண்டு கறுத்த கண்டி ; வெஞ்சினத்து
அரவு நாண் பூட்டி, நெடுமலை வளைத்தோள்....
வளையுடைக்கையில் சூலம் ஏந்தி ;
கரியின் உரிவை போர்த்து, அணங்கு ஆகிய
அரியின் உரிவை மேகலை யாட்டி....
பலர் தொழும் அமரி, குமரி, கவுரி, சமரி,
சூலி, நீலி, மாலவற்கு இளங்கிளை
ஐயை, செய்யவள், வெய்யவாள் தடக்கை;
பாய்கலைப் பாவை, பைந்தொடிப் பாவை,
ஆய்கலைப் பாவை, அருங்கலப் பாவை'

என சிலம்பில் துதிப்பார். புறநானூறு 'அணங்குடை முன்றில்' எனக் காட்டும். கொற்றவை நஞ்சுண்டும் சாகாதவள்; எல்லாம் உணர்ந்தவள்; பெரும் காட்டில் வாழ்பவள்; பேய்க்கணங்கள் உடையவள்; கையில் காப்பு நூல் கட்டி. நோன்பிருந்து அவளை வழிபடுவர். பிரிந்தவர் கூட. மீளப் பிரியாதிருக்க வேண்டி வணங்குவர். பழந்தமிழ்க் கொற்றவை வழிபாடே, சக்தி வழிபாட்டினைச் சேர்ந்தது.

தகடூர் நாட்டு தீர்த்த மலையில் உள்ள ஒரு துர்க்கைச் சிற்பம், சிறப்பு வாய்ந்தது. அதில் 'ஸ்ரீபகவதி

குறுஞ்சூலி' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது எழுத்துள்ள தமிழ் நாட்டுச் சிற்பங்களுள் பழமையானதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும். இப்பகுதியிலிருந்து இதேபோன்று சிற்பமொன்று சென்னை தனியார் நிறுவனமொன்றின் வரவேற்பறைக்கு கொண்டுபோய் வைக்கப்பட்டுள்ளதென டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் எழுதியிருக்கிறார். காவல் தெய்வங்களாகக் காளியும், மாரியும் விளங்கும் ஊர்கள், தகடூரில் நிறைய உண்டு. அரிகண்டமும், நவகண்டமும் ஒரு காலத்து வழக்கமாய் இருந்தது தகடூர் நாட்டில்.

தேவர் குந்தாணியில் மொட்டை மண்டபமாய் தூண்கள் நிற்க, வெட்ட வெளியில் கிடக்கும் கொற்றவையின் அழகே அழகு. பெண்ணை நாயனார் சந்நிதிக்கு வெளியே பிராமி, சண்டி, மகேஸ்வரி, வராஹி, வைஷ்ணவி, கௌமாரி, சாமுண்டி ஆகிய சப்தமாதர்களின் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. தீர்த்த மலையில் பாறைப் பிளவிடை தெரியும் சப்தமாதர் உருவங்கள் பிரசித்தம்.

தகடூர் நாட்டில் புகழ்பெற்ற பல காளிக்கோயில்கள் மற்றும் அங்காளம்மன் கோயில்கள் உண்டு. தென்னாற்காடு மாவட்டம் மலையனூர் கிராமமே அங்காளம்மனின் பூர்வீக இருப்பிடமாகக் கூறப்படுகிறது.

அங்குள்ள கோயிலின் புற்று மண்ணை எடுத்து வந்து அமைக்கப்பட்ட கோயில்களே அதிகம்.

காவேரிப்பட்டிணம் அங்காளம்மன் கோயில், சுமார் நூற்றம்பது ஆண்டுகள் பழமையானது. கடந்த நாற்பது ஆண்டுகளாக தகடூர் நாட்டில் பெரும் கூட்டம் சேர்க்கும் திருவிழாக்களுள் இதுவும் ஒன்றாகிவிட்டது. என்பதாண்டுகளுக்கு முன்னர், காவேரிப் பட்டிணத்தில் வாழ்ந்து வந்த இருவர், கனவில் அங்காளம்மன் தோன்றி, ஊர்குப்பை கொட்டும் இடத்தில் தான் இருப்பதாகவும், தனக்கு பூஜை செய்யும்படி பணித்தாளாம். விழித்த இருவரும் விடிந்தபின் ஊர்க் குப்பையில் சென்று பார்த்தார்களாம். மலையாய் குவிந்திருந்த பெருங்குப்பை மேட்டில் இடம் தெரியாமல் வருந்தித் திரும்பியிருக்கிறார்கள். ஏதேனும் அடையாளம் காட்டும்படி வேண்டிக்கொண்டு உறங்குகையில், மீண்டும் பழைய கனவு. மறுநாள் சென்று பார்த்தபொழுது குப்பை மேட்டில் ஓரிடத்தே அலரிப்பூ கொத்தாய் பூத்திருக்கக் கண்டார்கள். அந்த இடத்தில்தான் அம்மன் இருக்கவேண்டும் என நிச்சயித்து, அங்கிருந்த குப்பைகளை அகற்ற, இப்போதுள்ள கோயிலின் குருவையும் அம்மன் மூலவியும், உற்சவ விக்கிரமும், கபாலமும் கிடைக்க, வணங்க ஆரம்பித்தனர். கோயில்

பூர்வீகத்திலே 'ஜனப்ப செட்டியார்களுடையது' எனக் கல்வெட்டொன்றின் மூலம் அறிந்தார்கள்.

மகாசிவராத்திரியன்று இரவு, மார்கண்டேயன் கூத்தும், மறுநாள் விழாவும், சிறிய அளவில் அறுபதாண்டுகளுக்கு முன் துவங்கியது. அன்று விழாவில் கலந்து கொண்டோர் நூற்றுக்கும் குறைவான பக்தர்களே. கோயிலைச் சேர்ந்த பெரியவர் ஒருவர், வேலூருக்கு பட்டு நூல்வாங்கச் சென்று, ஊர் திரும்பும் வழியில் ஓரிரவு திருப்பத்தூரில், ஒரு வீட்டின் திண்ணையில் படுத்து உறங்கியிருக்கிறார். அன்று அவருக்கு ஒரு கனவு வந்திருக்கிறது. வீட்டில் சுவர் ஒன்றில் அம்மன் விக்கிரகம் ஒன்று இருப்பதாகவும் அதனை காவேரிப்பட்டணத்தில் கொண்டு சென்று வைத்து வழிபடச் செய்யுமாறும், அம்மன் உத்தரவிட்டது. வீட்டிலிருந்து மூதாட்டியின் கனவில் தன்னை திண்ணையில் உறங்குபவர் காலையில் கேட்கும்போது மறுக்காது வழங்கும்படியும் கூறியது. அவ்வீடு ஆச்சாரி ஒருவருக்குச் சொந்தமானது. மிகவும் நலிந்து குடும்பம். காலையில் அப்பெரியார் கனவிற் கண்டவாறே கேட்க, அம்மூதாட்டியும் விக்கிரகம் இருக்குமிடம் தெரியாதெனவும், கண்டுபிடித்து எடுத்துச் செல்வதில் தனக்கு எவ்வித ஆட்சேபமும் இல்லை என்றும் கூறினாள். பூசை செய்ய ஆரம்பித்தார்கள். சமையலில்

ஈடுபட்டிருந்த பெண், தனக்கெதிரே சுவர் பெயர்ந்து விழுவதையும், விழாது ஒட்டியிருந்த சுவரில் கோணி மூட்டை ஒன்றையும் கண்டாள். அங்கிருந்து அவ்விக்கிரகம் எடுத்து வரப்பட்டது. காவேரிப்பட்டிணம் எல்லையில் முழு மரியாதைகளுடன் மேளதாளத்துடன் வணங்கி எடுத்துவரும் சமயம், ஊருக்கருகே உள்ள கதிரிபுரத்தில் வன்னியக் குடிக்குச் சொந்தமான கோயிலில் வைக்கப்பட்டிருந்தது. ஒரு விக்கிரமும், கரகங்களும் பெருஞ்சீற்றத்துடன் சாமியாடி ரகளையே உருவானதாம். அருள்வாக்காய் தன்னைக் காவேரிப்பட்டினம் கோயிலுக்கு எடுத்துச் சென்று வைத்துவிடும்படி உத்தரவானதாம். இவ்வாறாக, அங்காளம்மன் கோவிலில், ஒரே சமயத்தில் இருவிக்கிரகங்களும் உள்ளே நுழைந்தன. கோயில் மெல்ல மெல்லப் புகழ் பெறலாயிற்று.

மயான சூறை நிகழ்வுகளில், பல சாதியினர் பங்கு பெற்றுள்ளனர். ஒரே தெருவில் அந்நியோன்னியமாய் பழகியதால், கோயில் விழாவினை பங்கிட்டு கொண்டாடி வருகின்றனர். சக்தி கரகம், ஆசாரிகள் வீட்டிலிருந்து எடுத்துவர, திருப்பத்தூரிலிருந்து விக்கிரகம் எடுத்து வந்தவரின் சந்ததியினர், தாய்வீட்டுச் சீதனங்கள் என வரிசையுடன் வர, இரவு முழுக்க பெண்ணையாற்று நீரைக் கொணர்ந்து, அபிசேகம் செய்து பூசை நடக்கிறது.

அதிகாலையிலிருந்தே, சலாகைகள் குத்தி அனுப்ப ஆரம்பிக்கின்றனர். மயான சூறை ஆரம்பிக்கிறது. திருப்பத்தூரிலிருந்து கொண்டு வரப்பட்ட விக்கிரகமே மயான சூறைக்கு பூதவாகனத்தில் செல்வது. அவ்விக்கிரகத்திற்கே கல்யாண உற்சவமும் நடைபெறுகிறது. மயான சூறை முடிந்து இரவு கோயிலுக்கு வெற்றியுடன் அம்மன் திரும்புகிறாள். கற்பூர ஆரத்தி எடுத்து வணங்கு விழா தொடர்கிறது. தீக்குண்டம் மிதித்தல், கல்யாண உற்சவம் எனத் தொடர்ந்து கொடியேற்றலால் தொடங்கிய விழா, கொடியிறக்க இனிதே நிறைவுகிறது.

பழைய நாட்களில் இருந்த சடங்குகள் சம்பிரதாயங்கள் காலப்போக்கில் மாறியிருக்கின்றன. ஆண்டு வழிபாடு, மாதந்தோறும் அமாவாசைப் பூசை என விரிந்திருக்கிறது. மயானத்தில் அரக்கனுக்கு வாணியர் புதுப்பானைகளில், கள்ளும் சாராயமும் படைப்பர். இன்று அடையாளம் மட்டுமே எஞ்சியிருக்கிறது. மயான சூறையால் வேண்டும் வரம் கிடைக்கும் என ஆழமான நம்பிக்கை மக்களிடம் உள்ளது. குறிப்பாக பிள்ளை வரம் வேண்டுவோர் பற்றியது. அருணாசலப் புராணத்திலிருந்து சம்பவம் ஒன்று சம்பந்தப்படுத்தப்படுகிறது. பிள்ளையில்லாதிருந்த, வள்ளலான, மகாராசன்

காளியின் விக்கிரமொன்றை குழந்தையாய் பாவித்து சீராட்டியிருக்கையில், அவனுக்கு சந்ததி ஒன்று உண்டானதாம். புதியதில் பழைய குழந்தையை மறந்துவிட, சீற்றம் கொண்ட காளி, குழந்தையை விண்ணில் எறிந்து விட்டாளாம். வல்லாளர் தன்னை நொந்து வேண்ட, அப்பிறவியில் அவனுக்கு சந்ததி இல்லையென்றும் அருணாசலரே அவனது குமாரர் என்றும் கூறியதாம் அசரீரி. இன்றும் வல்லாளரின் திதியில், பெண்ணையாற்றுக்குச் சென்று அருணாசலர் தர்ப்பணம் விடுகிறார் என்பது நடைமுறையில் உள்ள ஒரு சடங்கு. அப்பர் பாடியது போல, 'சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம்' என்பது போல, சிறு தெய்வ அம்சங்கள் காலப்போக்கில் மாறிவிட்டன. பெருந் தெய்வங்களுக்குரிய அம்சங்கள், உள்ளூடுருவ ஆரம்பித்து விட்டன. வல்லாளன் தலையில் வந்த காளியின் உருவம்போல் முகமூடி அணிந்த இருவர் 'ஜொத்துபாப்பி' என வேடமிட்டு, மயான சூறை முடிந்த அடுத்த நாள்களில் இரவுவலம் வருகின்றனர். திருஷ்ட்டி கழிக்கவும் பிள்ளை வேண்டவும் இந்நிகழ்ச்சி நடத்தப்பெறுகிறது.

சலாகைகள் குத்துவது கடந்த நாற்பதாண்டில், பத்து இருபது பேர்களில் ஆரம்பித்து, இன்று லட்சங்களை எட்டியுள்ள ஒன்று. 'வருவான் வடிவேலன்' என்ற

திரைப்படத்திற்குப்பின், சலாகைகள் குத்தும் பிரார்த்தனையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. அந்தரத்தில் பறந்து அம்மனை வணங்கும் நிகழ்ச்சி திரைபடம் வழங்கிய கொடை. பொது மக்கள் பலவகைகளில், தம் பிரார்த்தனைகளை நிறைவு செய்கின்றனர். தீ மிதித்தலின் முன் தமிழ், தெலுங்கு, கன்னடப் பாக்கள் பாடப்பட்டு, வீரபத்திரர் குண்டத்தில் ஆவாகணம் செய்யப்பட்டு, பின்னரே தீ மிதித்தலில் அம்மனைத் தொடர்ந்து இறங்குகிறார்கள்.

பெருந்தெய்வக் கூறுகளான வசந்தோற்சவம் (மஞ்சள் நீரராட்டு) சேர, ஐந்தாண்டிற்கு முன் பிராம்மணர்கள் தாமும் கொண்டாட்டங்களில் பங்குபெற வேண்டி, கொடியேற்றத்திற்கும் சக்தி கரகத்திற்கும் இடையே, மகா சிவராத்திரி அன்று ‘கணபதி ஹோமம்’ செய்கின்றனர். மயான சூறைக்கடுத்து, மகாபிஷேகம் செய்யப்படுகிறது. கோயில் சடங்குகள் நிகழ்த்தப் பெறும் உரிமைகள் உரிய வாரிசுகளிடம், பங்கிடப்பெற்று நெகிழ ஆரம்பித்துள்ளது. வழிபாடு விழா என்ற அளவிலும் பன்முக சமூக உளவியல் காரணங்களைக் கொண்டு மட்டுமே, இன்றைய காவேரிப்பட்டினம் அங்காளம்மன் பண்டிகையையும், அதற்குக் கூடும். பல இலட்சம் மக்கள் கூட்டத்தையும் புரிந்துகொள்ள இயலும். செம்படவர் சாமி என்ற பூங்காவனத்தம்மனும், அங்காளம்மனுக்கு

இணையாக வளர ஆரம்பித்துள்ள மற்றொரு அம்மனாகும். ஒரே நாளில் இவ்விரு சாமிகளும் பெண்ணாற்றங்கரையில் மயானசூறை நிகழ்த்துகின்றன.

## மேற்பார்வை நூல்கள்

1. தொல்காப்பியம்
2. கலித்தொகை (கொற்றி - 89-8)
3. குறுந்தொகை (21:1-2)
4. சிலப்பதிகாரம்
5. தர்மபுரி கல்வெட்டுகள் - 1 மற்றும் அங்காளம்மன் பண்டிகையில், தாய்வீட்டுச் சீர் செய்யும் உரிமையைப் பரம்பரையாய்ப் பெற்ற திரு.இராமநாதன், (இந்தியன் வங்கி, அனுமந்தபுரம்) பன்னீர்செல்வம் தெரு, காவேரிப்பட்டிணம் அவர்களுடன் நடத்திய நேர்காணல்.

# தகடூர் நாட்டுச் சிறு தெய்வ வழிபாட்டில் அரியக்காள் பெரியக்காள் திருவிழா

சுகவன முருகன்,
*பெண்ணையாறு தொல்பொருள் சங்கம்,*
காவேரிப்பட்டிணம்.

பண்டைக் காலந்தொட்டு இயற்கை வழிபாட்டு மரபின் தொடர்ச்சியாகவே, சிறு தெய்வ வழிபாடு இருந்து வருகிறது. தகடூர் நாட்டில் நடுகல் வழிபாடும் சிறு தெய்வ வழிபாட்டில் உள்ளிட்டதே. கற்கால ஆயுதங்களை நட்டு வணங்கல், அவற்றிற்கு சிறு தெய்வங்களின் பெயர்களிட்டுப் போற்றல் ஆகியவை இங்கு உண்டு. இறந்தவரை இட்ட இடத்தும், ஏதேனும் ஒரு போற்றற்குரிய செயல் குறித்து உயர்ந்த இடத்தும் நட்டக் கற்கள், வேடியப்பன் கோயில்கள் என்று வணங்கப்படுகின்றன. சிறு தெய்வங்களான மாரி, சாமுண்டி, காளி ஆகியன பெண்பாற் தெய்வங்கள். வேடியப்பன் , முனியப்பன், அய்யனார் ஆகியன ஆண்பால் தெய்வங்கள். குல தெய்வங்களாகவும், ஊர்க்காவல் தெய்வங்களாகவும், சாதாரண எளிய மக்களின் நம்பிக்கைகளில், இக்கிராம தேவதைகள் உயர் இடத்தை வகிக்கின்றன. அவர்களின் நல்லன கெட்டனவற்றில் அவைகளும் பங்கு

கொள்ளுகின்றன. அமானுஷ்ய சக்திகள் நிறைந்ததாகவும் கவனக் குறைவாகவோ அல்லது அலட்சியம் காட்டும்பொழுது, தாமதமின்றித் தண்டிக்கவும் தம் சக்தியை காட்ட வல்லதாகவும் உள்ளன. சில கடுங் கோபமும், உக்கிரமும், கண்காணிப்பும் உடையவை. தம்மையன்றி வேறொன்றை வணங்கச் சகியாதவை. சில குடும்பங்களின் வழிபடு குலதெய்வங்கள், பொது வழிபாடு என பிரபலமாகிவிடுகின்றன. சில வழிபாடற்று மறைந்து விடுகின்றது. சிறு தெய்வங்களில் துர்தேவதைகள் வெகு சிலவே. ஆண் தெய்வங்களுக்குக் குறையா பராக்கிரமம் உடையவை. அதனால்தான் வள்ளலார் 'சிறு தெய்வங்களாக கண்டபோதெல்லாம் அஞ்சினேன்' என்றார் போலும்.

தகடூர் நாட்டு சிறு தெய்வங்களில் காவேரிப் பட்டிணம் அடுத்த அகரம் ஊருக்கு அருகில், பெண்ணை ஆற்றங்கரையில் மருதேரிக் கிராமத்தை ஒட்டிய தோப்பு ஒன்றில், கொண்டாடப்படும் 'அரியக்காள் பெரியக்காள்' வழிபாடு மிகப் பிரசித்தமானது.

கடத்தூர் பெரியவர், புது. பொ.வெங்கட்டராமன் அவர்கள் 'அரியக்காள் பெரியக்காள் வழிபாடு' கர்னாடக மாநிலத்திலும் உள்ளதெனவும் கூறுகிறார்.

கிருஷ்ணகிரி நகரின் ஒரு பகுதியாக உள்ள பாப்பாரப்பட்டியில் உள்ள, 18 தலைக்கட்டுகள் உடைய வன்னிய சமூகத்தின் ஒரு பிரிவு வணங்கும் தெய்வங்கள் 'அரியக்காள் பெரியக்காள்' ஆகும். ஐம்பத்தாறு ஊர்களில் பதினெட்டு தலைக்கட்டுக்கு பாத்தியப்பட்டவர்கள் வசிப்பதாகக் கூறப்படுகிறது. 'அரியக்காள் பெரியக்காள்' தெய்வ வழிபாட்டுத் திருவிழா, இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. தெலுங்கு வருடப் பிறப்பான யுகாதிக்கு முந்தைய பவுர்ணமியில், கிருஷ்ணகிரி பாப்பாரப்பட்டியைச் சார்ந்த பாரம்பரிய உரிமைப் படைத்த தலைக்கட்டுகளிலிருந்து, ஒருசிலர் பெண்ணை ஆற்றங்கரையிலிருந்து மணலை எடுத்து வந்து, பண்டிகைக் கொண்டாடும் தோப்பில் உள்ள இடத்தின் முன் பரப்பி விரதமிருந்து, வேண்டி வெளியே உறங்குவர். பரப்பிய மணலில் குதிரையின் குளம்படி (பாதம்) பதிந்திருந்தால் மட்டுமே தெய்வ சம்மதம் கிடைத்ததாகவும், அவ்வுத்தரவு பெற்று விழாவினை கொண்டாட ஏற்பாடுகளைச் செய்ய துவங்கி விடுகின்றனர். நான்கு மூட்டை அரிசி வாங்கி, பொங்கலிட்டு பாப்பாரப்பட்டி பெருமாளுக்குப் படைக்கின்றனர். தலைக்கட்டுகளுக்கு வரி வதித்து வசூலிக்கின்றனர். பாலக்கோடுக்கு அருகில் உள்ள ஓர்

ஊரில், ஒரு பெரும் பாறை ஒன்றைச் சுற்றியுள்ள, 20 வள்ளம் விளைபாடு கொண்ட நிலத்தில் விளைந்த நெல் அறுக்கப்பட்டு, அங்கேயே அப்பாறையின் மீது உலர்த்தப்பட்டு அரிசியாக்கப்படுகிறது. இதனைச் செய்பவர்கள் பதினெட்டுத் தலைக்கட்டுகளில் உள்ள திருமணமாகாத இளைஞர்களே ஆவர். அவர்களே அவ்வரிசியைத் தலைமீது சுமந்து, பண்டிகை அன்று மருதேரி வந்து சேர்வர். எட்டிப்பட்டி என்ற இடத்தில் ஓலைப் பெட்டிகளிலிருந்து தெய்வங்கள் பூசை நடத்த வரவழைக்கப்படுகின்றன. தெய்வத்தின் உத்திரவு கிடைத்ததும், பூசைப் பெட்டிகள் உள்ள ஊருக்கு முறையாகத் தெரிவித்து விடுகின்றனர். பூசைக்குத் தேவையான சாமக்கிரியைகளை அதற்கே உரிய ஒழுங்குடன் சேகரித்து வைத்துவிடுகின்றனர். பூசைப் பெட்டிகள் திருவிழா முடிந்து மறுநாளே கிளம்பிவிடுகின்றன. ஓரிரவிற்கு மேல் தங்குவதில்லை.

கூடைப்பெட்டியில் இருக்கும் விக்கிரகங்களை எவருமே பார்த்ததில்லையாம். பார்க்க முயற்சித்தவர்கள் இறந்துள்ளனர். யுகாதியை ஒட்டிய அமாவாசையில், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் இவ்வழிபாடு, மிகக் கடுமையான ஒழுங்கு நியதிகளைக் கடைப்பிடிப்பவை. விரதங்களுடன் கண்ணைக் கட்டிக்கொண்டு, பெட்டியினுள் இருக்கும்

விக்கிரகங்களுக்கு, அந்த அமாவாசை இரவில், பெண்ணாற்றில் அபிடேகம் செய்கின்றனர். தெய்வத் திருமேனிப்பெட்டி வரும் வழியில் மின் விளக்குகள் இன்றி, பலலட்ச ரூபாய்களுக்கு கற்பூர தீபம் ஏற்றிய வெளிச்சத்திலேயே நடைபெறுகிறது. பூசைகளும் தோப்பில் கண்ணைக் கட்டிக் கொண்டே நிகழ்த்தப்படுகின்றன. ஆயிரக் கணக்கில் ஆடுகள் வெட்டப்படுகின்றன. பரம்பரையாய், குலாலர் செய்து தரும் மண் குதிரைகள் நிறுத்தப்பட, நடு ஜாமத்திற்குப் பின் தோப்பிலிருந்து வெளியேற்றி விடுகின்றனர். தலைகட்டுகளுக்கு மட்டுமே, படைத்த நிணச்சோறு பங்கிட்டுத் தரப்படுகிறது. மேலும், பெண்ணாற்றில் ஆயிரக்கணக்கில் பேயோட்டும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. மறுநாள், மண் குதிரைகள் உடைந்து சிதறிக் கிடப்பது காணலாம். தெய்வத்தின் திருமேனிப் பெட்டி தன்னிருப்பிடம் சென்று விடுகிறது.

தலைக்கட்டுக் குடும்பங்களில் தலைச்சன் குழந்தைகளுக்கு அரியண்ணன், அரியப்பன், பெரியசாமி, கருப்பண்ணன், அரியக்காள், பெரியக்காள் என்றே பெயரிடுகின்றனர். வேறு தெய்வங்களுக்குப் படைக்கப்பட்ட பிரசாதங்களைக்கூட, வீட்டில் வைக்க அனுமதிப்பதில்லை. மீறினால் தெய்வக் குற்றம் ஏற்பட்டு கடுமையாக தண்டிக்கப்படுவதாக நம்புகின்றனர்.

இத்திருவிழா நினைவு தெரியாக் காலந்தொட்டு நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. பூசை நடைபெறும் இலுப்பை மரம் பலநூறு வயதுடையது எனப்படுகிறது.

அரியக்காள், பெரியக்காள், தஞ்சம்மாள், அரியண்ணன், கருப்பண்ணன் என்ற ஐந்துசாமி சிலைகளே பெட்டியில் உள்ளதாகக் கூறப்பட்டாலும் கண்டவரில்லை. அய்யனார் வழிபாட்டுடன் ஒப்புமைக்குப் பெயர்கள் மட்டுமே இருப்பினும், வழிபாட்டில் பெண் தெய்வங்களுக்கே அதிமுக்கியத்துவம் தரப்படுகிறது. போர்க் காலத்தில் ஆடவர் பங்குபெறத் தவறிய ஒரு சமயத்து, வீரமரணம் எய்திய குலப்பெண்டிரிருவரே அரியக்காள், பெரியக்காள் எனப் போற்றி வணங்கப்பட்டு வருவதாகக் கருதப்படுகிறது. குலம் காக்கும் கடவுளாகவும், அதன் நேரடிக் கண்காணிப்பில் இருப்பதாகவும், தலைக்கட்டு ஜனங்கள் நம்புகின்றனர். மாறி நடப்பவர் தெய்வங்களின் பொல்லாப்பிற்கு உடனடியாக உட்படுவது, கண்கண்ட உண்மை என்றும் கூறுகின்றனர்.

வழிபாட்டின் அதிமானுடத்தன்மையும், புதிர்களும், மானுடவியல் கோட்பாடுகளின்படி ஆய்ந்தால், ஒருவேளை விடைக் காண இயலலாம்.

தொல்லியல்
நூல் சேர்க்கை
எண். 1224

வரலாற்றுச் செம்மல், பேராசியர்
ம. இராசசேகர தங்கமணியின் பிற நூல்கள்

- முதலாம் இராசேந்திர சோழன்
- பாண்டியர் வரலாறு
- சுற்றுலாவியல்
- ரஷ்ய வலாறு
- கருவூரார் வரலாறு - ஓர் ஆய்வு
- தமிழக வரலாற்றில் புதிய ஒளி
- முத்தரையர் வரலாறு
- தாந்தோன்றி மலைத்தல வரலாறு
- ஞானவள்ளல் திருப்பதி சுவாமிகள்
- தமிழ்நாட்டுச் சுற்றுலாத்தலங்கள்
- பொதுத்துறை ஆட்சியியல் - பாகம் மூன்று
- தொல்லியல்
- கண்ணப்ப நாயனார் வரலாறு
- அருள்மிகு சௌந்திரநாயகியம்மன் வரலாறு
- தென்னிந்தியக் கலை வரலாறு
- கரூர்ப் பசுபதியீசுவரர் திருக்கோவில் தல வரலாறு
- வேட்டுவர் வீரவரலாறு
- பல்லவர் வரலாறு
- தொல்பொருள் ஆய்வும் பண்பாடும்
- தமிழக வரலாற்றில் சில புதிய செய்திகள்
- சுற்றுலாவியல் ஓர் அறிமுகம்
- நம்ம காமராசர்
- கல்வெட்டியல் (அச்சில்)
- வரலாற்றில் (அச்சில்)
- தமிழக வரலாறு (அச்சில்)